# 2025

# ප්‍රගති වාර්තාව

# முன்னேற்ற அறிக்கை

# Progress Report




වෙළෙඳ, වාණිජ, ආහාර සුරක්ෂිතතා සහ සමුපකාර සංවර්ධන අමාත්‍යාංශය

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு, மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

Ministry of Trade, Commerce, Food Security and Co-operative Development

# முன்னேற்ற அறிக்கை
# 2025

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி
அமைச்சு

இல. 492, ஆர்.ஏ..டி மெல் மாவத்த, கொழும்பு 03

**பொருளாதாரச் சமநிலை - நிலைபேறான உற்பத்தி ...**



நமது ஆட்சியின் முதலாம் ஆண்டினைப் பூர்த்தி செய்யும் இவ்வேளையில், மக்களின் அபிலாசையான "வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்பதனைக் கட்டியெழுப்பும் பயணத்தில், வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் 2025 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை குறித்த செய்தியை வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

நிறைவடைந்த ஆண்டில், அமைச்சு, நிலையான மற்றும் நியாயமான தேசிய பொருளாதாரத்தின் அடித்தளத்தை வலுப்படுத்துவதற்கு பல தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னுரிமைகளின் ஊடாக வழிநடத்தப்படும் எமது பணியின் ஒரு பகுதியாக, நியாயமான வர்த்தகத்தை ஊக்குவித்தல், உணவுப் பாதுகாப்பிற்கு பங்களித்தல், நுகர்வோர் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதார அபிவிருத்தியின் முக்கிய இயக்கியாக கூட்டுறவுத் துறையை புனரமைத்தல் ஆகியவற்றில் எமது மேலதிக அவதானத்தைச் செலுத்தியிருந்தோம்.

வர்த்தக மற்றும் வாணிபத் துறையில், உள்நாட்டு வர்த்தக சூழலை நவீனமயமாக்குதல், ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பை நெறிப்படுத்துதல் மற்றும் சந்தை வினைத்திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சி நிறுவனங்களின் வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல், உள்நாட்டுப் பெறுமதி சேகரிப்பை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட மேற்பார்வை மற்றும் செயற்படுத்தல் பொறிமுறையின் ஊடாக நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துவதற்காக, செயலற்ற நிலையில் இருந்த கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தை (CWE) தேசிய சதொச என்ற புதிய வர்த்தக நாமத்தின் ஊடாக சந்தையில் நுழைதல், லங்கா சதொசவின் போட்டித்தன்மையான சில்லறை விற்பனை வலையமைப்பை நவீனமயமாக்குதல் மற்றும் விரிவுபடுத்துதல் என்பன மேற்கொள்ளப்பட்டன.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் எமது கடமையின் முக்கிய நோக்கமாக காணப்படுகிறது. உணவுத் துறையில் தன்னிறைவை ஊக்குவித்தல், அறுவடைக்குப் பிந்திய இழப்புகளைக் குறைத்தல் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை நிலைப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட ஒரு விரிவான தேசிய உணவுப் பாதுகாப்பு உத்தியை செயல்படுத்துதல் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் பாதுகாப்பான மற்றும் நியாய விலையில் உணவு கிடைத்தலை உறுதி செய்தல் பொருட்டு உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவுகளுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்தி, நாட்டின் சகல விசேட பொருளாதார மத்திய நிலையங்களை (Dedicated Economic Centers) ஒரே நிர்வாக கட்டமைப்பிற்குள் கொண்டு வந்து அவற்றை பூர்த்தி செய்யவேண்டியுள்ளது.

பிரசைகளின் அடிப்படை அபிவிருத்திக்கான முன்னெடுப்பாக கூட்டுறவு இயக்கம் மீளத் தாபிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக, தொழில்சார் ரீதியாக முகாமைப்படுத்தப்பட்ட தன்னிறைவு மற்றும் நவீன தொழில்முயற்சி நிறுவனங்களாக மாற்றுவதற்கு தேசிய மற்றும் சர்வதேச பங்குதாரர்களின் தொழில்நுட்ப உதவியுடன் புதிய தேசிய கூட்டுறவுக் கொள்கை ஒன்றைத் தயாரிப்பதை அமைச்சு ஆரம்பித்துள்ளது. உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் கிராமிய வேலைவாய்ப்பை உருவாக்கவும் விவசாயம், மீன்வளம், பால் உற்பத்திக் கைத்தொழில், கைத்தறி ஆடை மற்றும் சிறு கைத்தொழில்களை மையமாகக் கொண்டு 1,000 உற்பத்தி கூட்டுறவுகளை நிர்மாணிக்கும் மூன்று ஆண்டு வேலைத்திட்டம் மாகாண மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.. பொல்கொல்ல கூட்டுறவுக் கல்லூரி அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் ஒரு வெளிநாட்டு பல்கலைக்கழகத்துடன் இணைந்து கூட்டுறவு விடயத்தில் பட்டம் வழங்கும் நிறுவனமாக அபிவிருத்தி செய்வதற்கும், 2030 ஆம் ஆண்டளவில் இலங்கை தேசிய கூட்டுறவு அபிவிருத்திப் பல்கலைக்கழகமாக அதனை நியமிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் ஏலவே எடுக்கப்பட்டுள்ளன.

முதல் வருடத்தில் அடைந்த சாதனைகள், நியாயமான, சமமான மற்றும் மக்கள் சார்ந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான எமது நிறுவனங்கள், அலுவலர்கள் மற்றும் பங்குதாரர்களின் கூட்டு அர்ப்பணிப்பினைப் பிரதிபலிக்கின்றன. முன்னுரிமைகளை செயல்படுத்துவதற்கான அடுத்த கட்டத்திற்கு நாம் செல்லும்போது, சகல பிரஜைகளுக்கும் பொருளாதார வளர்ச்சி, நிலையான உற்பத்தி மற்றும் சமூக நல்வாழ்வை வளர்ப்பதன் மூலம் "வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்ற தொலைநோக்கினைப் பெற்றுக்கொள்வதற்கான வளங்களை வழங்க அமைச்சு கடுமையாக உழைக்கும் என நான் நம்புகிறேன்.

**வசந்த சமரசிங்ஹ** (பா.உ.)
வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்.

**உணவுப் பாதுகாப்பின் ஊடாக உணவுச் சுதந்திரத்தை நோக்கி...**



"வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்ற தேசிய கொள்கைக் கட்டமைப்பின் கீழ் தற்போதைய நிர்வாகத்தின் முதல் ஆண்டினுள் அடையப்பெற்ற பெறுபேறுகள் மற்றும் முன்னேற்றம் குறித்த அறிக்கையை அளிக்கும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் குட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் 2025 முன்னேற்ற அறிக்கையில் இந்தச் செய்தியை வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த ஆண்டு முழுவதும், வர்த்தக முறைமைகளின் செயல்திறனை மேம்படுத்துதல், உணவு விநியோகச் சங்கிலிகளின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு வினைத்திறனுடன் பங்களிக்க உதவுதல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் சந்தை வலையமைப்பை வலுப்படுத்தி சந்தையில் நியாயமான போட்டியை உறுதி செய்து, நிறுவப்பட்ட கூட்டுறவு மொத்த விற்பனை வர்த்தகக் கூட்டுத்தாபனம் மீளப் புத்துயிர் பெற்று, மொத்த விற்பனை வர்த்தகத்திற்கான அணுகலை அனுமதிக்க முடிந்தது. எதிர்வரும் ஆண்டுகளில் பல மாகாணங்களில் நிறுவப்பட்ட தேசிய சதொச மொத்த விற்பனை வர்த்தக நிலையங்கள் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விநியோக வலையமைப்பை ஆரம்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ பத்து ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த வவுனியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் சமீபத்திய திறப்பின் ஊடாக, வன்னி மாவட்ட விவசாய உற்பத்திகளை மொத்தமாக தம்புள்ள பொருளாதார மத்திய நிலையம் மற்றும் நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு விநியோகிக்க உதவியது. யாழ்ப்பாண பொருளாதார மத்திய நிலையம் மீளத் திறக்கப்பட்டதன் மூலம், யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து தென் மாகாணத்திற்கு சின்ன வெங்காயம், மிளகாய், வாழைப்பழம் மற்றும் ஏனைய விவசாய உற்பத்திகளை மொத்தமாக விநியோகித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எமது அமைச்சின் கீழ் உள்ள நுகர்வோர் விவகார அதிகாரசபையின் செயல்பாட்டை நெறிப்படுத்தி, நுகர்வோருக்கு தரமான பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதன் மூலம் சந்தை ஏகாதிபத்தியத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நடவடிக்கைகளை நெறிப்படுத்த தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை நிலைப்படுத்தும் பொருட்டு கொள்கைத் தீர்மானங்களை எடுப்பதன் மூலம் அமைச்சின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை ஓரளவு மேம்படுத்த முடிந்துள்ளது.

உணவுப் பாதுகாப்புத் துறையில், அமைச்சின் தலையீடுகள், உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பான மற்றும் போசாக்கான உணவுக்கு சமமான அணுகலை உறுதி செய்தல் ஆகியவற்றில் எமது அமைச்சு அதிக கவனம் செலுத்தியுள்ளது. நாடு முழுவதும் அத்தியாவசியப் பொருட்களின் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்வதற்காக லங்கா சதொச, கூட்டுறவு வலையமைப்பு மற்றும் தேசிய சதொச ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கூட்டுப் பொறிமுறையை அமைக்கும் பணியில் அமைச்சு ஈடுபட்டுள்ளது.

இந்த முதலாம் வருடத்தினுள் அமைச்சு அடைந்த வெற்றி, அரச அலுவலர்கள், உள்ளூர் நிர்வாகங்கள், கூட்டுறவு மற்றும் தனியார் துறை பங்குதாரர்களின் கூட்டு முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. கொள்கை முன்னெடுப்புகள் அடிமட்டத்திலிருந்து வினைத்திறன் மிக்கதாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதில் அவர்களின் பங்களிப்பு முக்கிய பங்கு வகித்துள்ளது.

எதிர்காலத்தை நோக்குமிடத்து, நிறுவன ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல், வர்த்தகம் மற்றும் சந்தை முகாமையின் டிஜிட்டல் பரிமாற்றத்தை மேம்படுத்துதல் மற்றும் அனைத்து முன்னெடுப்புகளும் நிலையான, சமமான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதாரத்தை அடைவதற்கு பங்களிப்பதை உறுதி செய்தல் ஆகியவற்றில் எமது கவனம் செலுத்தப்படும். "வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்ற கொள்கைக் கட்டமைப்பால் வழிநடத்தப்பட்டு, இலங்கை மக்களுக்கு நீடித்த செழிப்பு மற்றும் உணவு இறையாண்மையை உறுதி செய்வதற்காக வரும் ஆண்டில் உறுதியுடன் செயற்படுவோம்.

**ஆர்.எம். .ஜயவர்தன (பா..உ.)**

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்திப் பிரதி அமைச்சர்

**மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரம் - கூட்டுறவுக் கலாச்சாரம்....**



வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் 2025 முன்னேற்ற அறிக்கையில் இந்தச் செய்தியை வழங்குதல் மிகவும் பெருமைக்குரியதாகும். "வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்ற தொலைநோக்கினைச் செயல்படுத்துவதில் தற்போதைய அரசாங்கம் அதன் முதல் ஆண்டில் அடைந்த நிலையான முன்னேற்றத்தை இந்த அறிக்கை பிரதிபலிக்கிறது.

நாட்டின் கிராமியப் பொருளாதாரத்தில் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக முக்கிய பங்கு வகிக்கும் இலங்கை கூட்டுறவு இயக்கத்தை தன்னிறைவு பெற்ற மற்றும் மக்களை மையமாகக் கொண்ட நிறுவனமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட புதிய கொள்கை வழிகாட்டுதல் ஒன்றை நிறுவுதற்கு எமது அமைச்சில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கிடையில், கூட்டுறவு மறுசீரமைப்பு, நிறுவன சீர்திருத்தம் மற்றும் தலைமைத்துவ அபிவிருத்தி என்பன மூலம் கூட்டுறவு வலையமைப்பை வலுப்படுத்த சில உறுதியான நடவடிக்கைகளை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

தேசிய கூட்டுறவு கொள்கையை விபரிக்கையில் கூட்டுறவினை வரும் தசாப்தத்தில் எவ்வாறு மாற்ற வேண்டும் என்பதை முன்மொழிதற்காக நிபுணர் குழுவொன்றை நியமித்தல் முக்கிய மைல்கல்லாக இருப்பதுடன், இது பரந்த அளவிலான பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்து உருவாக்கப்பட்டு வருகிறது. இந்தக் கொள்கையின் மூலம், சர்வதேச கூட்டுறவுக் கூட்டணியின் சாசனத்தின்படி, ஜனநாயகம், சமத்துவம் மற்றும் சமூக ஒற்றுமையின் அடிப்படைக் கொள்கைகளைப் பாதுகாக்கும் அதே வேளையில், நவீன சந்தைகளுடன் போட்டியிடக்கூடிய உற்பத்தித் திறன் கொண்ட பொருளாதார நிறுவனங்களாக கூட்டுறவு சங்கங்களையும் ஒன்றியங்களையும் மீளத் தாபித்தலையும் எமது அமைச்சு எதிர்பார்க்கிறது.

விசேடமாக விவசாயம், பால், கடல்வளம் மற்றும் கைத்தறி ஆடைகள் போன்ற துறைகளில் செயற்பாடற்ற கூட்டுறவுச் சங்கங்களை அடையாளம் கண்டு புனரமைப்பதற்கான புதிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்று இந்த ஆண்டு ஆரம்பிக்க முடிந்தது. ஏற்கனவே மாகாண மட்டத்தில் இயங்கும் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களின் வலையமைப்பில் அவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம் "கோப் ்ப்ரெஷ்" (CoopFresh) என்ற வர்த்தக நாமத்தில் நான்கு பிரதான உற்பத்திகளை சந்தையில் வெளியிடுவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்குத் தேவையான ஊழியர் பயிற்சி, தொழிற்சாலை நவீனமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் வெளிநாட்டு பயிற்சி என்பவற்றை ஒழுங்கமைப்பதற்கு அமைச்சினால் முடிந்தது.

மேலும், இந்த ஆண்டு, நாட்டின் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கிய 1000 விவசாய உற்பத்திக் கூட்டுறவுகளை உருவாக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடங்க முடிந்தது. இந்த உற்பத்திக் கூட்டுறவுகளின் வெற்றிகரமான செயல்பாட்டிற்குத் தேவையான பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கான பயிற்சி ஏற்கனவே பொல்கொல்ல கூட்டுறவுக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி கூட்டுறவுகளால் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்காக, தனியார் கொள்வனவாளர்களுக்கு மேலதிகமாக, லக் சதொச மற்றும் தேசிய சதொசவுடன் முன்கூட்டியே உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படுவதன் மூலம் சந்தையில் இடைத்தரகர்களின் எண்ணிக்கையைக் குறைத்து நுகர்வோருக்கு நியாயமான விலையில் பொருட்களை வழங்கத் தேவையான நடவடிக்கைகள் அத்திவாரமிடப்பட்டது.

கூட்டுறவுக் கல்லூரியை அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்குள் வெளிநாட்டு பல்கலைக்கழக நிறுவனம் ஒன்றுடன் இணைந்து கூட்டுறவு விடயம் தொடர்பில் பட்டம் வழங்கும் நிறுவனமாக மேம்படுத்தவும், 2030 ஆம் ஆண்டிற்குள் இலங்கை தேசிய கூட்டுறவுப் பல்கலைக்கழகமாக அங்கீகரிக்கும் பொருட்டு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் ஆங்கீகாரத்தைக் கோரி விண்ணப்பிக்கவும் எமது அமைச்சு தீர்மானம் எடுத்துள்ளது.

அடுத்துவரும் மூன்று ஆண்டுகளில் கூட்டுறவு முறைமையை மேலும் நவீனமயமாக்கல், இளைஞர், யுவதிகளின் பங்களிப்பை ஊக்குவித்தல் மற்றும் உலகளாவிய கூட்டுறவு வலையமைப்புடன் வலுவான உறவுகளை உருவாக்குதல் என்பன எமது எதிர்பார்ப்பாகும். "வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்ற கொள்கைப் பிரகடத்துக்கு இணங்க, கூட்டுறவு இயக்கத்தை நாட்டின் சகல பிரசைகளுக்கும் நியாயமான, மீள்தன்மை கொண்ட மற்றும் சகலருக்கும் நன்மை அளிக்கக்கூடிய வலுவான கிராமியப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நோக்கத்தை நிறைவேற்றும் ஒரு நிறுவனமாக மாற்றுதல் எமது அமைச்சின் எதிர்பார்ப்பாகும்..

**உபாலி சமரசிங்ஹ (பா.உ.)**
கூட்டுறவுப் பிரதி அமைச்சர்

**வர்த்தக ஊக்குவிப்புச் சூழலை மேம்படுத்துதல், நுகர்வோரைப் பாதுகாத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்...**



வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் முக்கிய நோக்கமாவன, 'வளமான தேசம் - அழகான வாழ்க்கை' என்ற தேசிய கொள்கைக் கட்டமைப்பிற்கு ஏற்ப தேசிய வர்த்தக சுற்றுச்சூழல் முறைமையை வலுப்படுத்துதல், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல், நுகர்வோர் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் கூட்டுறவுத் துறையை புத்துயிர் பெறுதல் எனபனவாகும். அதன்பிரகாரம், வினைத்திறன் மிக்க கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை வழங்குவதன் பொருட்டு உடனடி வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பற்றிய கவனங்களை நிவர்த்தி செய்யும் அதே வேளையில், மிகவும் வினைத்திறனான, மீள்தன்மை மற்றும் உற்பத்தித் திறன் கொண்ட வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு முறைக்கான அடித்தளத்தை அமைத்தலிலும் இந்த அமைச்சு கவனம் செலுத்துகிறது.

2025 ஆம் ஆண்டில், அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்ற இறக்கம், உற்பத்தியில் காலநிலை தொடர்பான இடையூறுகள், உள்நாட்டு விநியோகச் சங்கிலிகளில் இடையூறுகள் மற்றும் சந்தைகள் முழுவதும் வலுவான ஒழுங்குபடுத்தல் செயலாக்கத்தின் தேவை அடங்கலான பல சவால்களை அமைச்சு எதிர்கொண்டது. இந்தச் சவால்கள் இருந்தபோதிலும், தீர்வை வரித் திருத்தங்கள், அடிப்படையாகத் தேவைப்படுமிடத்து, தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் மீது அதிகபட்ச சில்லறை விலைகளை விதித்தல், கண்காணிப்பை வலுப்படுத்துதல் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களைத் தொடர்ச்சியாக கிடைப்பதை உறுதி செய்வதற்கான ஒருங்கிணைந்த தலையீடுகள் என்பவற்றின் ஊடாக, சந்தை நிலைப்படுத்தலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையப்பட்டது. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தை (CWE) மீளத் தாபித்தல், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் பிரத்தியேக பொருளாதார மத்திய நிலையங்களை மீளச் செயற்படுத்தல், விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோருக்கு வர்த்தகம் செய்யக்கூடிய உட்கட்டமைப்பு மற்றும் சூழலை உறுதி செய்வதற்காக பிரத்தியேக பொருளாதார மத்திய நிலையங்களின் முகாமை பொருட்டு, தேசிய கமநல சந்தை சேவைகள் லிமிடெட் நிறுவனத்தைக் கூட்டிணைத்தல் ஆகியவற்றுடன் முக்கிய நிறுவன மறுசீரமைப்புகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும், முக்கிய கொள்கை முன்னெடுப்புகளில், குறிப்பாக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கொள்கைக் குழு என்பவற்றின் ஊடாக, அமைச்சு கணிசமான வழிகாட்டுதலை வழங்கியது.

தேசிய வர்த்தகக் கொள்கையில் முன்னேற்றமானது, அமைச்சிற்குரிய குறிப்பாணையின் மையக் கூறொன்றாகவே காணப்பட்டது. வர்த்தகத்தை செயற்படுத்தும் சூழலை மேம்படுத்துவதற்குத் தொடர்ச்சியான மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் குறிப்பாக, குவிப்பு எதிர்ப்பு மற்றும் எதிரீட்டு விளைவு நடவடிக்கைகளை செயற்படுத்துதல், புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்தல், புலமைச் சொத்து ஆவணங்களின் டிஜிட்டல் மயமாக்கலை ஆரம்பித்தல், 2025 இல் இலங்கையின் ஐந்தாவது உலக வர்த்தக அமைப்பின் (WTO) வர்த்தகக் கொள்கை மீளாய்வைப் பூர்த்தி செய்தல் போன்றவை செயற்படுத்தப்பட்டன. மேலும், சந்தை அணுகலைப் பாதுகாத்தல், ஏற்றுமதி போட்டித்தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் பரந்த பொருளாதார ஒருங்கிணைப்பை ஆதரித்தல் என்பன பொருட்டு, கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுக்கள் மற்றும் முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடனான ஏனைய பொறிமுறைகள் ஊடான இருதரப்பு ஈடுபாடுகள் வலுப்படுத்தப்பட்டன. உணவுப் பாதுகாப்புத் துறையில், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் கிடைக்கும் தன்மை மற்றும் நியாய விலையை உறுதி செய்வதற்கான முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டன. கூட்டுறவுத் துறையை நவீனமயமாக்குவதற்கான விரிவான நிகழ்ச்சி நிரலையும் அமைச்சு முன்னெடுத்தது. இதில் சட்ட சீர்திருத்தங்கள் பற்றிய முன்னேற்றம், செயற்பாடற்ற கூட்டுறவுகளை மீட்டெடுத்தல், புதிய மாகாண அளவிலான உற்பத்தி கூட்டுறவுகளை ஆரம்பித்தல் மற்றும் கொள்ளளவு கட்டியெழுப்பலை ஆரம்பித்தல் ஆகியவை அடங்கும்.

2026 ஆம் ஆண்டை எதிர்நோக்கியவாறு, வர்த்தகம் மற்றும் சந்தைச் சூழல்களின் மாற்றத்தை விரைவுபடுத்துதல், இடைத்தொடர்புகளை நிறுவுவதன் மூலம் விநியோகச் சங்கிலியின் வினைத்திறனை மேம்படுத்துதல், உணவுப் பாதுகாப்பு முயற்சிகளை விரிவுபடுத்துதல் மற்றும் வர்த்தக பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தல் என்பவற்றின் மூலம் அமைச்சு இந்த எய்துகைகளை தொடர்ந்து கட்டியெழுப்பும். கூட்டுறவுத் துறை மறுசீரமைப்பை நிறைவு செய்தல், வர்த்தக வசதிப்படுத்தற் சேவைகளை விரிவுபடுத்துதல், ஏற்றுமதி மற்றும் சந்தை அணுகல் வசதி வழிமுறைகளை மேம்படுத்துதல் என்பன அடங்கலான மற்றும் அமைச்சின் கீழ் நிறுவன நிர்வாகத்தை மேம்படுத்துதல் ஆகியவை மேலதிக முன்னுரிமைகளில் அடங்கும்.

கௌரவ அமைச்சர் மற்றும் இரண்டு கௌரவ பிரதி அமைச்சர்களின் தலைமை மற்றும் வழிகாட்டல் பொருட்டு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எமது நிறுவனப் பொறுப்புகளை அடைவதில் அர்ப்பணிப்பு மிக்க

மற்றும் அயராத பங்களிப்பிற்காக அமைச்சின் அனைத்து அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கே. ஏ. விமலேந்திரராஜா**
செயலாளர்

# பொருளடக்கம்

01. முதலாம் அத்தியாயம் - தொலைநோக்கு, செயல்நோக்கு, நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் ........ 1

02. இரண்டாம் அத்தியாயம் - முக்கிய விடயங்கள் ........ 7

03. மூன்றாம் அத்தியாயம் - 2024 - முன்னேற்றம் ........ 13

04. நான்காம் அத்தியாயம் - 2026 - எதிர்காலத் திட்டங்கள் ........ 53

# அட்டவணை ஒழுங்குகள்


அட்டவணை இல 3. 1 நிதியியல் முன்னேற்றம் ........................................................ 15
அட்டவணை இல 3. 2 விசேட விசாரணைகளும் ஆரம்ப விசாரணைகளும் ................................. 15
அட்டவணை இல 3. 3 **வெளிநாடுகளில் வர்த்தக அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்**.......................................................................... 21
அட்டவணை இல 3. 4 மூலச் சான்றிதழ்களை வெளியிடுதல் மற்றும் பிற ஆதரவுச் சேவைகள்....... 22
அட்டவணை இல 3. 5 வருமானம் ஈட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் ............................................................................ 23
அட்டவணை இல 3. 6 மூலதனச் செலவினத்தில் முன்னேற்றம்........................................... 24
அட்டவணை இல 3. 7 செயற்பாட்டு நடவடிக்கையில் முன்னேற்றம்..................................... 25
அட்டவணை இல 3. 8 2025 இல் திறக்கப்பட்ட விற்பனை நிலையங்களின் பட்டியல்.................. 25
அட்டவணை இல 3. 9 2025 இன் புலமைப்பரிசில் கொடுப்பனவு பற்றிய தகவல்கள் (பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்)....................................... 28
அட்டவணை இல 3. 10 மொத்த புலமைப்பரிசில் வழங்கல் 2019 முதல் தற்போது வரை............ 29
அட்டவணை இல 3. 11 பல்கலைக்கழக அனுமதி பெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கைக்கும் மகபொல புலமைப்பரிசில் பெற்றோருக்குமிடையான ஒப்பீடு ............... 29
அட்டவணை இல 3. 12 தராதர அங்கீகாரங்கள் வழங்குதல் ................................................ 30
அட்டவணை இல 3. 13 2025.01.01 முதல் 2025.09.30 வரை வழங்கப்பட்ட புதிய தராதர அங்கீகாரங்கள்.................................................................. 30
அட்டவணை இல 3. 14 உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் பணிகளின் முன்னேற்றம்.................. 33
அட்டவணை இல 3. 15 விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் நிதியியல் முன்னேற்றம் (2025.01.01–2025.09.30) ......................................................... 35
அட்டவணை இல 3. 16 விசேட பொருளாதார மத்திய நிலையங்களில் 2025 இல் முகாமையிடப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு நிதிகளால் அனுமதியளிக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் பெறுகை நடவடிக்கைகள்.......................................................................... 36
அட்டவணை இல 3. 17 செயற்பாட்டு மட்டத்தில் அல்லாது இருந்தவற்றை செயற்பாட்டு மட்டத்திற்கு மாற்றப்பட்ட விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் .. 37
அட்டவணை இல 3. 18 பௌதிக வளர்ச்சி ........................................................................ 37
அட்டவணை இல 3. 19 கைத்தொழில் வடிவமைப்புகள்....................................................... 38
அட்டவணை இல 3. 20 வர்த்தகச் சின்னங்கள் ................................................................ 38
அட்டவணை இல 3. 21 நுகர்வோர் விவகார அதிகாரசபை செயற்பாடுகளின் முன்னேற்றம் .......... 40
அட்டவணை இல 3. 22 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் சங்கப் பிரிவின் முன்னேற்றம் 43
அட்டவணை இல 3. 23 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் சங்கக் கணக்காய்வின் முன்னேற்றம்........................................................................ 44
அட்டவணை இல 3. 24 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அபிவிருத்திப் பிரிவின் முன்னேற்றம்........................................................................ 44
அட்டவணை இல 3. 25 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் சட்டப் பிரிவின் முன்னேற்றம்45
\அட்டவணை இல 3. 26 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் வங்கிப் பிரிவின் முன்னேற்றம் ....................................................................... 46

அட்டவணை இல 3. 27 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிற்சிப் பிரிவின் முன்னேற்றம்........................................................................................ 47
அட்டவணை இல 3. 28 கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பான முன்னேற்றம்........................................................................................ 47
அட்டவணை இல 3. 29 கூட்டுறவுப் பணியாளர்களுக்கான விழிப்புணர்வுப் பயிற்சிப்பட்டறைகள்47
அட்டவணை இல 3. 30 தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்........................................................................................ 49
அட்டவணை இல 3. 31 கம்பனிகளின் பெயர்களை அங்கீகரித்தல் ................................................. 51
அட்டவணை இல 3. 32 கலைக்கப்பட்ட மற்றும் ரத்துச் செய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை52
அட்டவணை இல 3. 33 பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் ....................................................... 52

## முதலாம் அத்தியாயம்

# தொலைநோக்கு, செயல்நோக்கு, நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள்

## 01. தொலைநோக்கு, செயல்நோக்கு, நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள்

### 1.1. தொலைநோக்கு

''நிலைபேறான அபிவிருத்தியடைந்த இலங்கை''

### 1.2. செயல்நோக்கு

வர்த்தகப் பிரிவின் தலைமையில் சேவை வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் மற்றும் ஏனைய சேவை வழங்குனர்களினதும் நுகர்வோரினதும் சமத்துவத்தையும் வர்த்தக உரிமைகளையும் உறுதிப்படுத்துகின்ற தேசிய மற்றும் சர்வதேச தரங்களுக்கு ஏற்றவாறான தேசிய வர்த்தக கொள்கையொன்றை தாபித்தல், பேணுதல் மற்றும் இலங்கையின் சர்வதேச வர்த்தக சம்பந்தத்தை அதிகரித்துக் கொள்வதற்கு இருதரப்புஇ பிராந்திய மற்றும் பல்தரப்பு வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் புதிய சந்தை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கும், இலங்கையரின் அன்றாட நுகர்வு பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை உயர்த்துவதன் மூலம் உயர் வாழ்க்கைத்தர நிலமையை பேணுவதற்கும் பங்களிப்பு வழங்குதல்

### 1.3. நோக்கங்கள்

i. தேசிய வர்த்தகக் கொள்கை மூலம் தேசிய உற்பத்தியாளர்களதும் நுகர்வோரினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் சந்தையைக் கையாளும் நிர்வாகத்திற்கான கருவியாக தீர்வை வரிக் கொள்கையை பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கான வரிச் சலுகைகளை வழங்குதல் மூலம் ஏற்றுமதியை ஊக்குவித்தல்

ii. சந்தையில் பொருட்களின் விலை அசாதாரணமான முறையில் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் அத்தியாவசியப் பொருட்களின் வழங்கல் தொடரை அதிகரிப்பதன் மூலம் விலையைக் கட்டுப்படுத்தி வாழ்க்கைச் செலவை குறைந்த மட்டத்தில் பேணிச் செல்லுதல்

iii. திறந்த போட்டித் தன்மையான சந்தைச் சூழலில் இலங்கை சதொச நிறுவனம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், தேசிய மட்டத்திலான கூட்டுறவுச் சங்கங்கள், ஒன்றியங்கள் போன்ற அரச நிறுவனங்கள் ஊடாக நுகர்வோருக்கு சலுகை ரீதியான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டலை வழங்கல்

iv. வர்த்தகப் பிரஜைகளைப் போன்றே நுகர்வோரினதும் பயனுக்காக அளவையியல் அலகுகள் தரங்களை உரியவாறு நடைமுறைப்படுத்துவதை சான்றுப்படுத்தல்

v. உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் பாதுகாப்பு இருப்பை (Buffer Stock) பேணிச் செல்வதற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பைப் போன்றே உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்தி செய்தல்

vi. நுகர்வோர் பாதுகாப்பிற்குரிய சட்ட நடவடிக்கைகள் பொருட்டு நுகர்வோர் சேவை அதிகாரசபைக்குத் தேவையான வழிகாட்டலை வழங்கல்

vii. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு ஏற்புடைய தரவுத் தொகுதியொன்றைப் பேணுதல், அத்தரவுத் தொகுதியை இற்றைப்படுத்தல் மற்றும் அத்தரவுகளை வெளிவாரித் தகவல்களை வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புபடுத்தும் பொறிமுறையொன்றைத் தயாரித்தல்

viii. உள்ளூர் உற்பத்திகள் மற்றும் ஏற்றுமதிப் பொருட்களின் உரிய தரங்களைப் பாதுகாப்பதுடன் தொடர்புடைய ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்கு வழிகாட்டுதல்

ix. உயர் கல்வியில் மாணவ மாணவிகளை ஊக்குவிப்பதற்கு ஏற்புடைய நலன்புரி செயற்பாடுகளை நடத்திச் செல்வதற்குப் பங்களிப்பு வழங்குதல்

x. தேசிய புலமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்.

xi. தேசிய மற்றும் சர்வதேச தரங்களுக்கு ஏற்ப நடத்திச் செல்லப்படும் இணக்க மதிப்பீட்டுக்கான அங்கீகாரச் சேவையை சான்றுப்படுத்துவதற்குரிய வழிகாட்டல்

xii. இலங்கை பொருளாதாரம் மற்றும் வர்த்தக நலன்களைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு சர்வதேச சந்தை வாய்ப்பின் பொருட்டு ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்குத் தேவையான நிறுவன பின்னணியை அமைத்து கொடுத்தல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை ஊக்குவித்தல்.

xiii. இயைபுடைய இருதரப்பு, பிராந்திய மற்றும் பலதரப்பு ரீதியாக நாடுகளுடன் உடன்படிக்கைகளைச் செய்யும்போது வசதிகளைத் திட்டமி;டல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

xiv. இலங்கையில் எற்றுமதிக்காக தெரிவு செய்யப்பட்ட அடிப்படை முறை (GSP), பரஸ்பரமற்ற வர்த்தக உடன்படிக்கை(NMTR), சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (FTA) மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கை (RTA) போன்றவற்றின் சட்டரீதியான ஒருங்கிணைத்தலுக்கு தேவையான வழிக்காட்டல்

### 1.4. செயற்பாடுகள்

i. அரசினால் செயற்படுத்தப்படும் தேசிய கொள்கைகள் மீது அமைக்கப்பட்ட வர்த்தக விடயங்களுடன் தொடர்புடைய கொள்கைகளை உருவாக்குதல்.

ii. அமைச்சின் கீழ்; இயங்குகின்ற திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டவாக்க நிறுவனங்களின் விடயதானங்கள் மற்றும் பணிகள், அவற்றுடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்ட உருவாக்கம் என்பவற்றை நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்

iii. தேசிய வர்த்தகக் கொள்கையை தயாரித்தல் மற்றும் அக்கொள்கையை மேற்கொள்வதற்கு தேவையான ஒருங்கிணைப்பு செயற்பாட்டை நடைமுறைபடுத்தல்.

iv. நுகர்வோரைப் பாதுகாப்பதற்குத் தேவையான சந்தைப் போட்டித் தன்மையை ஏற்படுத்தல், சந்தை மேற்பார்வை, சுற்றிவளைப்பு மற்றும் வியாபாரிகளுக்கும் நுகர்வோருக்கும் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்தல்;.

v. உள்நாட்டுச் சந்தையில் ஏற்படும் விலை ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்தும் இடையீட்டாளராகச் செயற்படல்.

vi. உலக வர்த்தக சந்தையினுள் புதிய ஏற்றுமதிச் சந்தர்ப்பங்களை இனங்காணுதல், அதே போல் புதிதாக இருதரப்பு, பிராந்திய மற்றும் பல தரப்பு வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் பற்றி ஆராய்வதற்காக நிறுவனங்களை ஊக்குவித்தல் மற்றும் தேவையான வசதிகளை திட்டமிடல்

vii. இலங்கையில் புலமைச் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் பொருளாதார நிலைத்தன்மையை ஊக்குவிக்கும் புலமைச் சொத்து முறையொன்றை நிறுவுதல்.

viii. கம்பனிகள், வணிகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு சட்டப்பூர்வ அந்தஸ்தை வழங்குதல் மற்றும் அவற்றின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துதல்.

## 1.5. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்

i. வர்த்தகத் திணைக்களம்

ii. வரையறுக்கப்பட்டலங்கா சதொச நிறுவனம்

iii. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்

iv. லலித் அதுலத்முதலி மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

v. இலங்கை ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

vi. அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்

vii. விசேட பொருளாதார மத்திய நிலையங்கள்

viii. இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

ix. நுகர்வோர் விவகார அதிகாரசபை

x. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

xi. கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு

xii. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்

xiii. இலங்கை அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனம்

xiv. உணவு ஆணையாளர் திணைக்களம்

xv. கம்பனிகள் பதிவாளர் நாயகம் திணைக்களம்

xvi. இலங்கை திரிபோசா நிறுவனம்

# இரண்டாம் அத்தியாயம்

# முக்கிய விடயங்கள்

## 02. முக்கிய விடயங்கள்

**2.1. உணவுப் பாதுகாப்பிற்குத் தேவையான கொள்கைத் தீர்மானங்களை உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவிடம் சமர்ப்பித்து, அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.**

i. 2025 சிறுபோகத்திற்கான அரச நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்திற்கு நெல் கொள்வனவு செய்வதற்கான உத்தரவாதக் கடனைப் (Pledge Loan) பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் கூட்டுறவு மொத்த விற்பனை வர்த்தகக் கூட்டுத்தாபனத்தால் எடுக்கப்படுவதுடன், அந்நடவடிக்கைகளின் மேற்பார்வை.

ii. உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவினால், நுகர்வுக்குப் பொருத்தமானதாக பரிந்துரைக்கப்பட்ட 6,300 கிலோகிராம் மஞ்சளை விடுவிப்பதற்குரிய சுங்க அனுமதியைப் பெற்று, இலங்கைத் தரநிலைகள் நிறுவகத்தின் பரிந்துரையின் பேரில், அந்த மஞ்சள் தொகையினை சதோச நிறுவனத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

iii. லங்கா சதோச நிறுவனமும் தனியார் துறையும் 2025 சிறுபோகத்தில் பெரிய வெங்காயத்தை கொள்வனவு செய்வதற்கான நியாய விலை ஒன்றை நிர்ணயிக்க தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

iv. நியாய விலையில் உருளைக்கிழங்கை லங்கா சதோச கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை ஊடாக கொள்வனவு செய்து, அவற்றை நுகர்வோருக்கு நியாய விலை ஒன்றில் விற்பனை செய்வதற்கு வழிகாட்டுதல் மற்றும் ஒருங்கிணைப்பை வழங்குதல்.

v. பருவகால ரீதியாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் இறக்குமதிக்கு வரி விதிக்கும் செயன்முறை ஒன்றைச் செயற்படுத்துவதுடன், 2026 ஆம் ஆண்டில் அது தாபிக்கப்படும்.

**2.2. தேசிய தராதர சபை நிறுவப்படுதற்கான வழிகாட்டுதல் குழு மற்றும் தொழில்நுட்பக் குழு என்பன அமைக்கப்பட்டு, அதன் பணிகளை ஆரம்பித்தல்**

**2.3. தேசிய தீர்வை வரிக் கொள்கையை (National Tariff Policy) செயல்படுத்துதல் தொடர்பாக உப குழுக்களைக் கூட்டி, ஒவ்வொரு துறைக்கும் உரிய வரித் திருத்தங்கள் குறித்து கலந்துரையாடுதல்.**

இலங்கையின் தேசிய தீர்வை வரிக் கொள்கையின் ஏற்பாடுகளின்படி தீர்வை வரிகளைத் திருத்துதல் அல்லது இற்றைப்படுத்துவதற்கான பரிந்துரைகள் அடங்கலான தேசிய தீர்வை வரிக் கொள்கையை செயல்வலுப்படுத்துவதற்கான வசதிகளைத் திட்டமிடும் பொருட்டு, விவசாயம், பெருந்தோட்டக் கைத்தொழில், கடற்றொழில், கைத்தொழில் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியவாறு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் தலைமையில் உப குழு ஒன்றை நிறுவுதல்.

**2.4. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பற்றாக்குறையின்றி நுகர்வோருக்கு வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் மற்றும் சந்தையில் பற்றாக்குறை உள்ள அரிசி வகைகளின் போதுமான விநியோகத்தை உறுதி செய்வதற்கு தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை எடுத்தல்.**

**2.5. அத்தியாவசிய நுகர்வோர் பொருட்களுக்கு தேவையான சந்தர்ப்பங்களில் அதிகபட்ச சில்லறை விலைகளையும் அதிகபட்ச மொத்த விலைகளையும் நிர்ணயிக்கும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் நுகர்வோருக்கு தேவையான நிவாரணங்களை வழங்குதற்கு வழிகாட்டுதல்.**

**2.6. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தை மீளத் தாபித்தல் தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுதல்.**

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தைக் கலைத்தல் தொடர்பான முந்தைய அமைச்சரவைத் தீர்மானத்தை ரத்து செய்து, திறன்மிக்க வணிகத் திட்டமொன்றின் அடிப்படையில் அச்சந்தர்ப்பத்தில் வணிக நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கான அங்கீகாரங்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

**2.7. போஷாக்கிற்கான பல்துறை செயல் திட்டம் (MSAPN)**

போஷாக்கிற்கான பல்துறை செயல் திட்டத்திற்கான (MSAPN) முதல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் செப்டம்பர் மாதம் இரத்தினபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட அதேவேளை, எதிர்காலத்தில் மட்டக்களப்பு மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் இந்த முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**2.8. தேசிய கமநல சந்தைப்படுத்தல் சேவைகள் நிறுவனத்தை (National Agri Market Services limited) தாபித்தல்.**

நாடு முழுவதும் தற்போது செயற்பட்டு வரும் 18 பொருளாதார மத்திய நிலையங்களை வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் செயற்படுத்தல் மற்றும் முகாமையிடல் பொருட்டு "தேசிய கமநல சந்தைப்படுத்தல் சேவைகள் நிறுவனம்" (National Agri Market Services limited) என்ற பெயரில் அரச நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் ஸ்தாபனத்தின் ஊடாக விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோருக்கான சந்தையை விரிவுபடுத்தவும், விற்பனை மற்றும் கொள்வனவு வசதிகளை விரிவுபடுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**2.9. 30 ஆண்டுகளுக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தால் உப்புக் கைத்தொழிலில் உற்பத்திப் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு சந்தையை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்**

**2.10. உள்ளூர் உப்பு மற்றும் உருளைக்கிழங்கு விவசாயிகளைப் பாதுகாக்க உப்பு மற்றும் உருளைக்கிழங்கு என்பவற்றிற்கு இறக்குமதி வரிகளை விதிக்க தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்.**

**2.11. வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் செயல்பாட்டிற்கு தேவையான வழிகாட்டுதல்.**

**2.12. கூட்டுறவுத் துறையின் மறுசீரமைப்புக்கான புதிய சட்ட கட்டமைப்பைத் தயாரித்து செயல்படுத்துதல். அதன் மூலம் உற்பத்திக் கூட்டுறவுகளை நிறுவுவதற்கும், நிதி விடயங்களை மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் புதிய சட்ட கட்டமைப்பு ஒன்றை நிறுவுதல்.**

**2.13. அமெரிக்கா மற்றும் இலங்கையுடன் ஒருங்கிணைந்த தீர்வை வரி வசதிகளைப் பெறுதற்காக ஒருங்கிணைப்பு மற்றும் கலந்துரையாடல்களை நடத்துதல்.**

**2.14. புவியியல் குறிகாட்டிகளுக்குரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கீழ் பதிவு செய்தல் 2025 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

**2.15.** குவிப்பு எதிர்ப்பு மற்றும் எதிரீட்டு விளைவுகள் சட்டம் தொடர்பான ஒழுங்குவிதிகளைச் செயல்படுத்தலை 2025 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**2.16.** உணவுப் பாதுகாப்பிற்கான தர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சுடன் இணைந்து BESPA (விவசாய- உணவுத் துறை அபிவிருத்தியின் அடிப்படையிலான சிறந்த நடைமுறைகள்) வேலைத்திட்டத்தை செயற்படுத்துதல்.

## மூன்றாம் அத்தியாயம்

# 2025 - முன்னேற்றம்

# 03. 2025 இல் அடைந்த முன்னேற்றம் ( 2025.01.01 முதல் 2025.09.30 வரை)

## 3.1 வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

### i. 2025.09.30 ஆம் திகதி வரையான நிதியியல் முன்னேற்றம்

அட்டவணை இல 3.1 நிதியியல் முன்னேற்றம்

| செலவின விபரம் | 2025 இற்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (ரூபா) | 2025.09.30 வரையான வளர்ச்சி | |
|---|---|---|---|
| | | (ரூபா) | % |
| மீண்டெழும் செலவினம் | 489,000,000.00 | 278,708,241,.48 | 57% |
| மூலதனச் செலவினம் | 135,000,000.00 | 5,761,588.80 | 4% |
| | **624,000,000.00** | **284,469,830.28** | **46%** |

ஆதாரம் :வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, கணக்கீட்டுப் பிரிவு

### ii. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அ) அரசியலமைப்புச் சட்டத் தேவையான அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுவின் 03 கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டுள்ளன.

ஆ) அமைச்சின் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தின்படி, அமைச்சின் நடவடிக்கைகள் முறைப்படி நடத்தப்படல் மற்றும் முறைப்படி மேற்கொள்ளப்படுகிறதா என்பதை விசாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன், இதற்காக, 07 உள்ளக கணக்காய்வு விசாரணைகள் வெளியிடப்பட்டு அது தொடர்புடைய தீர்மானங்கள் பற்றி மேற்பார்வையிடப்பட்டன.

இ) செயலாளரால் குறித்தொதுக்கப்பட்ட 08 விசேட விசாரணைகள் மற்றும் ஆரம்ப விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், அவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

அட்டவணை இல 3.2 விசேட விசாரணைகளும் ஆரம்ப விசாரணைகளும்

| தொடரில | திகதி | தொடர்பு இல | விடயம் | உரிய நிறுவனம் |
|---|---|---|---|---|
| 01. | 2025.01.23 | MT/IA/08/MUSSD/2024/PETI | அளவீட்டு அலகு, தரநிலைகள் மற்றும் சேவைகள் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் மீதான விசேட விசாரணை. | அளவீடு, தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களம் |
| 02. | 2025.01.31 | MT/IA/SPAU/2025/01 | நாரஹேன்பிட்ட விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் முகாமைப் பொறுப்பில் உள்ள நிதியைப் பயன்படுத்துவது குறித்த விசேட விசாரணை அறிக்கை. | நாரஹேன்பிட்ட விசேட பொருளாதார மத்திய நிலையம் |
| 03. | 2025.02.03 | MT/IA/SPAU/2025/03 | உமங்தாவ கிரீன் ஹட் வர்த்தக நிறுவன பரிசோதனை | உமங்தாவ கிரீன் ஹட் |
| 04. | 2025.02.24 | MT/IA/SPAU/2025/02 | பிலியந்தல விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் முகாமைப் பொறுப்பு நிதி பயன்பாடு குறித்த விசேட விசாரணை அறிக்கை | பிலியந்தல விசேட பொருளாதார மத்திய நிலையம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 05. | 2025.06.26 | MT/IA/SPAU/2025/04 | நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் முகாமைப் பொறுப்பு நிதி பயன்பாடு குறித்த விசேட விசாரணை அறிக்கை | நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையம் |
| .06 | 2025.07.31 | MT/IA/SPAU/2025/05 | லங்கா சதொச நிறுவனத்திலிருந்து எழும் விடயங்கள் - AMC கூட்டங்கள் | லங்கா சதொச நிறுவனம் |
| .07 | 2025.08.31 | MT/IA/SPAU/2025/06 | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து எழும் விடயங்கள் - AMC கூட்டங்கள் | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் |
| .08 | .202510.22 | MT/IA/SPAU/2025/07 | நிறுவன கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுக் கூட்டத்தை நடத்துதல்.2025 - | அமைச்சின் கீழ் உள்ள அரச நிறுவனங்கள் |

ஆதாரம் :வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, உள்ளக கணக்காய்வுப் பிரிவு

### iii. நிறுவனங்கள் மற்றும் நிறுவனப் பிரிவுகளின் நடவடிக்கைகள்

அ) அமைச்சின் அனைத்து நிறுவன நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டதுடன், அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் தொடர்பாக ஏறத்தாழ 64 அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஆ) அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பிரதமர் அலுவலகத்தின் அரச சேவை ஆட்சேர்ப்புச் செயன்முறையின் மீளாய்வுக் குழு, நுகர்வோர் விவகார அதிகாரசபை, இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டு தராதர அங்கீகார சபை, லங்கா சதோசா நிறுவனம், கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக (நானாவித) சட்டரீதியான கூட்டுத்தாபனம், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம், இலங்கைத் தேசிய புலமைச் சொத்து அலுவலகம், கம்பனிப் பதிவாளர் திணைக்களம், அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களம், லலித் அதுலத் முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் ஆகிய நிறுவனங்களில் காணப்படும் பணியாளர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், ஆட்சேர்ப்புக்கான தொடர்புடைய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், 25/1579/817/030 ஆம் இலக்க மற்றும் 2025.09.08 ஆம் தேதியிட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, அங்கீகரிக்கப்பட்ட 39 பதவிகளுக்கான சேவைக் காலத்தை 2025.08.14 முதல் 2026.08.13 வரை நீடிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### iv. இலங்கையின் தேசிய மதிப்பீட்டுக் கொள்கை

"இலங்கையின் தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை செயல்படுத்துவதற்கான சகல அரச நிறுவனங்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள்" என்ற தலைப்பிலான வேலைத்திட்ட முகாமை மற்றும் மேற்பார்வைச் சுற்றறிக்கை இல 01/2024 இன் படி, 2025 நிதியாண்டில் அரச வரவு செலவுத் திட்டத்தில் இருந்து நிதி ஒதுக்குவதற்கான வேலைத்திட்ட மதிப்பீடுகள் பொருட்டு யோசனைகள் கோரப்பட்டன.

2025 ஆம் ஆண்டிற்கான தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை செயல்படுத்துகையில் எமது அமைச்சின் கீழ் உள்ள உணவுத் திணைக்களத்தின் கீழுள்ள விவசாய உற்பத்திகளை களஞ்சியப்படுத்துவதற்கான வெப்பநிலைக் கட்டுப்பாட்டிற்குப் பயன்படுத்தக்கூடிய. 5000 மெ.தொ. திறன் கொண்ட தம்புள்ளை களஞ்சியசாலை மதிப்பீட்டு நடவடிக்கைக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், இந்தப் பணிக்காக

சுயாதீன மதிப்பீட்டை நடத்துவதற்குத் தேவையான ஆலோசகர் நிறுவனம் ஒன்றைத் தெரிவு செய்வதற்கான பெறுகைச் செயல்முறை நடைபெற்று வருகிறது. இயைபுடைய ஆதாரக் குழு (Reference Group) மற்றும் முகாமைக் குழு (Management Group) என்பன இனங்காணப்பட்டுள்ளன. இதற்காக, அண்ணளவாக ரூ. 2.5 மில்லியன் ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

## 3.2 வர்த்தகத் திணைக்களம்

### i. பல்தரப்பு நடவடிக்கைப் பிரிவு

#### அ) இலங்கையின் 5 ஆவது வர்த்தகக் கொள்கை மீளாய்வு

வர்த்தகக் கொள்கை மீளாய்வு (TPR) என்பது உலக வர்த்தக அமைப்பின் (WTO) அதன் உறுப்பினர் நாடுகளின் வர்த்தகக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைக் கண்காணித்து மதிப்பீடு செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள பிரதான வழிமுறையாகும். வர்த்தகக் கொள்கை மீளாய்வுப் பொறிமுறையானது உலக வர்த்தக அமைப்பு உறுப்பினர்களின் வர்த்தகக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் புரிதலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வர்த்தகக் கொள்கை மீளாய்வு என்பது ஒரு குறிப்பிட்ட கால மதிப்பீடு என்பதுடன், அதன் உறுப்பினர் நாடுகளின் வர்த்தகக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் புரிந்துகொள்வதற்காக உலக வர்த்தக அமைப்பினால் அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. இது ஏனைய உறுப்பினர்களிற்கு மீளாய்வு செய்யப்படும் நாட்டின் வர்த்தக நடைமுறைகளைப் புரிந்துகொள்ளவும் சாத்தியமான மேம்பாடுகள் குறித்த உரையாடலில் ஈடுபடவும் உதவுகிறது.

உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினராக இலங்கையின் இறுதி வர்த்தகக் கொள்கை மீளாய்வு 2016 இல் நடத்தப்பட்டதுடன், அடுத்த மீளாய்வு 2025 ஒக்டோபர் 15 மற்றும் 17 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது. இந்த நோக்கத்திற்காக, உலக வர்த்தக அமைப்பின் செயலக அறிக்கையின் பணிகளை ஆரம்பிப்பதற்காக அவர்களால் அனுப்பப்பட்ட வினாக்கொத்திற்கு உரிய விரிவான தகவல்களை, திணைக்களம் தொடர்புடைய நிறுவனங்களுடன் (அமைச்சுகள், திணைக்களங்கள், சபைகள் போன்றவை) ஒருங்கிணைந்து வழங்கியது. மேலும், இலங்கை அரசால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கையும் தயாரிக்கப்பட்டு உலக வர்த்தக அமைப்பின் செயலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. உலக வர்த்தக அமைப்பின் ஏனைய உறுப்பினர்களால் இலங்கையின் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைகள் தொடர்பாக அனுப்பப்பட்ட 250 இற்கும் மேற்பட்ட வினாக்களுக்கு பதிலளித்தலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

#### ஆ) வர்த்தக தீர்வுகள் சட்ட வலுப்படுத்தல்

2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குவிப்பு எதிர்ப்பு மற்றும் எதிரீட்டு விளைவுகள் வரிச் சட்டத்தை செயல்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, உள்நாட்டு உற்பத்தியாளர் ஒருவர், குவிப்பு அல்லது எதிரீட்டு விளைவு வரி குறித்து விசாரணை நடத்துமாறு வர்த்தகப் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்கும் விதம் மற்றும் விலை நிர்ணய ஒப்பந்தத்தில் நுழைவதற்கான நடைமுறை ஆகியவை 2025.03.27 ஆம் தேதியிட்ட 2429/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டுள்ளன. இலங்கையின் 2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வர்த்தக தீர்வுச் சட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் சட்டம் ஆகியவற்றை உலக வர்த்தக அமைப்புக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தல் 2025 ஆம் ஆண்டின் மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சட்டங்களைச் செயல்படுத்தல் பற்றிய ஊடக சந்திப்பொன்று நடத்தப்பட்டு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், உள்நாட்டு உற்பத்தியாளர்களைத் தெளிவுபடுத்தும் பொருட்டு கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் துறைசார் குழுக்கள் மூலம் இரண்டு வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. வர்த்தகத் திணைக்களத்தினால் உலக வர்த்தக

அமைப்பின் வளப் பங்களிப்பாளர்களின் பங்களிப்புடன் அரச அலுவலர்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களை விழிப்புணர்வூட்டும் 4 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டது.

**இ) உலக வர்த்தக அமைப்பின் மீன்பிடி உதவுதொகை உடன்படிக்கை**

உலக வர்த்தக அமைப்பின் மீன்வள உதவுதொகை உடன்படிக்கையை அங்கீகரிப்பதற்கு ஆதரவளிக்கும் நாடாக, இலங்கை 2025 ஆகஸ்ட் இல் மீன்வள உதவுதொகை உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டதற்கான கடிதத்தை சமர்ப்பித்தது. இந்த உடன்படிக்கை கடற்றொழிலுக்கு உலக வர்த்தக அமைப்பின் சில உறுப்பு நாடுகள் வழங்கும் அதிகப்படியான உதவி (எரிபொருள், கப்பல்களை நவீனப்படுத்தல், பணத்தை மீளச்செலுத்துதல் போன்றவை) சில சந்தர்ப்பங்களில் பிடிக்கப்பட்ட மீன் வளங்கள் மற்றும் சட்டவிரோத (IUU) மீன்பிடி நடவடிக்கைகளுடன் தொடர்புபடும் வகையில் பரவலான பயன்பாட்டை காட்டுவதுடன் அவை தொடர்பில் உடன்படிக்கை எட்டப்பட்டு, முழுமையான வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதும் அழிந்து வரும் மீன் வளங்களைப் பாதுகாப்பதன் நோக்கத்திற்காகவும் உடனடி நடவடிக்கை எடுப்பதாகும். வர்த்தகத் திணைக்களம், இலங்கையின் ஏனைய நிரல் அமைச்சுகளுடன் ஒருங்கிணைந்து, இந்த உடன்படிக்கையை அங்கீகரிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் 2022 முதல் மேற்கொள்ளப்படுகிறது.

## ii) இருதரப்பு விவகாரப் பிரிவு

**அ) இலங்கை-சீனா இடையே பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழுவின் எட்டாவது அமர்வு**

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழுவின் 8 ஆவது அமர்வு கொழும்பில் இரு தரப்பிலிருந்தும் முக்கிய பங்குதாரர்களின் பங்கேற்புடன் வெற்றிகரமாக நடைபெற்றது. இரு தரப்பினரும் ஆழமான கலந்துரையாடல்களை நடத்தி, "பெல்ட் அன்ட் ரோடு" சிறந்த அபிவிருத்தி உத்தியின் உயர்தர வளர்ச்சியை ஊக்குவித்தல், வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் மற்றும் பல் தொழில் வர்த்தக அமைப்பை செயற்படுத்துதல் என்பன குறித்து உடன்பாடு எட்டப்பட்டது. இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான கூட்டுப் பணிக்குழுவை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் தொழில்நுட்ப மற்றும் விநியோக வலையமைப்புப் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளிட்ட இரண்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

**ஆ) இலங்கை-துருக்கி கூட்டு பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக் குழுவின் (JCETC) மூன்றாவது அமர்வு**

இலங்கை-துருக்கி கூட்டு பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு குழுவின் (JCETC) மூன்றாவது அமர்வு கொழும்பில் இரு தரப்பிலிருந்தும் முக்கிய பங்குதாரர்களின் பங்கேற்புடன் வெற்றிகரமாக நடைபெற்றது. இந்த அமர்வு வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, சுகாதாரம், தொழில்நுட்பம் மற்றும் கடல்சார் விவகாரங்கள் உள்ளிட்ட முக்கிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தியது. இலங்கை ஏற்றுமதிகளை ஊக்குவிக்கவும், ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் வாய்ப்புகளை ஆராயவும், முன்னுரிமைத் துறைகளில் துருக்கிய முதலீடுகளை ஊக்குவிக்கவும் துருக்கிக்கு இது ஒரு தளத்தை வழங்கியது. கல்வி, முதலீடு, சுகாதாரம், கலாச்சாரம், தொழில்துறை ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆகியவற்றில் எதிர்காலத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் (MOU) கைச்சாத்திடவும் இரு தரப்பினரும் உடன்பட்டனர். உடன்பட்ட தீர்மானங்கள் சந்தை அணுகலை மேம்படுத்தல், வணிகத்திலிருந்து வணிகம் சம்பந்தமான இணைப்புகளை வலுப்படுத்தல் மற்றும் இலங்கையின் ஏற்றுமதி ஊக்குவிப்பு உத்திகளை ஆதரித்தல் என்பவற்றை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

**இ) இலங்கை-அவுஸ்திரேலியா வர்த்தக மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பு ஏற்பாட்டின் (TIFA) கீழ் காலாண்டு பணிக்குழு கூட்டங்கள்**

ஆஸ்திரேலியா-இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டு கட்டமைப்பு ஏற்பாட்டுப் (TIFA) பணிக்குழு 2025 மார்ச் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் இரண்டு காலாண்டு கூட்டங்களை நடத்தியது. இந்த அமர்வுகள் தற்போதைய ஒத்துழைப்பை மீளாய்வு செய்யவும், தற்போதைய முதலீட்டு திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான எதிர்கால நடவடிக்கைகள், சந்தை அணுகல் சிக்கல்கள் மற்றும் தொழில்நுட்ப உதவி போன்றவற்றை விவாதிக்கவும் ஒரு வாய்ப்பை வழங்கின. வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்துவதற்கான புதிய நடவடிக்கைகளையும் இரு தரப்பினரும் மீளாய்வு செய்தனர். அத்துடன், அவுஸ்திரேலிய தரப்பின் பரிசீலனைக்காக இலங்கை பன்னிரண்டு புதிய திட்டங்களை சமர்ப்பித்தது. அவுஸ்திரேலியா இந்த முன்மொழிவுகளை அதன் தொடர்புடைய நிறுவனங்களுடன் கலந்துரையாடி மேலதிக தகவல்களை வழங்குவதற்கு உடன்பட்டது.

**ஈ) இலங்கை - பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஈரான் வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழு**

மேற்படி கூட்டு ஆணைக்குழுவின் அடுத்த அமர்வுக்கான தயாரிப்புகளின் ஒரு பகுதியாக, வர்த்தகத் திணைக்களத்தினால், நிரல் அமைச்சுகள் மற்றும் இலங்கை பங்குதாரர்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

**இ) ஜப்பான்-இலங்கை இருதரப்பு உறவுகள்**

வர்த்தகத் திணைக்களம், இலங்கை மற்றும் ஜப்பான் இணைந்து தயாரிக்கும் இலங்கை-இந்தியா ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில் வழித்தடத்திற்கான வரைவு முன்னோடித் திட்டத்தை (Draft Master Plan) தயாரிப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளது. ஜப்பான் ஒரு ஒத்துழைப்பு வசதியாளராக செயல்படுவதுடன், வர்த்தகத் திணைக்களத்தால் இந்தத் திட்டத்தைத் தயாரிப்பதில் வர்த்தக மற்றும் வணிக நடவடிக்கைகள் குறித்த பொருத்தமான தரவுகள் மற்றும் முன்மொழிவுகள் வழங்கப்பட்டுள்ளது.

## iii) வலய நடவடிக்கைப் பிரிவு

**அ) வங்காள விரிகுடா நாடுகளின் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான முன்னெடுப்பு (BIMSTEC)**

2025 மார்ச் **25** ஆம் திகதி பங்களாதேஷின் டாக்காவில் நடைபெற்ற வங்காள விரிகுடா பிராந்தியத்தின் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான பணிக்குழுவின் **(WGROO-BIMSTEC) 22** ஆவது கூட்டத்தில் இலங்கை பங்கேற்றது. இந்தக் கூட்டத்தில் **BIMSTEC** சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (**FTA**) பொருட்களின் தோற்றம் குறித்த விதிகளில் திருத்தம் மற்றும் அந்த விதிகளுக்கான செயற்பாட்டு சான்றிதழ் நடைமுறைகள் (**OCP**) குறித்து கலந்துரையாடப்பட்டது. விரிவான கலந்துரையாடல்களுக்குப் பின்னர், **BIMSTEC** சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான பொருட்களின் தோற்றத்தைத் தீர்மானிப்பதற்கான வரைவு விதிகள் பணிக்குழுவினால் இற்றைப்படுத்தப்பட்டு திருத்தஞ் செய்யப்பட்டது.

**ஆ) பொதுநலவாய வர்த்தக அமைச்சர்கள் மற்றும் சிரேஸ்ட அலுவலர்களின் கூட்டம்**

பொதுநலவாய வர்த்தக அமைச்சர்கள் மற்றும் சிரேஸ்ட அலுவலர்களின் கூட்டம் 2025 ஜூன் இல் நமீபியாவில் நடைபெற்றது. இலங்கை வர்த்தக அமைச்சரும் வர்த்தகத் திணைக்களத்தைச் சேர்ந்த இரண்டு சிரேஸ்ட அலுவலர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். டிஜிட்டல் வர்த்தகம், வர்த்தக வசதி, பசுமை வர்த்தகம், முக்கியமான கனிமங்கள் மற்றும் பலதரப்பு வர்த்தக அமைப்பை வலுப்படுத்துதல் ஆகியவை முக்கிய தலைப்புகளாக கலந்துரையாடப்பட்டன. பலதரப்பு வர்த்தக

முறைமை குறித்த பெறுபேற்றுக் கூற்று (Outcome Statement) மற்றும் பல்துறை வர்த்தக முறை பற்றிய கூட்டு பொதுநலவாய அறிக்கை (Joint Commonwealth Statement on the Multilateral Trading System) என்பனவற்றின் வரைவு ஆவணங்கள் அங்கீகரிக்கப்பட்டன. இந்தக் கூட்டத்தில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு கட்டமைப்பிற்கான ஆரம்பகால செயல்படுத்தல் திட்டங்களுக்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்டதுடன், உறுப்பு நாடுகளில் டிஜிட்டல் வர்த்தகத்தை வசதிப்படுத்துவதற்காக டிஜிட்டல் வர்த்தகம் குறித்த பொதுநலவாய மாதிரி சட்டத்தை (Commonwealth Model Law on Digital Trade) மேலும் வலுப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது.

### iv. வர்த்தக ஊக்குவிப்புப் பிரிவு

**அ) வர்த்தக விசாரணைகளைக் கையாளுதல்**

வர்த்தக அலுவலர்களிற்கு 481 வர்த்தக விசாரணைகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், இலங்கை உற்பத்திகளை வெளிநாட்டு சந்தையில் பிரபலப்படுத்தும் நோக்கில் தேவையான தகவல்/ வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டது. இலங்கை ஏற்றுமதியாளர்கள் மற்றும் பிற வர்த்தகம் தொடர்பான நிறுவனங்களிடமிருந்து திணைக்களத்திற்கு பெறப்பட்ட 38 விசாரணைகள் பின்தொடர்தலுக்காக வர்த்தக அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டன.

**ஆ) வர்த்தக பிணக்குகளைத் தீர்ப்பதில் உதவி வழங்குதல்**

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பான பிணக்குகளை இணக்கமாகத் தீர்ப்பதற்காக, பிணக்கில் உள்ள தரப்பினரின் அவதானிப்பைக் கோரி 77 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. வர்த்தகத் திணைக்களம், பிணக்கில் உள்ள தரப்பினரிடையே இணக்கமான தீர்வு மூலம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பான வர்த்தக பிணக்குகளைத் தீர்ப்பதற்கான ஒரு வசதியாளராகச் செயல்படுகிறது.

**இ) வதிவிட விசாக்களுக்கான பரிந்துரைகளை வழங்குதல்**

வர்த்தகம் மற்றும் சேவைத் துறைகளில் 87 வெளிநாட்டினர் மற்றும் 39 சார்ந்திருப்பவர்கள் மீளாய்வு செய்யப்பட்டு, வதிவிட விசா பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

**ஈ) இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (ISFTA) கீழ் ஆடை உற்பத்திகளுக்கு வழங்கப்பட்ட தீர்வை வரி விகித ஒதுக்கீட்டுச் சான்றிதழ்கள்**

7.74 மில்லியன் ஆடை உற்பத்திகளுக்கு 2,407 தீர்வை வரி விகித ஒதுக்கீட்டுச் சான்றிதழ்கள் (TRQC) வழங்கப்பட்டன.

**உ) பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் பாஸ்மதி அரிசி ஒதுக்கீட்டுக்கான வரி விலக்களிப்பிற்கான பரிந்துரைக் கடிதங்களை வழங்குதல்**

பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் 362 மெட்ரிக் தொன் பாஸ்மதி அரிசியை இறக்குமதி செய்வதற்கு 09 வரி விலக்கிப்புக்கான பரிந்துரைக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

**ஊ) வர்த்தக கண்காட்சிகள்/ கண்காட்சிகள்/ நிகழ்வுகளின் அமைப்பு**

வர்த்தகத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 9 ஆவது சீன-தெற்காசிய கண்காட்சிக்கு இலங்கை பிரதிநிதிகள் குழு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது, இதில் 87 நிறுவனங்கள் பங்கேற்றன.

**எ) வெளிநாட்டு வர்த்தக பிரதிநிதித்துவம்**

இந்த காலப்பகுதியினுள் வெளிநாடுகளில் உள்ள வர்த்தக அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் தொகுப்பு கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை இல 3.3 வெளிநாடுகளில் வர்த்தக அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

| தொடரில. | வர்த்தக அலுவலர்களின் பணிகள் | மொத்த செயற்பாடுகளின் எண்ணிக்கை 2025.01.01 முதல் 2025.09.30 வரை |
|---|---|---|
| 1 | வணிக சரிசெய்தல்களை மேற்கொள்ளல் (B2B கூட்டம்) | 1334 |
| 2 | வணிக வலையமைப்பு அமர்வுகளை நடத்துதல் | 164 |
| 3 | இலங்கை வர்த்தக ஊக்குவிப்பு திட்டங்களை பிற நாடுகளில் நடத்துதல் (வணிக மாநாடுகள், கருத்தரங்குகள் போன்றவை) | 52 |
| 4 | ஏனைய நாடுகளில் நடைபெறும் வர்த்தக கண்காட்சிகள்/ சந்தைகளில் இலங்கையர் பங்கேற்பை ஏற்பாடு செய்தல். | 55 |
| 5 | இலங்கையில் நடைபெறும் கண்காட்சிகள்/வர்த்தக கண்காட்சிகளுக்கான உள்ளக கொள்வனவுப் பங்கேற்பைஒழுங்கமைத்தல் | 34 |
| 6 | அமைச்சர்கள் மற்றும் ஏனைய பிரமுகர்கள் உட்பட இலங்கையிலிருந்து வர்த்தக பிரதிநிதிகள் ஓம்புகை நாட்டிற்கு வருகை தருவதை ஏற்பாடு செய்தல். | 39 |
| 7 | வர்த்தக பிணக்குகள்/ முறைப்பாடுகளைக் கையாளல் | 77 |
| 8 | ஏற்றுமதி வர்த்தக விசாரணை பொருட்டு நடவடிக்கை எடுத்தல் | 545 |
| 9 | சந்தைத் தகவல்கள் மற்றும் சந்தைப் பிரவேச அறிக்கைகள் வழங்கல் | 61 |
| 10 | இலங்கை கண்காட்சிகளை நடத்தும்/அதிகாமளிக்கப்பட்ட நாட்டில் மேம்பாட்டைச் செய்தல் | 119 |
| 11 | சாத்தியமான வணிக பங்குதாரர்கள் மற்றும் வர்த்தக சபைகளுடன் சந்திப்புகளை நடத்துதல் | 466 |
| 12 | சந்தை அணுகல் பிரச்சினைகளில் தலையிடுதல், ஓம்புகை நாட்டு அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்பு மற்றும் வர்த்தகக் கொள்கையில் ஓம்புகை அரசாங்கங்களுடன் ஒருங்கிணைதல். | 59 |
| 13 | ஏனைய வர்த்தகம் தொடர்பான நடவடிக்கைகள் (உதா; இலங்கையிலும் வெளிநாட்டிலும் உரிய விலைமனு கோரல்கள் (RFP) | 914 |
| 14 | முதலீட்டு மாநாடுகளை நடத்துதல் | 27 |
| 15 | முதலீட்டு முன்மொழிவுகளை கையாளுதல் | 84 |
| 16 | முதலீட்டு ஊக்குவிப்பு திட்டங்களை ஏற்பாடு செய்தல். | 45 |
| 17 | முதலீடு தொடர்பான ஏனைய நடவடிக்கைகள் (உதா; முதலீட்டு விசாரணைகளில் பங்கேற்றல் போன்றவை) | 80 |
| 18 | சுற்றுலா மற்றும் விளம்பர பிரச்சாரங்களைத் திட்டமிடுதல்/ஒழுங்கமைத்தல் உள்ளிட்ட சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிடுதல்/வசதிப்படுத்தல். | 98 |
| 19 | பிற நாடுகளில் நடைபெறும் சுற்றுலாக் கண்காட்சிகளில் இலங்கையின் பங்கேற்பை ஏற்பாடு செய்தல்/வசதி செய்தல். | 35 |
| 20 | சுற்றுலா தொடர்பான ஏனைய நடவடிக்கைகள் (உதா;சுற்றுலா விசாரணைகள் போன்றன) | 481 |
| 21 | இணைந்த ஆணைக்குழுகள்/வர்த்தகம் மற்றும் முதலீட்டு கட்டமைப்பு உடன்படிக்கைகளை (TIFAs) ஒருங்கிணைத்தல் | 03 |
| 22 | செயற்பாட்டுக், குழு ஒருங்கிணைப்பு | 13 |
| 23 | ஏனைய இயைபுடைய செயற்பாடுகள் (அதிகாரப்பூர்வ மேம்பாட்டு உதவி) | 39 |
| 24 | WTO/EU/FAO/IFAD/WFP/UNCTAD, ஆகியவற்றில் இலங்கையின் பிரதிநிதித்துவம் பற்றிய செயற்பாடு | 234 |

ஆதாரம் :வர்த்தகத் திணைக்களம்

## v. மூலச்சான்றுக் கொள்கைப் பிரிவு

### அ) மூலச் சான்றிதழ்கள் வெளியிடுதல் (COOs) மற்றும் ஏனைய உதவிச் சேவைகள்

மூலச்சான்றுக் கொள்கைப் பிரிவினால் வெளியிடப்படும் மூலச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய ஆதரவுச் சேவைகளுக்கான தரவு பின்வருமாறு

அட்டவணை இல 3. 4 மூலச் சான்றிதழ்களை வெளியிடுதல் மற்றும் பிற ஆதரவுச் சேவைகள்

| | |
|---|---|
| வழங்கப்பட்ட மூலச் சான்றிதழ்கள் | 21,450 |
| ISFTA இன் கீழ் கோட்டா ஒதுக்கீடு | 2,407 |
| முன்னுரிமை திட்டத்தின் கீழ் புதிய பதிவு | 29 |
| EU-REX பதிவு | 42 |
| செலவுக் கூற்றுகளுக்கான அங்கீகாரம் | 4050 |
| சத்தியப் பிரகடனம் | 713 |
| சரிபார்த்தல் | 122 |
| ஏற்றுமதியாளர்களுக்கு விபரமளித்தல்/ விளக்குதல் | 9,720 |
| வேலை செய்த நாட்களின் எண்ணிக்கை | 184 |
| வழங்கப்பட்ட மூலச் சான்றிதழ்களின் (COO)நாளாந்த சராசரி | 116 |

ஆதாரம் :வர்த்தகத் திணைக்களம்

## vi. ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் பிரிவு

### அ) ஏற்றுமதியாளர்களுக்கான தகவல் அமர்வுகளை ஒழுங்கமைத்தல்.

ஏற்றுமதியாளர்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இலக்காகக் கொண்டு EU GSP+ திட்டம் மற்றும் UK DCTS குறித்த தகவல் அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது. அமர்வில் பங்கேற்றவர்கள் வர்த்தகத் திணைக்கள அலுவலர்களால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப விளக்கக்காட்சிகளிலிருந்து பெறுமதிமிக்க அறிவைப் பெற்றுக்கொண்டனர்.

இந்த நிகழ்வில் 80 இற்கும் மேற்பட்ட இலங்கை தனியார் துறை ஏற்றுமதியாளர்கள் பங்கேற்று ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் வர்த்தக வசதி சூழலுக்கு ஏற்ப செயற்படுதல் குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது..

### ஆ) சிறு மற்றும் நடுத்தர அளவிலான ஏற்றுமதியாளர்களுக்கான விழிப்புணர்வு திட்டங்களை பிராந்திய மட்டத்தில் ஏற்பாடு செய்தல்.

வர்த்தகத் திணைக்களம், சிறு மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகத் துறையில் ஏற்றுமதியாளர்களுக்கான விழிப்புணர்வு அமர்வுகளை ஏற்பாடு செய்யத் தொடங்கியுள்ளதுடன், வெளிநாட்டு சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு ஏற்ற சிறு மற்றும் நடுத்தர அளவிலான ஏற்றுமதியாளர்களை இனங்காண கம்பஹா மற்றும் காலி மாவட்டங்களில் 100க்கும் மேற்பட்ட சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களுக்கு இரண்டு பயிற்சிப்பட்டறைகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

**இ) *வர்த்தக அலுவலர்களுடன்* வெளிநாட்டு சந்தைகள் குறித்து ஏற்றுமதியாளர்களை *தெளிவுபடுத்துவதற்கு* தொடர் வலைப்பக்கங்களை (Webinars) ஏற்பாடு செய்தல்**

அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா, இத்தாலி மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளின் வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்டு ஐந்து வலைப்பக்கங்கள் (Webinars) ஒழுங்கமைக்கப்பட்டன. ஏற்றுமதியாளர்களின் இயைபுடைய சந்தைகள் குறித்த புரிதலை மேம்படுத்துவதற்காக உரிய நாடுகளைச் சேர்ந்த வர்த்தக அலுவலர்கள் வளப் பங்காளர்களாக ஈடுபட்டனர். ஒவ்வொரு வலைப்பக்கத்திலும் 100 க்கும் மேற்பட்ட இலங்கை தனியார் துறை ஏற்றுமதியாளர்கள், அரச அலுவலர்கள் மற்றும் வர்த்தக சபைகளின் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ஈ) வருமானம் ஈட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம்**

அட்டவணை இல 3.5 வருமானம் ஈட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம்

| செயற்பாடு | முன்னேற்றம் 2025.09.30 வரை | |
|---|---|---|
| | நிதி(ரூ.) | பௌதிக % |
| சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள், பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் GSP திட்டத்தின் கீழ் ஏற்றுமதி கம்பனிகளைப் பதிவு செய்தல் | 435,000.00 | 29 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன |
| EU-REX முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் ஏற்றுமதி நிறுவனங்களைப் பதிவு செய்தல் | 630,000.00 | 42 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன |
| இலங்கையின் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள், பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் முன்னுரிமை வர்த்தகத் திட்டங்களின் கீழ் மூலச் சான்றிதழ்களை (COO) வழங்குதல் | 32,175,000.00 | 21,450 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. |
| இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (ISFTA) கீழ் ஆடைப் பொருட்களுக்கு வழங்கப்பட்ட தீர்வைவரி விகித ஒதுக்கீட்டுச் சான்றிதழ்கள் | 1,805,250.00 | 2,407 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன |
| வதிவிட விசா உரிமத்துக்கான பரிந்துரை வழங்கல் | 1,863,750.00 | 87 விண்ணப்பதாரர்களுக்கும் 39 தங்கியிருப்போருக்கும் வதிவிட விசா பரிந்துரைகள் வழங்கப்பட்டன. |

ஆதாரம் :வர்த்தகத் திணைக்களம்

## உ) மூலதனச் செலவினத்தில் முன்னேற்றம்

அட்டவணை இல 3. 6 மூலதனச் செலவினத்தில் முன்னேற்றம்

| வேலைத்திட்டம்/ செயற்பாடு | வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. மில்.(2024) | ஆரம்ப திகதி | முடிவுத் திகதி | ஒட்டுமொத்த இலக்கு 31.12.2025 | | ஒட்டுமொத்த முன்னேற்றம் 30.09.2025 | | பெறுபேறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நிதி (ரூ.மில்.) | பௌதிக % | நிதி (ரூ.மில்.) | பௌதிக % | |
| இலங்கை உற்பத்திகளுக்கான வெளிநாட்டுச் சந்தைகளை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள்/திட்டங்களை ஒழுங்கமைத்தல். | .25 | 01.01.2025 | 31.12.2025 | 25 | 100 | 12.363 | 50% | இந்தியாவின் அனுசரணையுடன் நடைபெறும் கண்காட்சியில் இலங்கையின் பங்களிப்பு<br>பாகிஸ்தானில் நடைபெறும் கராச்சி வர்த்தக கண்காட்சியில் இலங்கையின் பங்களிப்பு<br>சீனாவில் நடைபெறும் குன்மிங் வர்த்தக இலங்கையின் பங்களிப்பு |

ஆதாரம் :வர்த்தகத் திணைக்களம்

## 3.3 வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம்

### i. 2025.01.01 முதல் 2025.09.30 வரையான முன்னேற்ற வணிக உத்தி / செயல்பாட்டு வளர்ச்சி (Operational Development)

2025 ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலத்தில், நிறுவனம் ரூ. 37.5 பில்லியன் வருவாயைப் பதிவு செய்துள்ளது. இந்தக் காலகட்டத்தில், லங்கா சதோச எந்த மேலதிக கடன் வசதியும் பெறாது வெற்றிகரமாக செயல்பட்டு வருவதுடன், அதன் முழுமொத்த இலாப வரம்பை (gross profit margin) அதிகரிக்க முடிந்தது. அத்துடன், முறையான வணிக உத்திகளை (Business Strategy) செயல்படுத்துதல் மற்றும் செயல்பாட்டு குறிகாட்டிகள் (functional KPIs) மற்றும் கண்காணிப்பு முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் செயல்பாட்டு செயல்திறன் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது..

அட்டவணை இல 3. 7 செயற்பாட்டு நடவடிக்கையில் முன்னேற்றம்

| Month (2025) | Turnover (Rs Mn) |
|---|---|
| January | 4,501 |
| February | 4,021 |
| March | 4,400 |
| April | 5,255 |
| May | 3,782 |
| June | 3,593 |
| July | 3,852 |
| August | 4,077 |
| September | 4,055 |
| **Total** | **37,486** |




ஆதாரம் :வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம்

### ii. செலவுக் குறைப்பு உத்திகள் (Cost Minimization Strategies)

வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக செலவு குறைப்பு உத்திகளை செயல்படுத்தப்பட்டது. நட்டத்தை ஏற்படுத்தும் வணிக நிறுவனங்களை அடையாளம் கண்டு, அவற்றின் செயல்பாடுகளை கவனமாக பகுப்பாய்வு செய்து, செயல்பாட்டு இழப்புகளை மாற்றவும் குறைக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. விற்பனை செயல்திறனை தொடர்ந்து மதிப்பீடு செய்து, அதன் மூலம் நிர்வாகம் இழப்புகளைக் குறைத்து லாபத்தை மேம்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க முடிந்தது. 2025 ஆம் ஆண்டின் முதல் மாதத்தில், லங்கா சதோசா அதன் விற்பனை மற்றும் விநியோக செலவுகள் மற்றும் நிர்வாக செலவுகளை (admin cost) முந்தைய ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது 385 மில்லியன் ரூபாவினால் வெற்றிகரமாகக் குறைத்துள்ளது.

கடந்த ஆண்டு, லங்கா சதோசா அதிகபட்ச சில்லறை விலையை சராசரியாக 17% இனால் குறைப்பதன் மூலம் இந்த நன்மையை நுகர்வோருக்கு வழங்க முடிந்தது.

### iii. 2025 இல் திறக்கப்பட்ட விற்பனை நிலையங்களின் பட்டியல்

அட்டவணை இல 3. 8 2025 இல் திறக்கப்பட்ட விற்பனை நிலையங்களின் பட்டியல்

| | விற்பனை நிலையம் | மாவட்டம் | விற்பனை நிலையம் ஆரம்பித்த திகதி | புதிய/ இடம்பெயர்ந்தது |
|---|---|---|---|---|
| 1 | உகன | அம்பாறை - மட்டக்களப்பு | 20.06.2025 | இடம்பெயர்ந்தது |
| 2 | யந்தம்பலாவ | குருணாகல | 06.02.2025 | இடம்பெயர்ந்தது |
| 3 | லுணுவத்த | பதுளை | 01.02.2025 | புதிய நிலையம் |
| 4 | கிண்ணியா2 | பொலன்னறுவ - திருகோணமலை | 07.02.2025 | புதிய நிலையம் |
| 5 | கொச்சிக்கடை2 | கம்பஹா- 01 | 10.02.2025 | புதிய நிலையம் |
| 6 | நுவரெலியா | நுவரெலியா | 28.03.2025 | புதிய நிலையம் |
| 7 | தெனியாய(புதிய) | மாத்தறை | 08.04.2025 | புதிய நிலையம் |
| 8 | கிரப்பனே | அனுரதபுரம் | 26.04.2025 | புதிய நிலையம் |
| 9 | ஹல்முலுவ | கண்டி | 25.08.2025 | புதிய நிலையம் |
| 10 | திப்பிட்டிய | கேகாலை | 25.08.2025 | புதிய நிலையம் |
| 11 | போகஹகும்புர | பதுளை | 29.09.2025 | புதிய நிலையம் |

ஆதாரம் :வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம்

### iv. வட்டி வீதத்தைக் குறைத்தல் (Interest Rate Reduction)

ஒட்டுமொத்த நிதிச் செலவில் ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதற்காக, நிதி நிறுவனங்களுடனான பேச்சுவார்த்தைகள் மூலம் தற்போதைய வட்டி விகிதங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் விளைவாக, லங்கா சதோசவினால் முன்னர் 12% க்கும் அதிகமாக இருந்த வட்டி விகிதத்தை 9% ஆக வெற்றிகரமாகக் குறைக்க முடிந்தது. இதன் விளைவாக, நிறுவனம் அதன் சராசரி மாதாந்த மிகைப்பற்று (OD) வட்டி செலவை 2025 செப்டம்பர் இற்குள் ரூ. 60 மில்லியனிலிருந்து ரூ. 42.7 மில்லியனாகக் குறைக்க முடிந்தது. (செப்டம்பர் வரையான மொத்த சேமிப்பு ஏறத்தாழ 108 மில்லியன்) இது லாபத்தை மேம்படுத்தவும், பணப்புழக்கத்தை அதிகரிக்கவும், பணி மூலதனத்தின் மீதான அழுத்தத்தைக் குறைக்கவும் உதவியுள்ளது.

### v. விநியோஸ்தர்களுடன் பேச்சுவார்த்தைகள் (Negotiations with Suppliers)

கடன் காலத்தை நீடித்து நிலுவையில் உள்ள கடனை திருப்பிச் செலுத்தும் திட்டம் குறித்து கடன் வழங்குநர்களுடன் கலந்துரையாடப்பட்டது. இது லங்கா சதோசா நிறுவனத்திற்கு கையகப்படுத்தல் செலவைக் குறைத்து லாபத்தை மேம்படுத்த உதவும் வகையிலான, மிகவும் சாதகமான விலை நிர்ணய விதிமுறைகளைப் பெற உதவியுள்ளது. நிறுவனத்தின் குறுகிய கால பணப்புழக்க நிலைக்கான உடனடி பண வெளியேற்றங்களைக் குறைத்தலில் நேர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

### vi. மீள அனுப்பல் முகாமை மற்றும் இருப்பு இழப்பு மீட்புக் கொள்கை (Improved Return Management and Stock Loss Recovery Policy)

மீள அனுப்பல் முகாமை மற்றும் இருப்பு இழப்பு மீட்புக் கொள்கைகள் மூலம் செலவுகளைக் குறைப்பதற்கும் பணப்புழக்கத்தை அதிகரிப்பதற்கும் ஒரு முறையான அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. பொறுப்பான ஊழியர்களிடமிருந்து அடையாளம் காணப்பட்ட பங்கு இழப்பு நிலுவைகளை மீட்டெடுக்க ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன, மீட்டெடுக்கக்கூடிய நிலுவைகளில் ஒரு பகுதி சேகரிக்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள அறவீடு மேற்கொள்ளப்படுகிறது. பற்றாக்குறை அறவீட்டுக் குழு ஒன்று நிறுவப்பட்டு, பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவீடு மேற்கொள்ளப்படுவதுடன், குற்றப் பத்திரங்களை வெளியிடுவதன் மூலமும் ஒழுக்காற்று விசாரணைகளை நடத்துவதன் மூலமும் இருப்பு இழப்புகள் குறித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### vii. பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (Training and Development Programs)

அலுவலர்களின் திறன்கள் மற்றும் தேர்ச்சிகளை மேம்படுத்துவதற்காக பிராந்திய ரீதியாக பல பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த தொழில்நுட்ப அமர்வுகள் லங்கா சதோச விற்பனை வலையமைப்பின் ஒட்டுமொத்த செயல்திறன் மற்றும் சேவைத் தரத்தை மேம்படுத்த உதவியது.

### viii. ஏனைய முக்கிய நிலையான முன்னெடுப்புகள் (Other key sustainable initiatives)

நிலையான சொத்துக்கள் பதிவேட்டைப் (Fixed Assets Register) புதுப்பிக்க வெளியக கணக்காய்வு நிறுவனத்தால் நிலையான சொத்துக்கள் சரிபார்ப்பு (Fixed assets verification) தொடங்கப்பட்டது.

வெளியக கணக்காய்வு நிறுவனத்தின் ஊடாக கணினி அமைப்பில் உள்ள முறைகேடுகள் மற்றும் அளவு பிழைகளை விசாரிக்க ERP முறைமைக் கணக்காய்வு (ERP system Audit) தொடங்கப்பட்டது.

நிறுவனத்தின் ஆவணப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, ஆவண முகாமை முறை (Document Management system) அறிமுகப்படுத்தப்பட்டது.

கடந்த காலங்களில் நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் கணக்குகளில் உள்ள முறைகேடுகளை மீளாய்வு செய்ய தடயவியல் கணக்காய்வு ஒன்றை நடத்த ஒரு சேவை வழங்குநரைத் தேர்ந்தெடுக்கும் செயல்முறை நடந்து வருகிறது.

விற்பனை நிலையங்களில் நிலையான சொத்துக்களை (குளிர்சாதன பெட்டிகள், ஜெனரேட்டர்கள், போத்தல் குளிரூட்டிகள்) உடனடியாகக் கண்டறிந்து சீர்செய்ய கணினிமயமாக்கப்பட்ட தரவு அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் விற்பனை மிகவும் வினைத்திறனாக்கப்பட்டது.

நீண்ட காலமாக பணம் செலுத்த வேண்டியிருந்த 243 ஊழியர்களின் பணிக்கொடை கொடுப்பனவுகள் (gratuity payments) சரியான முறைமையின் கீழ் தீர்க்கப்பட்டன.

## 3.4 கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்

### i. நெல் கொள்வனவு மற்றும் கொள்வனவு செய்த நெல்லை அரிசியாக தூற்றுதல்

2024/25 பெரும் போகத்திற்காக 2025 ஏப்ரல் 24 முதல் 2025 ஜூலை 17 வரையிலான காலகட்டத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மொத்த நெல்லின் அளவு 3,831,894 கிலோகிராம் ஆகும். இந்த நெல் தொகை தற்போது அரிசியாக மாற்றப்பட்டு விற்பனைக்காக சந்தையில் விநியோகிக்கப்படுகிறது. அதன்படி ஏறத்தாழ, 145 மில்லியன் ரூபா பெறுமதியான அரிசி சந்தைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. 2025 சிறு போகத்திற்காக ஹிங்குரக்கொட, ராஜாங்கனை, நிகவெரட்டிய மற்றும் கந்துருவெல ஆகிய இடங்களில் நான்கு நெல் கொள்வனவு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், நெல் இருப்பு கொள்வனவு நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

### ii. மொத்த விற்பனை மத்திய நிலையங்களை நிறுவுதல்

குருநாகல் மற்றும் மாத்தறையில் மொத்த விற்பனை நிலையங்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மொத்த விற்பனை நிலையங்களை நிறுவுவதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களம் (Department of National Planning) அங்கீகாரம் அளித்துள்ளது. இந்த மொத்த விற்பனை நிலையங்களை நிறுவுவதற்கு அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் (Department of Public Enterprises) அங்கீகாரத்தைப் பெறுதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக நிர்மாண அவதானிப்பு ஆலோசகர் (consortium consultant) ஒருவர் நியமிக்கப்பட்டதுடன், பொருத்தமான நிர்மாண சேவை நிறுவனம் ஒன்றைத் தேர்ந்தெடுக்க விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதன்படி, அடுத்த கட்டமாக, மொத்த விற்பனை மத்திய நிலையத்திற்கு பொருத்தமான கட்டுமான சேவை நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்க தொழில்நுட்ப மதிப்பீடு நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், வவுனியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் நிறுவப்பட்ட கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்தின் இருப்பு சேகரித்தல் மற்றும் விற்பனை மத்திய நிலையத்தின் செயல்பாடுகள் என்பன 2025 செப்டம்பர் 03 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

### iii. வங்கிக் கணக்கிணக்கம் மற்றும் இறுதிக் கணக்குகள் தயாரித்தல்

சதோச நிறுவனத்தின் 2021 மற்றும் 2022 நிதியாண்டுகளுக்கான வங்கி கணக்கிணக்க நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு, தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள, அதே நேரத்தில் 2023 மற்றும் 2024 இற்கான வங்கி கணக்கிணக்க நடவடிக்கைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. 2021 இற்கான இறுதிக் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், 2022 இற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் பணி நிறைவடைந்துள்ளது. 2023 மற்றும் 2024 இற்கான இறுதிக் கணக்குகள் தயாரித்தல் திட்டமிடப்பட்டுள்ளது..

### iv. வாகனங்களினைப் பழுதுபார்த்தல்

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்திடம் 37 லொரிகள் உள்ளதுடன், இவை 2014/2015 காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டன. இந்த லொரிகள் தற்போது ஓட்டத்திற்குப் பொருத்தமற்ற நிலையில் உள்ளதுடன், 6 லொரிகள் பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன், மேலும் 4 லொரிகள் பழுதுபார்க்க வேண்டியிருப்பதாக இனங்காணப்பட்டுள்ளது.

**v. சொத்துகளின் மதிப்பீடு**

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தினால் ஏனைய தரப்பினருக்கு வரி அடிப்படையில் வழங்கப்பட்ட 27 சொத்துகளுக்கு அரச மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து மதிப்பீட்டுப் பெறுமதிகளை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், 14 சொத்துக்களுக்கான மதிப்பீட்டுப் பணிகள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளன. எஞ்சிய மதிப்பீடுகள் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன. பூர்த்தி செய்யப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் வரி உடன்படிக்கைகளில் கைச்சாத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.5 லலித் அத்துலத் முதலி மகபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

### i. 2025 இன் புலமைப்பரிசில் கொடுப்பனவு பற்றிய தகவல்கள் (பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்)

அட்டவணை இல 3. 9 2025 இன் புலமைப்பரிசில் கொடுப்பனவு பற்றிய தகவல்கள் (பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்)

| மாதம் | பல்கலைக்கழகங்களுக்கு (ரூ.) (B+C) A | மகபொல நம்பிக்கை நிதியப் பங்களிப்பு (ரூ.) B | திறைசேரியின் பங்களிப்பு (ரூ.) C | ஏனை நிறுவனங்களுக்கு (ரூ.) D | ஏனை நிறுவனங்களுக்கு கல்வி அமைச்சின் பங்களிப்பு | மாதாந்தம் மகபொல புலமைப்பரிசிலுக்கு வழங்கப்படும் மொத்த தொகை (ரூ.) B+D |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 209,341,650 | 106,867,950 | 102,473,700 | 12,213,100 | - | 119,081,050 |
| பெப்ரவரி | 196,772,800 | 100,458,400 | 96,314,400 | 1,305,400 | - | 101,763,800 |
| 2022/2023 ஜன/ பெப் | 144,982,700 | 74,023,350 | 70,959,350 | - | - | 74,023,350 |
| மார்ச் | 254,729,500 | 130,041,650 | 124,687,850 | 9,005,750 | - | 139,047,400 |
| ஏப்ரல் | 261,326,300 | 132,497,250 | 128,829,050 | 3,341,250 | - | 135,838,500 |
| மே | 359,570,550 | 182,360,900 | 177,209,650 | 2,822,050 | - | 185,182,950 |
| யூன் | 372,868,500 | 189,056,050 | 183,812,450 | 9,067,500 | - | 198,123,550 |
| யூலை | 331,445,900 | 168,102,700 | 163,343,200 | 882,550 | - | 168,985,250 |
| 2023/24 யூன் வரை | 193,568,150 | 98,402,700 | 95,165,450 | 9,900,000 | 7,351,250 | 108,302,700 |
| ஒகஸ்ட் | 348,448,300 | 176,681,600 | 171,766,700 | - | - | 176,681,600 |
| **மொத்தம்** | 2,673,054,350 | 1,358,492,550 | 1,314,561,800 | 48,537,600 | 7,351,250 | 1,407,030,150 |

ஆதாரம் :லலித் அத்துலத் முதலி மகபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

## ii. மொத்த புலமைப்பரிசில் வழங்கல் 2019 முதல் தற்போது வரை

அட்டவணை இல 3. 10 மொத்த புலமைப்பரிசில் வழங்கல் 2019 முதல் தற்போது வரை

| மாணவர்களை உள்ளீர்த்தல் | 20/2019 | 21/2020 | 22/2021 | 23/2022 | 24/2023 | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| பல்கலை மாணவர்கள் | 15,001 | 16,000 | 16,000 | 17,000 | 17,000 | 81,001 |
| உயர் கல்வித் தொழில்நுட்ப நிறுவன மாணவர் | 1,500 | 1,500 | 1,500 | 1,500 | 1,500 | 7,500 |
| ஏனைய நிறுவன மாணவர்கள் | 1,151 | 1,000 | 1,000 | 1,000 | 1,000 | 5,151 |
| **மொத்தம்** | 17,652 | 18,500 | 18,500 | 19,500 | 19,500 | **93,652** |

ஆதாரம் :லலித் அத்துலத் முதலி மகபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

## iii. பல்கலைக்கழக அனுமதி பெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கைக்கும் மகபொல புலமைப்பரிசில் பெற்றோருக்குமிடையான ஒப்பீடு

அட்டவணை இல 3. 11 பல்கலைக்கழக அனுமதி பெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கைக்கும் மகபொல புலமைப்பரிசில் பெற்றோருக்குமிடையான ஒப்பீடு

| வருடம் | 2019/20 | 2020/21 | 2021/22 | 23/2022 | 24/2023 |
|---|---|---|---|---|---|
| பல்கலைகழகங்களுக்கு உள்ளீர்க்கப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கை | 34,161 | 35,000 | 40,111 | 42,147 | 42,282 |
| வருமான எல்லையின் பிரகாரம் (ரூ. 5 இலட்சத்திலும் குறைந்த) தகைமை பெற்ற மாணவர் எண்ணிக்கை | 17,890 | 20,000 | 26,000 | 20,255 | - |
| மஹாபொல புலமைப்பரிசில் பெறுநர்களின் எண்ணிக்கை | 15,001 | 16,000 | 16,000 | 17,000 | 17,000 |
| வருமான எல்லையின் பிரகாரம் தகைமை பெற்ற மாணவர் எண்ணிக்கை, மொத்த மாணவர் எண்ணிக்கையின் சதவீதமாக | %52.37 | %57.14 | 64.82% | %47.58 | - |
| மஹாபொல பெறுநர்கள் மொத்த மாணவர் எண்ணிக்கையின் சதவீதமாக | %44 | %45.71 | 39.89% | 40.34% | 40.21% |
| வருமான எல்லையின் பிரகாரம் தகைமை பெற்ற மாணவர்களில் மஹாபொல பெறுநர்கள் | %84 | %86 | 61.5% | 84.77% | - |

ஆதாரம் :லலித் அத்துலத் முதலி மகபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

## 3.6 இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

### i. தராதர அங்கீகாரங்கள் வழங்குதல்

அட்டவணை இல 3. 12 தராதர அங்கீகாரங்கள் வழங்குதல்

| விடயப்பரப்பு | இரண்டாம் தரம் | மூன்றாம் தரம் | வழங்கப்பட்ட தராதர அங்கீகாரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| IAF பரஸ்பர அங்கீகாரம் | 1. பொருட்கள் சான்றுப்படுத்தல். | ISO/IEC 17065 | 17 |
| | 2. செயற்படுத்தல் மற்றும் சான்றுப்படுத்தல் நிறுவனங்கள் | ISO/IEC 17029 | 07 |
| | 3. தனியார் சான்றுப்படுத்தல் | ISO/IEC 17024 | 02 |
| | 4. முகாமை முறை சான்றுப்படுத்தல் பற்றிய தராதர அங்கீகாரம் வழங்கல் | ISO/IEC 17021-1 | 07 |
| | 4a. உணவுப் பாதுகாப்பு முகாமை முறை | ISO/IEC22000 (FSMS) | 06 |
| | 4b. தர முகாமை முறை சான்றுப்படுத்தல் | ISO 9001 (QMS) | 05 |
| | 4c. சூழல் முகாமை முறை சான்றுப்படுத்தல் | ISO 14001 (EMS) | 05 |
| | 4d. தொழிற் சுகாதார மற்றும் பாதுகாப்பு முகாமை முறை | ISO 4501 (OHSMS) | 05 |
| | 4e. வலு முகாமை முறை | ISO 50001 (EnMs) | 02 |
| | 4f. FSSC 22000 | FSSC 22000 Version 6 | 01 |
| ILAC பரஸ்பர அங்கீகாரம் | பரிசோதனை ஆய்வுகூடம | ISO/IEC 17025 | 135 |
| | மருத்துவ ஆய்வுகூடம் | ISO 15189 | 28 |
| | அளவுத்திருத்த ஆய்வுகூடம் | ISO/IEC 17025 | 19 |
| | ஆய்வு நிறுவனங்கள் | ISO/IEC 17020 | 11 |
| | திறன் பரிசீலனை வழங்கல் நிறுவனங்கள் | ISO/IEC 17043 | 03 |

ஆதாரம் :இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

### ii. 2025.01.01 முதல் 2025.09.30 வரை வழங்கப்பட்ட புதிய தராதர அங்கீகாரங்கள்

அட்டவணை இல 3. 13 2025.01.01 முதல் 2025.09.30 வரை வழங்கப்பட்ட புதிய தராதர அங்கீகாரங்கள்

| இல | நிறுவனத்தின் பெயர் | விடயப்பரப்பு |
|---|---|---|
| | **மருத்துவ ஆய்வுகூடம்** | |
| 01 | தேசிய குறிப்பு ஆய்வுகூடம் (National Reference Laboratory) | நுண்ணுயிரியல் (Performing Microbiology and Serology tests) |
| 02 | நோயியல் ஆய்வுகூடம், லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனை (Lady Ridgeway Hospital for Children) | நோயியல் (Performing Histopathology tests) |
| 03 | வயம்ப நோய் கண்டறியும் மருத்துவ ஆய்வுகூடம் (Wayamba Diagnostic Medical Laboratory) | மருத்துவ உயிர்இரசாயனவியல்/ இரசாயனவியல் நோயியல், இரத்தவியல், மருத்துவ நோயியல், நுண்ணுயிரியல் (Clinical Biochemistry/Chemical Pathology, Clinical Pathology, Haematology and Microbiology tests) |

| பரிசோதனை ஆய்வுகூடங்கள் | | |
|---|---|---|
| 04 | ஹங்வெல்ல ரப்பர் உற்பத்தி நிறுவனம் (Hanwella Rubber Products Laboratory - DPL group) | ரப்பர் மற்றும் ரப்பர் உற்பத்திச் சாலை இயந்திர மற்றும் இரசாயனப் பரிசோதனைகள் (Mechanical & Chemical Testing on rubber & Rubber products) |
| 05 | ஆடை, பொலிமர் மற்றும் காகித ஆய்வுகூடம் - இலங்கை தர நிர்ணய நிறுவனம் (Textile, Polymer and Paper Laboratory - SLSI) | துணி/ஆடைகளின் இரசாயன மற்றும் பொறிமுறை சோதனை (Chemical and Mechanical Testing on Fabric/Garments) |
| 06 | கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் (Veterinary Research Institute) | உணவு மற்றும் விவசாயப் பொருட்களின் உயிரியல் பரிசோதனை (Biological Testing on Food and Agricultural Products) |
| 07 | என்விரோஎக்விப்ட் (பிரைவேட்) லிமிடெட். இன் பேர்லூ ஆய்வுகூடம் (Perlo Laboratory of Enviroequiped (Pvt) Ltd.) | நீரில் ரசாயன சோதனைகளை நடத்துதல் (Chemical Testing on Water) |
| 08 | இன்டர்நேஷனல் லபோரட்டரீஸ் (பிரைவேட்) லிமிடெட்.. (International Laboratories (Pvt) Ltd) | உணவு மற்றும் விவசாயப் பொருட்களில் இரசாயன மற்றும் உயிரியல் சோதனைகளை நடத்துதல். (Chemical and biological Testing on Food & Agriculture products) |
| 09 | சாண்ட்ஸ் ஆக்டிவ் நிறுவனம் (Sands Active Ltd) | மருந்துப் பொருட்களின் இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் சோதனைகள் நடத்துதல் (Chemical & Microbiology Testing on Pharmaceutical products |
| 10 | இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனம் - பகுப்பாய்வு ஆய்வுகூடம் (Analytical Laboratory of SLINTEC) | உணவு மற்றும் விவசாய பொருட்களின் இரசாயன சோதனைகள் (Chemical Testing on Food & agriculture products) |
| 11 | சில்வர்மில் லங்கா பிரைவேட் லிமிடெட் (Silvermill Lanka (Pvt) Ltd) | உணவு மற்றும் விவசாய பொருட்களின் இரசாயன சோதனைகள் (Chemical Testing on Food & agriculture products) |
| 12 | ஜியோகெம் லங்கா தனியார் நிறுவனம் (Geo Chem Lanka (Pvt) Ltd**)** | பெட்ரோலியப் பொருட்களில் (எரிபொருள் எண்ணெய்) இரசாயன சோதனைகளை நடத்துதல். (Chemical Testing on Petroleum Products (Fuel oil). |
| 13 | தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (National Aquatic Resource Research & Development Agency (NARA)) | மீன் மற்றும் மீன் உற்பத்திகளில் இரசாயன சோதனைகளை நடத்துதல். (Chemical testing on Fish and Fish Products) |
| 14 | ஏசியன் லைப்ஃ சயன்ஸ் ஆய்வுகூடம் (Asian Life Science Laboratory ) | வாயுக்கள் மீதான இரசாயன சோதனைகள் (மருத்துவ நோக்கங்களுக்காக) (Chemical Testing on medical gas) |
| 15 | குளோபல் சயன்ரிபிக் ஆய்வுகூடம் - (Global Scientific Laboratories (Pvt) Ltd.) | நீர் மீதான இரசாயன சோதனை (Chemical testing on water) |

| | | |
|---|---|---|
| **அளவுத்திருத்த ஆய்வுகூடங்கள்** | | |
| 18 | கைட் சோல்யூஷன்ஸ் பிரைவெட் லிமிடெட் (Keit Solutions (Pvt) Ltd,) | பெரியளவு மற்றும் தொடர்பான அளவுத்திருத்தங்கள் (அழுத்தம் மற்றும் பாரிய அளவுத்திருத்தங்கள் (Performing Calibrations in Mass and related Quantities (Pressure and Mass calibrations) |
| 19 | அளவீடு, தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களம் | பெரியளவு மற்றும் தொடர்பான அளவுத்திருத்தங்கள் (பாரிய அளவுத்திருத்தங்கள்) Performing Calibrations in Mass and related Quantities (Mass calibrations) |
| 20 | மெட்ரோ கலிபிரேஷன் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட். | பெரியளவு மற்றும் தொடர்பான அளவுத்திருத்தங்கள் (அமுக்க அளவுத்திருத்தங்கள்) Performing Calibrations in Mass and related Quantities (Pressure calibrations) |
| **உற்பத்தி சான்றுப்படுத்தல் நிறுவனங்கள்** | | |
| 21 | சீசேர்ட் தனியார் நிறுவனம் (Ceycert (Pvt) Ltd) | அழகுசாதனப் பொருட்களுக்கான நல் உற்பத்தி நடைமுறைகள் (GMP for Cosmetics) |
| 22 | கொன்ட்ரோல் யூனியன் இன்ஸ்பெக்சன் - வியட்நாம் (Control Union Inspections (Pvt) Ltd - Vietnam) | பிரெண்ட ஒப் த சீ (Friend of the Sea) சான்றுப்படுத்தல் Friend of the Sea Certification Scheme |
| 24 | கொன்ட்ரோல் யூனியன் இன்ஸ்பெக்சன் - (Control Union Inspections (Pvt) Ltd.) | அழகுசாதனப் பொருட்களுக்கான நல் உற்பத்தி நடைமுறைகள் (GMP for Cosmetics) |
| 25 | இன்டெக்ஸ்போ சேர்டிபிக்கேசன் லிமிட். (Indexpo Certification (Pvt) Ltd.) | அழகுசாதனப் பொருட்களுக்கான நல் உற்பத்தி நடைமுறைகள் (GMP for Cosmetics) |
| **முறைமை சான்றுப்படுத்தல் நிறுவனங்கள்** | | |
| 26 | சீசேர்ட் தனியார் நிறுவனம் (Ceycert (Pvt) Ltd.) | சுற்றுச்சூழல் முகாமை முறைகள் (ISO 14001) மற்றும் தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு முகாமை முறைகள் (ISO 45001) சான்றுப்படுத்தல் Environment Management Systems (ISO 14001) and Occupational Health and Safety Management Systems (ISO 45001) certification |
| 27 | நொலேட்ஜ் மக் சேர்மடிபிக்கேசன் லிமிட்டெட் Knowledge Mag Certifications (Pvt) Ltd | உணவு பாதுகாப்பு முகாமை முறைகள் (ISO 22000) சான்றுப்படுத்தல் Food Safety Management Systems (ISO 22000) certification |
| 28 | சீசேர்ட் தனியார் நிறுவனம் (Ceycert (Pvt) Ltd.) | சக்தி முகாமை முறை (ISO 50001) சான்றுப்படுத்தல் Energy Management Systems Certification (ISO 50001) |
| 29 | கொன்ட்ரோல் யூனியன் இன்ஸ்பெக்சன் (Control Union Inspections (Pvt) Ltd. | தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு முகாமை முறைகள் (ISO 45001) சான்றுப்படுத்தல் |

| | | |
|---|---|---|
| | | Occupational Health and Safety Management Systems (ISO 45001) certification |
| 30 | முறை சான்றுப்படுத்தல் பிரிவு, SLSI (System Certification Division, SLSI) | FSSC 22000 சான்றுப்படுத்தல்<br>FSSC 22000 திட்டம் |
| **உறுதிப்படுத்தல் மற்றும் சரிபார்த்தல் நிறுவனங்கள்** | | |
| 31 | BM சேர்டிபிக்கேசன் லிமி.., SIA<br>(BM Certification Ltd ,SIA) | VERRA VCS மற்றும் கோல்ட் ஸ்ரான்டர்ட் - உலகளாவிய இலக்கிற்கு<br>(VERRA VCS and Gold Standard for Global goals (GS4GG)) |
| 32 | என்வியன்ஸ் சேர்வீசஸ் தனியார் நிறுவனம்-(Envience Services Pvt Ltd:) | கோல்ட் ஸ்ரான்டர்ட் - உலகளாவிய இலக்கிற்கு (Gold Standard for Global goals (GS4GG)) |
| 33 | சிரிம் QAS சர்வதேச நிறுவனம்<br>(SIRIM QAS International Sdn. Bhd) | ISO 14064-1:2018 – நிறுவன மட்ட சரிபார்த்தல்<br>ISO 14064 -1: 2018 - Organizational verification |

ஆதாரம் :இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

2025.01.01 முதல் 2025.09.30 வரை ஈட்டிய வருமானம் உள்நாட்டுத் தொகையிலிருந்து ரூ. 67.89 மில்லியன் மற்றும் வெளிநாட்டு ஒத்தியல்பு மதிப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து ஈட்டப்பட்ட வருமானம் ரூ. 78.72 மில்லியன் ஆகும்.

### 3.7 அளவீட்டு அலகுகள், தரநிலை மற்றும் சேவைகள் திணைக்களம்

#### i. உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் பணிகளின் முன்னேற்றம்

அட்டவணை இல 3. 14 உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் பணிகளின் முன்னேற்றம்

| வருமான வழிமுறை | | பௌதீக வளர்ச்சி | | வருமானம் (ரூ. மில்.) | |
|---|---|---|---|---|---|
| எண் திருத்தம் | | **இலக்கு** | **நிறைவேற்றிய அளவு** | **இலக்கு** | **உண்மை வருமானம்** |
| **01** | தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்தால் செய்யப்பட்ட திருத்தங்கள் | 1,125 | 1,118 | 3.78 | 5.71 |
| **பதிவு செய்த சான்றிதழ்களை வெளியிடுதல்** | | | | | |
| **02** | பதிவு செய்த சான்றிதழ்கள் வெளியிட்ட அளவு (புதுப்பித்தல், இறக்குமதி செய்து விற்றல், உற்பத்தி செய்து விற்றல் மற்றும் விற்பனை) | 375 | 517 | 1.13 | 1.52 |
| மாதிரி அங்கீகரித்தல் | | | | | |
| **03** | மாதிரி அங்கீகாரம் வழங்கிய அளவு | 40 | 35 | 0.9 | 0.87 |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | | | | | |
| **04** | நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 7 | | 0.75 | 0.57 |
| | திட்டமிடப்பட்ட பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை | | 5 | | |
| | கோரிக்கையின்பேரில் நடத்தப்பட்ட பயிற்சித் | | 2 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திட்டங்கள் | | | | |
| **சரிபார்த்தல்** நிகழ்ச்சித்திட்டங்கள் | | | | | |
| 05 | சரிபார்க்கப்பட்ட தரவு, அளவீட்டு உபகரணங்கள், தலைமை அலுவலகம் | 375,500 | 37,907 | 329.04 | 65.04 |
| | சரிபார்க்கப்பட்ட அளவீட்டு உபகரணங்களின் அளவு, மாவட்ட அலுவலகங்கள் | | 296,474 | | 248.85 |
| சுற்றிவளைப்புகள் | | | | | |
| 06 | சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை | 6,000 | 8,000 | - | **-** |
| | மேற்கொள்ளப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 12,000 | 16,000 | - | **-** |
| 07 | மேற்கொள்ளப்பட்ட முன்-பொதியிடல்களின் எண்ணிக்கை | 6,750 | 9,000 | **-** | **-** |
| | **மொத்தம்** | **401,797** | **369,058** | **335.6** | **321.99** |

ஆதாரம் :அளவீட்டு அலகுகள், தரநிலை மற்றும் சேவைகள் திணைக்களம்

### ii.United Nations Industrial Development Organization (**UNIDO**)

**ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பின் புதிய வேலைத்திட்டத்தின் ஊடாக இலங்கை இரசாயன அளவையியல் ஆய்வுகூடத்தின் புதிய ஆய்வுகூடத்திற்கு தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.**

### iii. வருமானம் ஈட்டல் செயற்பாடு

2025 செப்டம்பர் வரை, கைத்தொழில் எண்திருத்த வருமானம் ரூ. 5.71 மில்லியனாகவும், உபகரண மாதிரி அனுமதி வருமானம் ரூ. 0.88 மில்லியனாகவும், அளவீட்டு உபகரண சரிபார்ப்பிலிருந்து வருமானம் ரூ. 313.90 மில்லியனாகவும் இருந்தது.

## 3.8 விசேட பொருளாதார மத்திய நிலையங்கள்

இலங்கையில் பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்களை நிறுவுவதற்கான திட்டம் 1998 இல் தொடங்கியதுடன், இதன் முக்கிய நோக்கங்களாவன, கிராமப்புறங்களில் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களின் பொருட்களுக்கு ஒரு சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு உத்தியாக நியாயமான விலையை உறுதி செய்வதோடு, பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களை எளிதாக உற்பத்தி செய்தல் மற்றும் நாட்டின் நுகர்வோருக்கு நியாயமான விலையில். பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன் நாடு முழுவதும் ஒரு விநியோக வலையமைப்பை நிறுவுதல் என்பனவாகும். தற்போது,பொருளாதார மத்திய நிலையங்களின்சரியான செயல்பாட்டைப் பராமரிக்க தேவையான சட்ட ஆலோசனை, பின்னூட்டல் மற்றும் மதிப்பீடு என்பன வழங்கப்பட்டு வருகிறது.
அதன்படி, மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு

i. முகாமை அறக்கட்டளைகளுக்கான உறுப்பினர்களை நியமித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்
ii. வணிக வளாகங்களை குத்தகைக்கு எடுப்பது தொடர்பாக அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களுக்கும் பொதுவான குத்தகை உடன்படிக்கையைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
iii. பொருளாதார மத்திய நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் நில உரிமை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தல்
iv. பொருளாதார மத்திய நிலையங்களின் முகாமை கட்டமைப்பை விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்தல்

v. பொருளாதார மத்திய நிலையங்களின் மாதாந்த கணக்கு அறிக்கைகள், வருடாந்த கணக்கு அறிக்கைகள் மற்றும் நிலுவை வாடகை அறிவிடல் அறிக்கைகளை பரிசீலித்தல்.

vi. பொருளாதார மத்திய நிலையங்களின் வருடாந்த நிதி அறிக்கைகளை தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் அரச நிதித் திணைக்களத்துக்கு அனுப்புதல்.

vii. பொருளாதார மத்திய நிலையங்களின் கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்களை தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்புதல்.

viii. பொதுவாக பொருளாதார மத்திய நிலையங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்களைத் தயாரித்தல்.

ix. செயல்பாட்டு மட்டத்தில் இல்லாத பொருளாதார மத்திய நிலையங்களை செயல்பாட்டு மட்டத்திற்கு கொண்டு வருதல். (யாழ்ப்பாணம், வவுனியா)

x. முகாமை நம்பிக்கை நிதியம் நிறுவப்படாத விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு) மேல்நிலை மற்றும் மூலதனச் செலவினங்களுக்கான ஏற்பாடுகளை வழங்குதல்.

xi. சகல விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் 2025 செயல் திட்டம் மற்றும் 2025 வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை ஆய்வு செய்தல் மற்றும் உரிய அங்கீகாரம் வழங்குதல்.

xii. சகல விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் செயல் திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ள பெறுகை நடவடிக்கைகளை ஆய்வு செய்தல் மற்றும் அத்தியாவசிய பெறுகை நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் அளித்தல்.

xiii. 2025 ஜூன் 03 ஆம் திகதிய /25/0774/817/02 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, விசேட பொருளாதார மத்திய நிலையங்களை நிர்வகிப்பதற்காக ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனத்தை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தொடர்புடைய நிறுவனத்தை நிறுவுதல் மற்றும் அதன் பணிப்பாளர் சபைக் கூட்டங்களை ஒழுங்கமைத்தல்.

## i. விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் நிதியியல் முன்னேற்றம் (2025.01.01–2025.09.30)

அட்டவணை இல 3. 15 விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் நிதியியல் முன்னேற்றம் (2025.01.01–2025.09.30)

| தொடரில | விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் | மொத்த வருமானம் (ரூ.) | மொத்த செலவு (ரூ.) | செயற்பாட்டு இலாபம்/ நட்டம் (ரூ.)* |
|---|---|---|---|---|
| 01 | தம்புள்ள | 67,652,860.30 | 47,126,448.32 | 20,526,411.98 |
| 02 | நுவரெலியா | 24,437,247.76 | 11,175,285.27 | 13,261,962.49 |
| 03 | கெப்பிற்றிபொல | 24,002,005.25 | 13,578,937.02 | 10,423,067.98 |
| 04 | தம்புத்தேகம | 20,981,676.30 | 29,717,460.85 | (8,735,784.55) அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மூலதனச் செலவு உறப்பட்டுள்ளது |
| 05 | எம்பிலிபிட்டிய | 40,103,633.00 | 26,091,665.75 | 14,011,967.25 |
| 06 | மீகொட | 16,738,534.55 | 14,781,521.86 | 1,957,012.69 |
| 07 | வெலிசறை | 67,652,860.30 | 47,126,448.32 | (612,543.11) அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மூலதனச் செலவு உறப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| 08 | வெயாங்கொட | 14,017,823.00 | 7,036,649.76 | 6,981,173.24 |
| 09 | நாரஹேன்பிட்ட | 575,325,392.00 | 569,698,513.31 | 5,626,878.69 |
| 10 | ரத்மலான | 26,556,014.00 | 13,107,894.00 | 13,448,120.00 |
| 11 | பிலியந்தல | 8,517,485.02 | 6,489,936.25 | 2,027,548.77 |
| 12 | கந்தெஹந்திய | 583,120.00 | 315,407.24 | 267,712.76 |
| 13 | குருந்துவத்த | 3,714,273.34 | 1,528,165.11 | 2,186,108.23 |
| 14 | அம்பாறை | 1,052,629.00 | 356,106.84 | 696,522.16 |
| | **மொத்தம்** | **835,399,454.49** | **753,333,295.66** | **82,066,158.58** |

கணக்காய்வு செய்யப்படாத தகவல்.

ஆதாரம் :வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, அபிவிருத்திப் பிரிவு

### ii. விசேட பொருளாதார மத்திய நிலையங்களில் 2025 இல் முகாமையிடப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு நிதிகளால் அனுமதியளிக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் பெறுகை நடவடிக்கைகள்

அட்டவணை இல 3. 16 விசேட பொருளாதார மத்திய நிலையங்களில் 2025 இல் முகாமையிடப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு நிதிகளால் அனுமதியளிக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் பெறுகை நடவடிக்கைகள்

| தொடரில | விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் | அபிவிருத்திப் பணி/ பெறுகை நடவடிக்கைகள் | மதிப்பிடப்பட்ட நிதி (ரூ.) |
|---|---|---|---|
| 01 | தம்புள்ள | - | |
| 02 | நுவரெலியா | போட்டோப் பிரதி இயந்திரம் ஒன்று கொள்வனவு | 300,000 |
| 03 | கெப்பிற்றிபொல | - | |
| 04 | தம்புத்தேகம | - | |
| 05 | எம்பிலிபிட்டிய | பொருளாதார மத்திய நிலைய முகாமைப் பொறுப்பு அலுவலகத்திற்கு நாற்காலிகள் மற்றும் மேசைகள் கொள்வனவு<br>பொருளாதார மத்திய நிலையத்திற்கு எழுதுபொருட்கள் கொள்வனவு | 115,000<br>145,000 |
| 06 | மீகொட | - | |
| 07 | வெலிசறை | - | |
| 08 | வெயாங்கொட | - | |
| 09 | நாரஹேன்பிட்ட | - | |
| 10 | ரத்மலான | - | |
| 11 | பிலியந்தல | பொருளாதார மத்திய நிலையங்களின் நிலத்திலுள்ள குழிகளை, பிரிமிக்ஸ் பயன்படுத்துவதன் மூலம் சரிசெய்தல். | 803,673 |
| 12 | கந்தெஹந்திய | - | |
| 13 | குருந்துவத்த | - | |
| 14 | அம்பாறை | - | |

ஆதாரம் :வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, அபிவிருத்திப் பிரிவு

### iii. செயற்பாட்டு மட்டத்தில் அல்லாது இருந்தவற்றை செயற்பாட்டு மட்டத்திற்கு மாற்றப்பட்ட விசேட பொருளாதார மத்திய நிலையங்கள்

அட்டவணை இல 3. 17 செயற்பாட்டு மட்டத்தில் அல்லாது இருந்தவற்றை செயற்பாட்டு மட்டத்திற்கு மாற்றப்பட்ட விசேட பொருளாதார மத்திய நிலையங்கள்

| தொடரில | விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் | செயற்பாட்டு மட்டத்திற்கு மாற்றியதற்கான செலவு (ரூ. மில்.) | மீள ஆரம்பிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 01 | வவுனியா விசேட பொருளாதார மத்திய நிலையம் | 1.223 | 2025.09.03 |
| 02 | யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலையம் | 2.515 | 2025.09.30 |

ஆதாரம் :வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, அபிவிருத்திப் பிரிவு

## 3.2. இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

### i. நிறுவனப் பணிகளின் பௌதிக வளர்ச்சி

### (அ) காப்புரிமை (2025.01.01முதல் 2025.09.30 வரை)

அட்டவணை இல 3. 18 பௌதிக வளர்ச்சி

| | வருடாந்த இலக்கு | III ஆம் காலாண்டு வரையான இலக்கு | எண்ணிக்கை முன்னேற்றம் | முன்னேற்றம் - சதவீதமாக | |
|---|---|---|---|---|---|
| | | | | வருடாந்த இலக்கு அடிப்படையில் | III ஆம் காலாண்டு வரையான இலக்கின் மீது |
| பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 420 | 315 | 365 | 86.90% | 115.87% |
| ஆரம்பப் பரிசீலனை செய்யப்பட்ட எண்ணிக்கை | 420 | 315 | 398 | 94.76% | 126.35% |
| இரண்டாம் நிலைப் பரிசோதனை செய்யப்பட்ட எண்ணிக்கை | 720 | 540 | 444 | 61.67% | 82.22% |
| பகிரங்கப்படுத்தப்பட்ட எண்ணிக்கை | 200 | 150 | 132 | 66.00% | 88.00% |
| பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 200 | 150 | 124 | 62.00% | 82.67% |

ஆதாரம் : இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

## (ஆ) கைத்தொழில் வடிவமைப்புகள் (2025.01.01முதல் 2025.09.30 வரை)

அட்டவணை இல 3. 19 கைத்தொழில் வடிவமைப்புகள்

| | வருடாந்த இலக்கு | III ஆம் காலாண்டு வரையான இலக்கு | எண்ணிக்கை முன்னேற்றம் | முன்னேற்றம் - சதவீதமாக | |
|---|---|---|---|---|---|
| | | | | வருடாந்த இலக்கு அடிப்படையில் | III ஆம் காலாண்டு வரையான இலக்கின் மீது |
| பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 175 | 131 | 102 | 58.29% | 77.86% |
| ஆரம்பப் பரிசீலனை செய்யப்பட்ட எண்ணிக்கை | 175 | 131 | 173 | 98.86% | 132.06% |
| இரண்டாம் நிலைப் பரிசோதனை செய்யப்பட்ட எண்ணிக்கை | 175 | 131 | 150 | 85.71% | 114.50% |
| பகிரங்கப்படுத்தப்பட்ட எண்ணிக்கை | 80 | 60 | 72 | 90.00% | 120.00% |
| பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 80 | 60 | 52 | 65.00% | 86.67% |

ஆதாரம் : இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

## (இ) வர்த்தகச் சின்னங்கள் (2025.01.01முதல் 2025.09.30 வரை)

அட்டவணை இல 3. 20 வர்த்தகச் சின்னங்கள்

| | வருடாந்த இலக்கு | III ஆம் காலாண்டு வரையான இலக்கு | எண்ணிக்கை முன்னேற்றம் | முன்னேற்றம் - சதவீதமாக | |
|---|---|---|---|---|---|
| | | | | வருடாந்த இலக்கு அடிப்படையில் | III ஆம் காலாண்டு வரையான இலக்கின் மீது |
| பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 12,000 | 9000 | 9890 | 82.42% | 109.89% |
| இரண்டாம் நிலைப் பரிசோதனை செய்யப்பட்ட எண்ணிக்கை | 18,450 | 13838 | 13792 | 74.75% | 99.67% |
| ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 18,450 | 13838 | 13105 | 71.03% | 94.70% |
| பகிரங்கப்படுத்தப்பட்ட எண்ணிக்கை | 9,600 | 7200 | 5518 | 57.48% | 76.64% |
| பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 10,500 | 7875 | 4080 | 38.86% | 51.81% |

ஆதாரம் : இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

## ii. 2025 இல் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள்

### அ) புலமைச் சொத்துக் கோப்புகளை டிஜிட்டல் மயமாக்கும் வேலைத்திட்டத்தை செயற்படுத்துதல்

தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தில் உள்ள ஏறத்தாழ இரண்டு லட்சத்திற்குக் குறையாத பௌதிக ஆவணக் கோப்புகளை ஸ்கான் செய்து டிஜிட்டல் மயமாக்குவதை நோக்கமாகக் கொண்ட இந்த வேலைத்திட்டம், சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கும், நெறிப்படுத்தப்பட்ட சேவை வழங்கல் முறையை நிறுவுவதற்கும், உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பால் இலங்கைக்கு வழங்கப்படும் இலவச சேவையாகும்.

இந்த வேலைத்திட்டத்தைத் தொடங்குவதற்காக இந்த ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி உலக புலமைச் சொத்து அமைப்புக்கும் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கும் இடையே ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன், இந்த வேலைத்திட்டம் அந்த அமைப்பால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சேவை வழங்குநர் மூலம் செயல்படுத்தப்பட்டது. எதிர்வரும் வருடத்தில் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் 47% ஆகும்.

### ஆ) மட்ரிட் அமைப்பு முறையை அணுகுவதற்கான அடிப்படை பணிகளை நிறைவு செய்தல்

சர்வதேச வர்த்தக சின்னங்களைப் பதிவு செய்வதற்கான வசதி குறித்த மட்ரிட் அமைப்புப் பத்திரத்திற்குள் நுழைதற்காக புலமைச் சொத்துச் சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்குத் தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட வரைவு, உலக புலமைச் சொத்து அமைப்பின் அவதானிப்புகள் மற்றும் ஒப்புதலுடன் சட்ட வரைவாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டது. சட்ட வரைஞரின் அங்கீகாரத்தைப் பெற்றதன் மேல், சட்டமா அதிபரின் அங்கீகாரத்துடன் மேற்படி அமைச்சரவை விஞ்ஞாபனம் இந்த வருடத்தினுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### இ) புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதற்கு வசதியளித்தல்

ஏதேனும் உற்பத்தி ஒன்று புவியியல் தோற்றம் போன்ற தனித்துவமான பண்பு இருந்தால், அதை புவியியல் குறிகாட்டியாகப் பதிவு செய்தல் சர்வதேச சந்தைப் போட்டியில் ஏற்றுமதியாளர்களுக்கு மிகவும் சாதகமான நிலையை அளிக்கும். இலங்கையில் உள்ள தேசிய புலமைச் சொத்து அலுவலகம் (NIPO) இந்த வருடம் முதன் முறையாக புவியியல் குறியீடுகளைப் பதிவு செய்தலை ஆரம்பித்ததுடன், இதுவரை, புவியியல் குறிகாட்டிகளாகப் பதிவு செய்வதற்கான இரண்டு விண்ணப்பங்கள் நிறுவனத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. புவியியல் குறிகாட்டிகள் குறித்து உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தொடர்ச்சியான சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கும் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### ஈ) புலமைச் சொத்துகளை ஊக்குவித்தல்

ஒரு நாட்டின் வளர்ச்சியில் புலமைச் சொத்து விடயம் ஒரு சிறப்புப் பங்கை வகிக்கிறது. பொருளாதார வளர்ச்சியில் புலமைச் சொத்துக்களின் பயன்பாடு குறித்து உற்பத்தியாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் பயனர்களின் விழிப்புணர்வில் உள்ள இடைவெளியைக் குறைக்க தயாரிக்கப்பட்ட தொடர்ச்சியான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்த-ன் ஊடாக நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகின்றன. அதன்படி, 2025 ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலப்பகுதியில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட புலமைச் சொத்து மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்துடன் சேர்த்து 5 பௌதீக நிகழ்ச்சித்திட்டங்கள் அடங்கலாக, 13 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன.

#### உ) பதிப்புரிமைப் பாதுகாப்பை முறைப்படுத்துதல்

பதிப்புரிமை என்பது படைப்பாளர்களுக்கு அவர்களின் இலக்கிய மற்றும் கலைப் படைப்புகள் மீது வழங்கப்படும் சட்டப்பூர்வ உரிமையாகும். இது பதிப்பாசிரியர்களின் உரிமைகளையும் பாதுகாப்பதுடன், அவர்களின் பொருளாதார நன்மைகள் மற்றும் அங்கீகாரத்தை உறுதி செய்கிறது. இது இலக்கிய மற்றும் கலைத் துறைகள் மற்றும் முதலீடுகளில் படைப்பாற்றலை ஊக்குவிக்கிறது.

இலங்கை இசைக்கலைஞர்கள், கலைஞர்கள் மற்றும் படைப்பாளர்களுக்கு புலமைச் சொத்து பற்றிய மேலதிக அறிவை வழங்கவும், அவர்களின் படைப்புகளின் பாதுகாப்பு மற்றும் வணிக ரீதியான சுரண்டலை முறைப்படுத்தவும், கூட்டு சங்கங்களின் செயற்பாடுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உலக புலமைச் சொத்து அமைப்பு (WIPO) உடன் இணைந்து சர்வதேச வள பங்களிப்பாளர்களின் பங்கேற்புடன் இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை 2025 ஏப்ரல் இல் கொழும்பில் நடைபெற்றது.

அதன்படி, உலக புலமைச் சொத்து அமைப்பு மற்றும் ஐக்கிய கூட்டுச் சங்கம் என்பவற்றிற்காகத் தயாரிக்கப்பட்ட செயற் திட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

#### ஊ) தகவல் தொழில்நுட்பம் தொடர்பான மேம்பாடுகள்

2025-02-28 முதல், காப்புரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புகளுக்காக பெறப்பட்ட அனைத்து கடிதங்கள் மற்றும் விண்ணப்பதாரர்களுக்கு நிறுவனம் அனுப்பும் அனைத்து கடிதங்கள் என்பன கைத்தொழில் சொத்து நிர்வாக முறையில் (IPAS) டிஜிட்டல் முறையில் உள்ளடக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறே, டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தின் மூலம் தற்போது டிஜிட்டல் மயமாக்கலுக்கு இலக்காகக் கொண்ட கோப்புகளின் டிஜிட்டல் பிரதிகள் IPAS முறைக்கு உள்ளிடப்பட்டுள்ளன.

உலக புலமைச் சொத்து அமைப்பால் வர்த்தக முத்திரைப் பதிவுகள் குறித்து பராமரிக்கப்படும் ஒரு தரவுத்தளமான குளோபல் பிராண்ட் டேட்டா பேஸ் (Global Brand Data Base), 2025 ஏப்ரல் முதல் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்ட மற்றும் வெளியிடப்பட்ட வர்த்தக முத்திரைகளைப் பட்டியலிடல் ஆரம்பிக்கப்பட்டது.

நிறுவனம் வலையமைப்பு முறைப் பாதுகாப்பிற்காக ஒரு ஃபயர்வாலை (Firewall) நிறுவியுள்ளது. நிறுவனத்தின் அலுவலர்களுக்கு அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் முகவரிகளை வழங்க தேவையான பெறுகைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் முகவரிகளின் பயன்பாடு நவம்பர் மாத தொடக்கத்தில் இருந்து ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.10 நுகர்வோர் விவகார அதிகாரசபை

### i. 2025 ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையான நிறுவனத்தின் முன்னேற்றம்

அட்டவணை இல 3.21 நுகர்வோர் விவகார அதிகாரசபை செயற்பாடுகளின் முன்னேற்றம்

| செயற்பாடுகள் | முன்னேற்றம் |
|---|---|
| **நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் உதவிச் சேவைகள்** | |
| சந்தைச் சுற்றிவளைப்புகள் | 14,896 |
| வழக்குத் தொடுத்தல் | 15,047 |
| தண்டப்பணம் (ரூபா) | 210,929,000 |
| மாதிரிப் பரிசோதனை | 80 |

| | |
|---|---|
| **நுகர்வோர் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்துதல் - 2025 ஜனவரி முதல் ஆகஸ்ட் 31 வரை** | |
| வர்த்தக விழிப்பூட்டல் | 250 |
| பொதுசன விழிப்பூட்டல் | 350 |
| பாடசாலைகளில் விழிப்பூட்டல் | 200 |
| நடமாடும் விழிப்பூட்டல்கள் (வர்த்தக) | 200 |
| நடமாடும் விழிப்பூட்டல்கள் (பொதுசன) | 100 |
| **எழுத்து மூலம் பெறப்பட்ட நுகர்வோர் முறைப்பாடுகள்** | |
| புதிதாக முறைப்பாடுகளைப் பெறுதல் | 1240 |
| நிராகரித்தல், ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்புதல் மற்றும் சுற்றிவளைப்புகள் | 277 |
| விசாரணைகள் | 646 |
| விசாரணைகளிற்காக கிடைத்த புதிய முறைப்பாடுகள் | 6 |
| நுகர்வோர் முறைப்பாடு பற்றி நடத்தப்பட்ட விசாரணைகள் 13 மற்றும் 32 ஆம் பிரிவின் பிரகாரம் | 118 |
| விசாரணைகளின் போது முறைப்பாடுகளைத் தீர்த்தல் | 19 |
| கட்டளை வெளியிடுதல்- 13 (4) ஆம் பிரிவின் படி | 41 |
| நீதிமன்ற வழக்குகள் - உத்தரவுகளை செயற்படுத்துதல்- (13(6) மற்றும்32 (7) | 23 |
| சட்ட வலுவாக்கற் பிரிவினால் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற வழக்குகள் (நுகர்வொர் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவுகள் 11,30,31 மற்றும் 57) | 29 |
| நீதிமன்ற முறைப்பாடுகள்,<br>-நீதவான் மன்றம்<br>- உச்ச நீதிமன்றம்<br>- மேல்முறையீட்டு நீதிமன்றம்<br>- உயர் நீதிமன்றம்<br>- மாவட்ட நீதிமன்றம்<br>- வர்த்தக உச்ச நீதிமன்றம் | 455<br>374<br>10<br>34<br>24<br>10<br>6 |
| 2025 இல் CAA நிறுவனத்திற்கெதிராக கோப்பிடப்பட்ட நீதிமன்ற வழக்குகள் | 7 |
| அவதானிப்புகளைத் தயாரித்தல் | 7 |
| சட்ட ஆலோசனைக்கு முகங்கொடுத்தல் | 36 |
| நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டப்பணத் தொகை (ரூ.) | 1.015.000 |
| **பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானிகள்**<br>- வெளியிடப்பட்ட கட்டளைகள் - சட்டத்தின் 20(5) பிரிவு, 18 ஆம் பிரிவு | 93- தண்ணீர் போத்தல்களுக்கு அதிகபட்ச சில்லறை |

| | |
|---|---|
| - வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் - சட்டத்தின் 10, 12 ஆம் பிரிவுகள் | விலை<br><br>94-ஒழுங்குவிதி 26 இனை நீக்குதல் |
| **வர்த்தகம் குறித்த முறைப்பாடுகளை விசாரித்தல்** | |
| பொருளாதார செறிவைக் கட்டுப்படுத்துதல் அல்லது நீக்குதல் ஆரோக்கியமான போட்டியை ஊக்குவித்தல் - போட்டி எதிர்ப்பு மற்றும் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல். | |
| - விசாரணை நடந்து வருகிற முறைப்பாடுகள் | 50 |
| - கடந்த ஆண்டு பெறப்பட்ட முறைப்பாடுகளில் இருந்து இந்த ஆண்டு தீர்க்கப்படும் முறைப்பாடுகள். | 41 |
| - 2025 இல் செய்யப்பட்ட முறைப்பாடுகள் | 39 |
| - தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள் | 30 |
| - போட்டி எதிர்ப்பு நடத்தை - சந்தைச் சுற்றிவளைப்பு | 10 |
| அதிகாரசபையின் செயல்பாடுகள் மற்றும் பிற ஒழுங்குமுறைகள் குறித்து வர்த்தகர்களுக்கு தெளிவுபடுத்தல், ஆலோசனை நிகழ்ச்சிகளை நடத்துதல். | 08 |
| **இனங்காணப்பட்ட பொருட்களின் இறக்குமதியைத் தடுத்து வரி/வரிகள் விதிப்பு மூலம் உள்நாட்டு கைத்தொழில் போட்டி எதிர்ப்பு நடைமுறைகளிலிருந்து பாதுகாத்தல்** | |
| ஒழுங்குவிதி இல.. 87 (HS குறியீடு 5) செயல்படுத்தல் | 180 |
| ஒழுங்குவிதி இல.. 87 இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் அதிகபட்ச சில்லறை விலைகளை தொடர்புடைய சந்தையில் கண்காணித்தல். | 100 |
| **ஆரோக்கியமான சமுதாயத்தை மேம்படுத்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆய்வுகளை நடத்துதல்**<br>- சந்தை நுண்ணறிவு ஆய்வுகளை நடத்துதல்<br>- அறிக்கைகளை வழங்குதல் | <br><br>03<br>03 |
| **விலை திருத்த விண்ணப்ப மதிப்பீடு மற்றும் பரிந்துரை வழங்கல்** | |
| பிரிவு 19 இன் கீழ் நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு பரிந்துரைக்கப்பட வேண்டிய பொருட்களை இனங்காணுதல். | 07 |
| தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கான மாவட்ட ரீதியான சில்லறை விலைத் தரவுகளைச் சேகரித்து அறிக்கை செய்தல். | 106 |
| மதிப்பிடப்பட்ட அதிகபட்ச சில்லறை விலை அறிக்கையின் வாராந்த விலை வரம்பினை அறிக்கையிடல் | 35 |
| தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் பட்டியலுக்கான மாதாந்தம் கிடைக்கும் தன்மை முன்னறிவிப்பு அறிக்கையைத் தயாரித்தல் | 09 |

ஆதாரம் :நுகர்வோர் விவகார அதிகாரசபை

## 3.11 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

### i. சங்கப் பிரிவின் முன்னேற்றம்

அட்டவணை இல 3. 22 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் சங்கப் பிரிவின் முன்னேற்றம்

| தொடரில | செயற்பாடுகள் | முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | புதிய கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல்<br>கோரிக்கை கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | -<br>26 |
| 2 | செயல்பாடு பலவீனமான கூட்டுறவு சங்கங்கள்/ஒன்றியங்களை மீளச் செயல்படுத்துதல்<br>ஆரம்ப கலந்துரையாடல் நடத்துதல், அவதானித்தல், செயல்படுத்துதல் | -<br>7<br>6 |
| 3 | செயற்பாடற்ற கூட்டுறவு சங்கங்கள்/ ஒன்றியங்களை கலைப்பதற்கான அறிக்கைகளைத் தயாரித்தல். | 3 |
| 4 | புதிய வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்களைச் செய்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் உதவுதல் (இனங்காணப்பட்ட 3 திட்டங்கள்)<br>சுகாதாரப் பணியாளர் உறுப்பினர்களைக் கொண்ட சங்கத்தின் ஊடாக<br>- நோயாளிகளுக்கு தாதியர் சேவைகளை வழங்குதல்<br>- குழந்தை/ முதியோர் பராமரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல் | 1 |
| 5 | கூட்டுறவு சங்கங்கள்/ ஒன்றியங்கங்களின் (5 சங்கங்கள்/ ஒன்றியங்கள்) உப சட்டங்களில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்குத் தேவையான பரிந்துரைகளைச் செய்தல். | 6 |
| 6 | கூட்டுறவு சங்கங்கள்/ ஒன்றியங்கங்களின் பொதுக் கூட்டங்களை நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் நடத்துவதற்கான வழிமுறைகளை வழங்குதல். | 04 |
| 7 | கூட்டுறவு சங்கங்கள்/ ஒன்றியங்களின் நிர்வாகிகள் தேர்தலை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நடத்த தேவையான ஏற்பாடுகளைச் செய்தல். | 04 |
| 8 | தேர்தல் முறை இல்லாத கூட்டுறவு சங்கங்கள்/ ஒன்றியங்களை அடையாளம் கண்டு வழிநடத்துதல். | 04 |
| 9 | சபை உறுப்பினர்களின் சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளைப் பெறுதல் (55 சங்கங்கள், 15 ஒன்றியங்கள்) | 16 |
| 10 | பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களைப் பெறுதல் | 14 |
| 11 | உறுப்பினர் பதிவேட்டைப் பராமரிப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் தேவையான வழிமுறைகளை வழங்குதல். | 64 |
| 12 | கூட்டுறவு சங்கங்கள்/சங்கங்களின் நிதிநிலை அறிக்கைகளைப் புதுப்பித்தல். | 05 |
| 13 | தணிக்கை குறைபாடுகளை சரிசெய்ய தணிக்கை மற்றும் மேலாண்மை குழுக்கள் | 13 |
| 14 | கூட்டுறவு சங்கங்கள் / ஒன்றியங்களின் பணிப்பாளர் சபை கூட்டங்கள் | 6 |
| 15 | கூட்டுறவு சங்கங்களின் உப சட்டங்களில் திருத்தங்களை அங்கீகரித்தல். | 08 |
| 16 | கூட்டுறவு சங்கங்களின் பணியாளர் மதிப்பீடுகள் மற்றும் பணியாளர் மதிப்பீட்டு திருத்தங்களை அங்கீகரித்தல். | - |
| 17 | கூட்டுறவு சங்கங்களின் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு அனுமதி | 06 |

| | | |
|---|---|---|
| | பெறுதல். | |
| 18 | மேற்பார்வை கண்காணிப்பு அறிக்கைகளின் அடிப்படையில் கூட்டுறவு சங்கங்கள்/ ஒன்றியங்களை ஒழுங்குபடுத்துதல் | 05 |
| 19 | உறுப்பினர் குறைகள் மற்றும் முறைப்பாடுகளுக்கு தீர்வுகளை வழங்குதல் | 08 |
| 20 | பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கு தீர்வுகளை வழங்குதல் | 40 |
| 21 | வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கான கையொப்பம் சான்றுப்படுத்தல் | 14 |
| 22 | கூட்டுறவு சங்க ஒழுங்குவிதியின் பிரிவு 18(1) இன் கீழ் பொதுக் கூட்டத்தைக் கூட்டுதல், பிரிவு 18(2) இன் கீழ் பணிப்பாளர் சபையைக் கூட்டுதல். | 04 |
| 23 | தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளுக்கு இணங்க தேர்வு நடைமுறைகளை நடத்துதல். | 03 |
| 24 | விசேட சோதனை அறிக்கைகளைத் தயாரித்தல் | 01 |

ஆதாரம் :கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

### ii. சங்க கணக்காய்வின் முன்னேற்றம்

அட்டவணை இல 3. 23 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் சங்கக் கணக்காய்வின் முன்னேற்றம்

| தொடரில | செயற்பாடுகள் | முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | நிதி கூற்றுகளைப் பெறுதல் | 52 |
| 2 | கணக்காய்விற்கு அதிகாரமளித்தல் | 43 |
| 3 | கணக்காய்வு அறிக்கையைப் பெறுதல் | 36 |
| 4 | கணக்காய்வு அறிக்கையை மீளாய்வு செய்தல் | 30 |
| 5 | கணக்காய்வு அறிக்கையை சங்கத்திற்கு வழங்குதல் | 30 |
| 6 | கணக்குகளை முறையாகச் சமர்ப்பிக்காத கூட்டுறவு சங்கங்களுக்கு சட்ட நடவடிக்கை எடுத்தற்குரிய ஆரம்ப தகவல் அளித்தல் | 29 |

ஆதாரம் :கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

### iii. அபிவிருத்திப் பிரிவின் முன்னேற்றம்

அட்டவணை இல 3. 24 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அபிவிருத்திப் பிரிவின் முன்னேற்றம்

| தொடரில | செயற்பாடுகள் | நிதி முன்னேற்றம் | பௌதிக வளர்ச்சி |
|---|---|---|---|
| 1 | விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல் மற்றும் இளைஞர் நிறுவனங்களை உருவாக்குதல். | 0.79 | இந்த ஆண்டு 100 உற்பத்தி கூட்டுறவுகள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ள நிலையில், இதுவரை 26 புதிய உற்பத்தி கூட்டுறவுகள் நிறுவப்பட்டுள்ளன. தற்போதுள்ள உற்பத்தி கூட்டுறவுகளுக்கு தேவையான உபகரணங்களை வழங்குவதற்கான வேலைத்திட்ட மதிப்பீடுகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 2 | அச்சுவேலி பல்சேவை கூட்டுறவுச் சங்க புனரமைப்பின் கீழ் பொதியிடல் நிலையத்தைத் தொடங்குதல் | - | ரூ.3.5 மில்லியன் மதிப்புள்ள கட்டிடங்களைப் புதுப்பிப்பதற்கும், ரூ.6.05 மில்லியன் மதிப்புள்ள பொதியிடல் துறைக்கான இயந்திரங்களை வாங்குவதற்கும் தொழில்நுட்ப மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| 3 | வரையறுக்கப்பட்ட பனை உற்பத்தி மற்றும் பனை அபிவிருத்திக் கூட்டுறவு சங்கத்தின் ஊடாக பனை வெல்ல உற்பத்தி திட்டம் | - | ரூ.10 மில்லியன் மதிப்புள்ள இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான திட்ட அறிக்கைகளைப் பெற்று மீளாய்வு செய்யும் செயன்முறை நிறைவடைந்துள்ளது. |
| 4 | வரையறுக்கப்பட்ட கேகாலை அடைக் கூட்டுறவு சங்கத்திற்கு மின் பிறப்பாக்கிகளை வழங்குதல். | - | ரூ.8.6 மில்லியன் மதிப்புள்ள மின் பிறப்பாக்கி நிலையங்கள் மற்றும் பிற உபகரணங்களை நிறுவுவதற்கான திட்ட மதிப்பீடுகள் இறுதி செய்யப்பட்டுள்ளன. |

ஆதாரம் :கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

## iv. சட்டப் பிரிவின் முன்னேற்றம்

அட்டவணை இல 3. 25 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் சட்டப் பிரிவின் முன்னேற்றம்

| தொடரில | செயற்பாடுகள் | நிதி முன்னேற்றம் | பௌதிக வளர்ச்சி |
|---|---|---|---|
| 1 | தொழிற்சங்கங்களின் வேண்டுகோளின் பேரில் நடுவர்கள் நியமனம். | - | 94 |
| 2 | பிணக்குத் தீர்வு மற்றும் தீர்ப்பு வழங்கல் | - | 17 |
| 3 | பங்குதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளுக்கான மேல்முறையீடுகளை மீளாய்வு செய்தல். | - | - |
| 4 | மேல்முறையீட்டு தீர்ப்பு வழங்கல் | - | - |
| 5 | தரப்பினரின் கோரிக்கையின்படி நடுவர் தீர்வு முடிவுகளை எடுக்க அதிகாரம் அளித்தல் | - | 28 |
| 6 | நீதிமன்றத்திலிருந்து திணைக்களத்துக்கு நிதி பெறுதல் | ரூ. மில். 6.7. | - |
| 7 | நீதிமன்றத்திலிருந்து சங்கத்துக்கு நிதியை விடுவித்தல் | ரூ. மில். 5.5 | - |
| 8 | பதிவு/ திருத்தத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட உப சட்டங்களுக்கான பரிந்துரைகளை வழங்குதல் | - | 7 |
| 9 | திணைக்களத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் இருந்து விடுவித்தல் | - | 4 |

ஆதாரம் :கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

## V. வங்கிப் பிரிவின் முன்னேற்றம்

அட்டவணை இல 3. 26 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் வங்கிப் பிரிவின் முன்னேற்றம்

| தொடரில | செயற்பாடுகள் | நிதி முன்னேற்றம் (ரூ.) | பௌதிக வளர்ச்சி |
|---|---|---|---|
| 1 | ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும், தொடர்புடைய திணைக்களங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட சங்கங்களிடமிருந்து நிதி பகுப்பாய்வு அறிக்கைகளைப் பெறுதல். | | 17 |
| 2 | கள ஆய்வுகளை நடத்துதல். | | 22 |
| 3 | கள ஆய்வு அறிக்கைகளை பகுப்பாய்வு செய்தல், மீளாய்வு செய்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் | | 22 |
| 4 | காலத் தேவைகளுக்கு ஏற்ப நிதிச் சேவைகளை கூட்டுறவு சங்கங்கள்/ ஒன்றியங்களுக்கு தொடர்புடைய சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குமுறை அறிவுறுத்தல்களை வழங்குதல் | | 1 |
| 5 | சுற்றறிக்கை வரைவு குழு கூட்டங்கள்/ பிற குழு கூட்டங்களை நடத்துதல். (செலவிட்ட தொகை ரூ. 299,926.10) | 299,926.10 | 10 |
| 6 | கிராமிய வங்கிகளிடமிருந்து காலாண்டு அறிக்கைகளை மாகாண மட்டத்தில் பெறுதல் | | 27 |
| 7 | இலங்கை மத்திய வங்கிக்கு காலாண்டு அறிக்கைகளை வழங்குதல். | | 3 |
| 8 | இலங்கை மத்திய வங்கிக்கு நுண்நிதி நிறுவனங்களின் முன்னேற்றம் குறித்த அறிக்கைகளை வழங்குதல். | | 1 |
| 9 | இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கைக்கான தகவல்களை வழங்குதல். | | 1 |
| 10 | இலங்கை மத்திய வங்கியின் சமூக மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்துக்கு தகவல்களை வழங்குதல் | | 1 |
| 11 | கூட்டுறவுத் திணைக்கள அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நடத்துதல். (செலவிட்ட தொகை ரூ. 190,165.00) | 190,165.00 | 2 |
| 12 | கூட்டுறவு சங்கங்களின் அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல். (செலவிட்ட தொகை ரூ. 97,976.00 | 97,976.00 | 1 |
| 13 | கூட்டுறவு சங்கங்கள்/ ஒன்றியங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்தல் | | 1 |

ஆதாரம் :கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

## vi. பயிற்சிப் பிரிவின் முன்னேற்றம்

அட்டவணை இல 3. 27 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிற்சிப் பிரிவின் முன்னேற்றம்

| தொடரில | செயற்பாடுகள் | அளவு (அறிக்கைகள், சுற்றறிக்கைகள், கூட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள்) |
|---|---|---|
| 1 | கூட்டுறவுத் திணைக்கள அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நடத்துதல் | 2 |
| 2 | கள அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நடத்துதல் | - |
| 3 | கூட்டுறவுச் சங்கங்களின் 700 அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல் | நிகழ்ச்சித்திட்டம் -1<br>அலுவலர் - |
| 4 | கூட்டுறவுச் சங்கங்கள்/ ஒன்றியங்களின் 800 பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளித்தல் | நிகழ்ச்சித்திட்டம் -1<br>அலுவலர் - |

ஆதாரம் :கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

## 3.12 கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு

அட்டவணை இல 3. 28 கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பான முன்னேற்றம்

| செயற்பாடு | எண்ணிக்கை |
|---|---|
| கூட்டுறவுப் பணியாளர் மேல்முறையீட்டுத் தீர்ப்புகள் | 55 |
| கூட்டுறவுச் சங்கம் மற்றும் பணியாளர்களுக்கு ஆலோசனைச் சேவை வழங்கல் | 41 |
| கூட்டுறவுப் பணியாளர் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு அங்கீகரித்தல் | 276 |
| கூட்டுறவுத் துறையில் மனிதவள அபிவிருத்தி மற்றும் முகாமை குறித்து கூட்டுறவுப் பணியாளர்களுக்கான விழிப்புணர்வுப் பயிற்சிப்பட்டறைகள் | 07 |

ஆதாரம் :கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு

**கூட்டுறவுத் துறையில் மனிதவள அபிவிருத்தி மற்றும் முகாமை குறித்து கூட்டுறவுப் பணியாளர்களுக்கான விழிப்புணர்வுப் பயிற்சிப்பட்டறைகள்**

அட்டவணை இல 3. 29 கூட்டுறவுப் பணியாளர்களுக்கான விழிப்புணர்வுப் பயிற்சிப்பட்டறைகள்

| | பயிற்சிப்பட்டறை நடைபெற்ற சங்கங்கள்/ ஒன்றியங்கள் | பங்குபற்றியோர் | பயிற்சிப்பட்டறையின் விடயம் | செலவுத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | இலங்கைப் போக்குவரத்து சபைப் பணியாளர்களின் சிக்கனக்கடன் மற்றும் நலன்புரி சங்கம் | 09 | கூட்டுறவுப் பணியாளர்களின் தாபன விதிக்கோவை | 8,460/- |
| 02 | அரச சேவைக் கூட்டுறவு சிக்கனக் கடன் சங்கம் | 30 | கூட்டுறவுப் பணியாளர்களின் தாபன விதிக்கோவை | 26,050/- |
| 03 | தபால் மற்றும் ரெலிகொம் பணியாளர்களின் கூட்டுறவு வங்கிச் சங்கம் | 35 | கூட்டுறவுப் பணியாளர்களின் தாபன விதிக்கோவை | 29,770/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 04 | இலங்கை பெண்கள் அபிவிருத்தி சேவைக் கூட்டுறவு சங்கம் | 23 | கூட்டுறவுப் பணியாளர்களின் தாபன விதிக்கோவையில் ஒழுக்காற்று நடைமுறை | 27,950/- |
| 05 | இலங்கைத் தேசிய கூட்டுறவு சபை | 38 | சம்பளமும் கொடுப்பனவுகளும் | 42,510/- |
| 06 | முன்மொழியப்பட்ட சம்பளக் கட்டமைப்பு மற்றும் சம்பளத் திருத்தம் குறித்து அலுவலர்களுக்கு தெளிவுபடுத்தும் பயிற்சிப்பட்டறை | 28 | முன்மொழியப்பட்ட சம்பளக் கட்டமைப்பு மற்றும் சம்பளத் திருத்தம் | 6,950/- |
| 07 | முன்மொழியப்பட்ட சம்பளக் கட்டமைப்பு மற்றும் சம்பளத் திருத்தம் குறித்து அலுவலர்களுக்கு தெளிவுபடுத்தும் பயிற்சிப்பட்டறை | 22 | முன்மொழியப்பட்ட சம்பளக் கட்டமைப்பு மற்றும் சம்பளத் திருத்தம் | 8,190/- |

ஆதாரம் :கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு

## 3.13 தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்

### i. கற்கைநெறிப் பிரிவு

08 டிப்ளோமா கற்கை நெறிகள், 02 சான்றிதழ்க் கற்கைகள் மற்றும் 18 குறுகிய கால கற்கைநெறிகள் என்பவற்றின் ஊடாக ரூ. 10.77 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டது

### ii. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அ) வெளியிடப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகள்

பரீட்சைப் பிரிவு அறிக்கைகள் - 1
கற்கைப் பிரிவு அறிக்கைகள் - 1
வதிவிடப் பிரிவு (கேட்போர்கூட) அறிக்கைகள்- 01
நூலகப் பிரிவு அறிக்கைகள் - 01
கற்கைப் பிரிவு அறிக்கைகள் - 01
வதிவிடப் பிரிவு (சுற்றுலா பங்களா) அறிக்கைகள் - 02

ஆ) இந்த ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுக் கூட்டங்கள் 03 நடைபெற்றன..

இ) உள்ளகக் கணக்காய்வின் 03 காலாண்டு மதிப்பீட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

## iii. நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

அட்டவணை இல 3.30 தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

| பணி | முன்னேற்றம் |
|---|---|
| சர்வதேச கூட்டுறவுத் தின நிறுவனம்சார் நிகழ்ச்சித்திட்டம் | கூட்டுறவுக் கல்விக்கான ஒரே அரச நிறுவனமான இந்த நிறுவனம், 103 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை (2025 ஜூலை 05) நினைவுகூரும் வகையில், நிறுவனத்தின் வளாகத்தில் நிறுவன அலுவலர்களின் பங்கேற்புடன் ஒரு சிரமதான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்வில் நினைவு உரையை நிறுவனத்தில் பணியாற்றிய ஓய்வுபெற்ற (கற்கை மற்றும் அபிவிருத்தி) பணிப்பாளர் திரு. டி.எம்.டி. திசாநாயக்க நிகழ்த்தினார். சர்வதேச கூட்டுறவு தினத்தை கொண்டாடுவதற்கான நல்லெண்ண அடையாளமாக, குளியாப்பிட்டிய முக்கோண வலயத்தின் பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால், சிரமதானத்தில் பங்கேற்ற அனைவருக்கும் இலவசமாக ஐஸ்கிரீமை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| பணியாளர் பயிற்சி | நிறுவனத்தின் பல அலுவலர்கள் பயிற்சித் திட்டங்களுக்கு தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் பயிற்சித் திட்டங்களில் ஈடுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.. |
| சர்வதேச மாநாடுகளை நடத்துதல் | உணவு இறையாண்மை குறித்த 3 ஆவது உலகளாவிய உச்சி மாநாடு இந்த நிறுவனத்தில் நடைபெற்றது, இதில் 102 நாடுகளைச் சேர்ந்த 700 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் 10 நாட்கள் கலந்து கொண்டனர். இந்த நிறுவனத்தின் பௌதீக வசதிகளையும் அபிவிருத்தி செய்து, பங்கேற்பாளர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்தது.<br><br>செப்டம்பர் 4-10 வரையான காலப்பகுதியில், கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனைக் கூடங்கள் மற்றும் கண்காட்சிகள், விழிப்புணர்வு பயிற்சிப்பட்டறைகள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல நிகழ்ச்சித்திட்டங்களும் இதற்கு இணையாக நடத்தப்பட்டன. |
| பணியாளர் நலன் மற்றும் சமூகப் பொறுப்பு பற்றிய பணிகளை மேற்கொள்ளல். | கண்டியில் உள்ள ஸ்ரீ தலதா மாளிகையில் வழிபடுவதற்கு வந்த பக்தர்களுக்கு காலையில் தானம் ஒழுங்கு செய்யப்பட்டு வழங்கும் நிகழ்வு, நிறுவன அலுவலர்களின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டது.<br><br>நிறுவன வளாகத்தில் டிப்ளோமா பெற்றவர்களால் இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், இதற்காக நிறுவன அலுவலர்களின் பங்களிப்பும் வழங்கப்பட்டது.<br><br>நல்லுறவு ஒன்றுகூடல் ஒன்றிற்காக நிறுவன அலுவலர்களால் காட்டப்பட்ட ஆதரவு மற்றும் அர்ப்பணிப்பைப் பாராட்டி நிறுவனத்தின் தலைவர் அடங்கலாக முகாமை சபை மற்றும் நிறுவனத்தின் அலுவலர்களின் பங்கேற்புடன் ஒன்றுகூடல் ஒன்று 2025.09.24 ஆம் திகதி நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு மொன்லார் (MONLAR) நிறுவனம் அனுசரணை வழங்கியது. |
| முகாமை சபை நடவடிக்கைகள் | 2025.09.30 ஆம் திகதியளவில் 09 முகாமை சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன |
| கற்கை சபை நடவடிக்கைகள் | 2025.09.302025.09.30 ஆம் திகதியளவில்01 கற்கை சபைக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது |

ஆதாரம் :தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்

## 3.14 வரையறுக்கப்பட்ட அரச வர்த்தக (நானாவித) சட்டரீதியான கூட்டுத்தானம்

i. **விற்பனை வருமானம்** ரூ. 5.7 பில்லியனாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இது கூட்டுத்தாபனத்தின் பொதுவான மற்றும் விசேட வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து பெற்ற வருமானமாகும்.

ii. **நிகர இலாபம்** ரூ. 679 மில்லியனாக இருப்பதுடன், மொத்த நிகர லாப சதவீதம் 12% ஆகும். இது மொத்த விற்பனை வருமானத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க லாபமாகும்..

iii. **வரி செலுத்த முந்திய இலாபம்**

கூட்டுத்தாபனம் 2025 இல் வரி செலுத்த முந்திய இலாபமாக ரூ. 256.5 மில்லியனை பெற்றுள்ளது

iv. **2025 இல் விசேட நடவடிக்கைகள்**

**அ) உற்பத்திப் பிரிவை விரிவுபடுத்தல்**

வரையறுக்கப்பட்ட அரச வர்த்தக (நானாவித) சட்டரீதியான கூட்டுத்தானம், 2025 ஆம் ஆண்டு முழுவதும் நிரல் அமைச்சான வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் முகாமை மற்றும் வழிகாட்டுதலின் கீழ், அரசாங்கத்திற்குத் தேவையான சந்தர்ப்பங்களில் நுகர்வோர் சந்தையில் ஏற்படும் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்தி, பொதுமக்களுக்கு தேவையான பொருட்களை நியாய விலையில் வழங்குவதன் ஊடாக இறக்குமதியாளர் மற்றும் விநியோகஸ்தராக பல விசேட நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

சந்தையில் உப்பு பற்றாக்குறை ஏற்பட்டால், பற்றாக்குறையை உடனடியாகக் கட்டுப்படுத்த உப்பு இறக்குமதி செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

நாட்டில் அரிசி பற்றாக்குறை எழும் சந்தர்ப்பங்களில், அது அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் சிரமத்தை ஏற்படுத்தாத வகையில், அரிசியை இறக்குமதி செய்து பொதுமக்களுக்கு நியாய விலையில் லங்கா சதோச விற்பனை வலையமைப்பு மூலம் விநியோகிக்க முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரம், விவசாயிகள் மற்றும் கால்நடை தீவனக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் விசேட வேலைத்திட்டமான கால்நடை தீவன பகிர்ந்தளிப்புச் செயன்முறையொன்று மேற்கொள்ளப்பட்டது.

**ஆ) பணியாளர் அபிவிருத்தி**

நிறுவனத்தின் பணியாளர்கள் அவர்களால் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பில் பொறுப்பையும் கவனத்தையும் அதிகரித்து, நிறுவனத்தின் முழு செயல்பாட்டு செயன்முறையையும் மேலும் உற்பத்தித் திறன் மிக்கதாகவும், வினைத்திறனானதாகவும் மாற்றுவதற்காக, முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகளை (KPIs) அறிமுகப்படுத்தியுள்ளது.

பணியாளர் சபை முகாமையை உறுதிப்படுத்தும் நோக்கில், அனைத்து தரவுகளையும் முறைப்படுத்துவதற்கும், இந்த செயல்முறையை துல்லியமாகவும் பயன்மிக்கதாகவும் நடத்துவதற்கு மனிதவள தகவல் முறையொன்றை (HRIS) அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பணியாளர்களின் அறிவு, திறன்கள், தேர்ச்சிகள் மற்றும் உந்துதலை மேம்படுத்துவதற்காக, 2025 ஆம் ஆண்டில் பணியாளர்களுக்கு பல வெளியக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளை நடத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

வர்த்தகப் பிரிவு அலுவலர்களின் உற்பத்தி அறிவை மேம்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (product Training) மற்றும் தொழிற்சாலை வருகைகளை (Factory Visit)

ஒழுங்கமைத்து அவர்களுக்கு உற்பத்திகள் பற்றிய புதிய அறிவை வழங்கவும், உற்பத்திச் செயல்முறை குறித்த பிரயோக அறிவை வழங்கவும், நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**இ) உபாயத்திறன் முன்னெடுப்புகள்**

புதிய உற்பத்திகளை இனங்காணலின் ஊடாக உற்பத்தித் துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போதைய உற்பத்தி வருமானத்தை உயர்த்தும் பொருட்டு விற்பனை நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது

**ஈ) நிர்வாகம் மற்றும் இணக்கப்பாடு**

2024/2025 வருடத்தில் 12 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் 04 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன

## 3.15 உணவு ஆணையாளர் திணைக்களம்

**i. தம்புள்ள வெப்பநிலை கட்டுப்படுத்தற் களஞ்சியத் தொகுதியை நிர்மாணித்தல்**

இந்த வேலைத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளதுடன், பணிகள் முடிந்ததும் உடனடியாக ஒப்பந்ததாரரிடமிருந்து உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு முறைப்படி கையளிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் அமைந்துள்ள இடத்தை, உணவு ஆணையாளர் திணைக்களத்திடம் முறைப்படி கையளிக்குமாறு, நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தம்புள்ளை பிரதேச செயலாளருக்கு எழுத்துபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி நிலத்தின் உரித்தினை உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குக் கையளிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.16 கம்பனிப் பதிவாளர் நாயகம் திணைக்களம்

### i. கம்பனிகளின் பெயர்களை அங்கீகரித்தல்

அட்டவணை இல 3. 31 கம்பனிகளின் பெயர்களை அங்கீகரித்தல்

| | 2025 01.01.முதல் 2025.09.30 வரை |
|---|---|
| பெயர்களை அங்கீகரிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 37,143 |
| அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 38,673 |
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 174 |

ஆதாரம் :கம்பனிப் பதிவாளர் நாயகம் திணைக்களம்



**ii. கூட்டிணைக்கப்பட்ட புதிய கம்பனிகளின் எண்ணிக்கை 23,054 (2025 01.01.முதல் 2025.09.30 வரை)**

**iii. கலைக்கப்பட்ட மற்றும் ரத்துச்செய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை**

*அட்டவணை இல 3. 32* கலைக்கப்பட்ட மற்றும் ரத்துச் செய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை

| விபரம் | 2025 01.01.முதல் 2025.09.30 வரையான எண்ணிக்கை |
|---|---|
| 394 ஆம் சட்டத்தின் கீழ் பெயர்கள் வெட்டி நீக்கப்படல் | 156 |
| உறுப்பினர்களின் தன்னார்வ கலைப்பு | 16 |
| ஒருங்கிணைப்பு காரணமாக பெயர்கள் வெட்டி நீக்கப்படல் | 16 |
| வெளிநாட்டுக் கம்பனிகளின் பெயர் வெட்டி நீக்கப்படல் | 8 |
| கடன் உரித்துடையோரின் தன்னார்வக் கலைப்பு | 3 |
| நீதிமன்றத்தால் கலைக்கப்படல் | 3 |
| மொத்தம் | 202 |

ஆதாரம் :கம்பனிப் பதிவாளர் நாயகம் திணைக்களம்




**iv. 2024.01.01 முதல் 2024.12.31 வரை பதிவுசெய்யப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை - 45**

அட்டவணை இல 3. 33 பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள்

| சங்கங்களின் வகை | 2024.01.01 முதல் 2024.11.30 வரை |
|---|---|
| விகாரைகள் | 1 |
| நலன்புரிச் சங்கங்கள் | 44 |
| மொத்தம் | **45** |

ஆதாரம் :கம்பனிப் பதிவாளர் நாயகம் திணைக்களம்

## நான்காம் அத்தியாயம்

# 2026 - எதிர்காலத் திட்டங்கள்

## 04. 2026 - எதிர்காலத் திட்டங்கள்

### 4.1. வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

i. 2026 ஆம் ஆண்டில், வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள வாடகை கட்டிடங்களில் தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் உட்பட அனைத்து நிறுவனங்களையும் ஒரே கூரையின் கீழ் நிறுவப்பட்டு, அந்த ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் நுகர்வோருக்குக் கிடைக்கும் சேவைகள் தாமதமின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்காக அமைச்சின் நேரடி மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்பு வசதிகள் பொருட்டு கூட்டுறவு சதுக்கக் கட்டிடம் எனும் புதிய வெட்டுமுகத்தின் கீழ் அண்ணளவாக 7 பில்லியன் செலவில் நிர்மாணத்தைத் தொடங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

ii. விசேட பொருளாதார மத்திய நிலையங்களை முகாமையிடுவதற்கு நிறுவப்பட்ட "தேசிய கமநல சந்தை சேவைகள் லிமிடெட்" இனது சட்டரீதியான கட்டமைப்பின் கீழ் விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் 2026 முதல் முறையாக செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

iii. வர்த்தகத்தை எளிதாக்குவதற்கும் இலங்கை உற்பத்திகளுக்கான சந்தை அணுகலை விரிவுபடுத்துவதற்கும் ஒரு கொள்கை கட்டமைப்பை (Competion Policy Frame Work) உருவாக்குதல்

iv. தேசிய தர கவுன்சிலை நிறுவுதல்.

v. உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் உட்பட இலங்கையில் கூட்டுறவு மேம்பாட்டிற்கான சட்ட கட்டமைப்பை மேம்படுத்துதல்.

vi. கூட்டுறவுத் துறையின் வாய்ப்புகளை மேம்படுத்தவும், வணிகம் செய்வதை எளிதாக்கவும் eRoc2 ஐ விருத்தி செய்தல்.

vii. போட்டி சட்ட கட்டமைப்பை (Formulation Of Competition Legal Frame Work) உருவாக்குதல்.

viii. வர்த்தகத்தை எளிதாக்குவதற்கான கொள்கை கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் இலங்கைப் பொருட்களுக்கான சந்தை அணுகலை விரிவுபடுத்துவதை நோக்கிச் செயல்படுதல்.

ix. இலங்கை திரிபோஷா நிறுவனம் 2026 ஆம் ஆண்டில் நிலையான வளர்ச்சி, நவீனமயமாக்கல் மற்றும் பல்வகைப்படுத்தலில் கவனம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலக உணவுத் திட்டத்துடன் மூலோபாய ஒத்துழைப்பு, அரசாங்க ஆதரவு மற்றும் உள்ளக திறன் மேம்பாடு மூலம் இலங்கையில் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதிசெய்து பல்வேறு மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த நிறுவனம் எதிர்பார்க்கிறது.

### 4.2. வர்த்தகத் திணைக்களம்

i. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைப் பேச்சுவார்த்தை நடத்தி தொழில்நுட்ப உதவி பெறுதல்.

ii. பலதரப்பு, பிராந்திய மற்றும் இருதரப்பு வர்த்தக மாளாடுகளில் பங்கேற்பு.

iii. கூட்டு வர்த்தக மற்றும் பொருளாதார ஆணைக்குழுக்களை நடத்துதல்.

iv. முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் முன்னுரிமை அல்லாத வர்த்தக உடன்படிக்கைகள் இனை திறம்பட செயல்படுத்துவதை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

v. இலங்கை எக்ஸ்போ 2026 இற்கான வர்த்தக பிரதிநிதிகளை ஏற்பாடு செய்தல்.

vi. 2026 ஆம் ஆண்டில், பிராந்திய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபட திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

vii. உலக வர்த்தக அமைப்பின் 14 ஆவது அமைச்சர்கள் மாநாட்டிற்கு தயாராகுதல். 14 ஆவது அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துரையாடப்பட வேண்டிய பகுதிகள் குறித்து இலங்கையின் நிலைப்பாட்டை வடிவமைக்க தொடர்புடைய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பைப் பேணுதல்.

### 4.3. வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம்

i. **வருமானம் மற்றும் மொத்த லாப வரம்பை மேம்படுத்துதல்.**

உற்பத்தி கிடைக்கும் தன்மை மற்றும் லாபத்தை அதிகரிப்பதன் மூலம் இது மேற்கொள்ளப்படுகிறது.

- இலக்கு விற்பனை (Target Sale) –- ரூ. 60 பில்லியன்
- இலக்கிற்குரிய மொத்த லாப வரம்பு - 13.5%

அதிக செயல்திறன் மற்றும் லாபம் ஈட்டும் உற்பத்திகளில் கவனம் செலுத்துவதன் மூலம் ஒட்டுமொத்த வருமானத்தை அதிகரிக்கவும் லாப வரம்புகளை மேம்படுத்தவும் மூலோபாய முயற்சிகள் செயல்படுத்தப்படுகின்றன..

ii. **விற்பனை நிலைய விரிவாக்கல் உத்தி (Outlet Expansion Strategy)**

வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம், ஊவா மாகாணம் மற்றும் பிற பிராந்தியங்களில் சந்தை இருப்பை வலுப்படுத்தவும் வாடிக்கையாளர் அணுகலை மேம்படுத்தவும் ஒருங்கிணைந்த விற்பனை நிலைய விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சந்தை தேவை பகுப்பாய்வு மற்றும் நுகர்வோர் உணர்வு மற்றும் பிற தொழில்நுட்ப காரணிகளின் அடிப்படையில் அதிக விற்பனை போக்குகள் மற்றும் தேவைகள் உள்ள பகுதிகளில் புதிய விற்பனை நிலையங்கள் மூலோபாய ரீதியாக நிறுவப்பட்டுள்ளன.

iii. நிறுவனத்தின் நற்பெயர் மற்றும் பிம்பத்தை மேம்படுத்தவும் வலுப்படுத்தவும் குறைபாடுகள் உள்ள விற்பனை நிலையங்களுக்கான புதுப்பித்தல் பணிகளைத் தொடங்குதல்.

iv. விநியோகச் சங்கிலி செயல்திறனை அதிகரிக்க களஞ்சியசாலையை நவீனமயமாக்கல்.

v. வணிகத்தின் ஒட்டுமொத்த நிர்வாக செயல்திறனை அதிகரிக்க புதிய ERP முறையொன்றை அறிமுகப்படுத்துதல்.

vi. சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனையை நேரடியாக இறுதி நுகர்வோருக்கு எளிதாக்குதல்.

### 4.4. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்

i. நெல் சந்தைப்படுத்தல் சபையால் (PMB) கொள்வனவு செய்யப்படும் நெல்லை (ஆண்டுக்கு 50,000 மெட்ரிக் தொன்) "தேசிய சதோச" என்ற வர்த்தகப் பெயரில் அரிசியாக மாற்றுவதன் மூலம் சந்தை வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்துதல். இதற்காக, லங்கா சதோச நிறுவனத்துடன் பிற பல்பொருள் அங்காடி வலையமைப்புளிலிருந்து கட்டளைகள் பெற்றுக்கொள்ளல்.

ii. 4-6 மாகாணங்களை உள்ளடக்கிய மொத்த விற்பனை நிலையங்களை நிறுவுதல். குறைந்த விலையில் தரமான பொருட்களை இந்த நாட்டின் நுகர்வோருக்கு நெருக்கமாகக் கொண்டுவருவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே முக்கிய நோக்கமாகும்.

iii. அனைத்து இறுதிக் கணக்குகள், வங்கி கணக்கிணக்குகள் மற்றும் நிதி அறிக்கைகளைத் தயாரித்து புதுப்பித்தல். இறுதி செய்யப்பட வேண்டிய அனைத்து இறுதிக் கணக்குகள், வங்கி ணக்கிணக்குகள் மற்றும் நிதி அறிக்கைகளைத் தயாரித்து இறுதி செய்தல் மற்றும் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்.

iv. கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்திற்கு ஏழு பதப்படுத்துதல் மற்றும் பொதியிடல் நிலையங்களை நிறுவுதல். மஞ்சள், மிளகாய், மிளகு, பச்சைப்பயறு, கொண்டைக்கடலை மற்றும் கௌபி போன்ற உள்நாட்டு கால்நடை உற்பத்திகளை கொள்வனவு செய்தல், பதப்படுத்துதல், பொதி செய்தல் மற்றும் சந்தைப்படுத்துதல். நாட்டின் விவசாயிகளுக்கு நியாயமான சந்தையை உருவாக்குவதும், நுகர்வோருக்கு உயர்தர, விவசாயம் சாராத பொருட்களை வழங்குவதும் இதன் நோக்கமாகும்..

## 4.5. லலித் அதுலத் மகபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

### i. புலமைப்பரிசில் பெறுநர்களுக்கான தரவுத்தளத்தைத் தயாரித்தல்.

பல்கலைக்கழக படிப்பை முடித்து, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு வேலைகள் மற்றும் தொழில்களில் பணிபுரியும் சுமார் 03 மில்லியன் மாணவர்கள் உள்ளனர். இந்த உதவித்தொகை பெறுபவர்கள் தொடர்பான தரவுத்தளம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தரவைப் பயன்படுத்தி, அனைத்து உதவித்தொகை பெறுபவர்களிடமிருந்தும் மஹாபொல அறக்கட்டளை நிதிக்கு பங்களிக்க கோரிக்கை விடுக்கப்படும். மக்கள் வங்கியிலிருந்து நேரடி வங்கி கட்டணம் (ஆன்லைன் கட்டண நுழைவாயில்) வசதிகள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளன. உதவித்தொகை பெறுபவர்கள் மிகவும் கவர்ச்சிகரமான முறையில் தொடர்பு கொள்ளப்படுவார்கள் என்றும், நிதி ஊக்குவிப்பு திட்டங்கள் வரும் ஆண்டில் செயல்படுத்தப்படும் என்றும் நம்பப்படுகிறது. அதன்படி, செய்தித்தாள் விளம்பரங்கள் மற்றும் மின்னணு ஊடகங்களைப் பயன்படுத்தி நிதி திரட்டும் திட்டத்தை செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ii. மஹாபொல நிகழ்நிலை லொத்தரை மீளச் செயற்படுத்தல் (Online Lottery).

மஹாபொல நிகழ்நிலை லொத்தர் இதற்கு முன்பு மூன்று முறை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், பல்வேறு காரணங்களால் இந்த முயற்சிகள் தோல்வியடைந்தன. எதிர்காலத்தில் அதிக வெளிப்படைத்தன்மையுடன் ஒரு நிகழ்நிலை லொத்தரை மீள ஆரம்பிக்க நம்பிக்கை நிதியம் திட்டமிட்டுள்ளது.

### iii. மஹாபொல கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியை மீள ஆரம்பித்தல்.

மகபொல நம்பிக்கை நிதியம் 1981/82 ஆம் ஆண்டில் மகாபொல நிறுவனர் கௌரவ லலித் அதுலத்முதலி அவர்களால் கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் பின்னர் இந்தக் கண்காட்சி சுமார் 20 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருந்தது. 2023 முதல் இந்தக் கண்காட்சியை மீண்டும் தொடங்க நம்பிக்கை நிதியம் அங்கீகாரம் பெற்றுள்ளது. இருப்பினும், இது தொடர்பாக முழுமையான ஆய்வை மேற்கொண்ட பிறகு, எதிர்காலத்தில் இந்தக் கண்காட்சியை மீண்டும் தொடங்க நம்பிக்கை நிதியம் முடிவு செய்துள்ளது.

## 4.6. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை (SLAB)

i. குறிப்பீட்டுப் பொருள் உற்பத்தியாளர் திட்டம் மற்றும் உயிர்வங்கியியல் திட்டத்தின் பயிற்சி மற்றும் மேம்பாடு (Training and promotion of Reference Material producer scheme and Biobanking scheme)

ii. உறுதிப்படுத்தல் மற்றும் சரிபார்ப்புத் திட்டம் (Validation/Verification Scheme)

அ) ICAO-CORSIA, ISO 14067:2018 இற்கான சர்வதேச அங்கீகாரத்தை (IAF MLA) விரிவுபடுத்துதல்

ஆ) 2 புதிய திட்டங்களுக்கு விரிவுபடுத்துதல் உதா. கார்பன் வரவிடல், நிகர பூஜ்ஜியப்படுத்தல், ATREDD திட்டம்

iii. திருத்தப்பட்ட சர்வதேச தரநிலைகளுக்கு மாற்றுதல் குறித்த பயிற்சி உதா. ISO/IEC 17020, ISO/IEC 17065 மற்றும் ISO/IEC 17067, ISO 9001, ISO 14001, போன்றவை.

iv. சிறந்த பயனர் அனுபவத்திற்காக SLAB வலைத்தள மேம்படுத்தல்

v. அங்கீகாரம் மற்றும் அதன் நன்மைகள் குறித்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு

vi. SLAB அங்கீகார செயல்முறைகளின் டிஜிட்டல் மயமாக்கலை நிறைவு செய்தல்.

## 4.7. அளவீட்டு அலகுகள், தரநிலை மற்றும் சேவைகள் திணைக்களம்

i. தேசிய அளவையியல் ஆய்வுகூடத்தில் மத்திய குளிரூட்டல் அமைப்புகளை நிறுவுதல்.

ii. புதிய அளவீட்டு தரநிலைகளை நிறுவுவதன் மூலம் தேசிய அளவையியல் ஆய்வுகூடத்தின் நோக்கத்தை விரிவுபடுத்துதல்.

iii. பல்கலைக்கழக கல்வியில் அளவியியலை ஒரு பாடமாகச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளைத் தயாரித்தல்.

iv. அளவீட்டு தரநிலைகள் மற்றும் சேவை அலகு சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளைப் புதுப்பித்தல். அதன்படி, திணைக்களம் சார்ந்த சேவைகளால் கிடைக்கும் வருவாயை அதிகரிப்பதையும், துறையால் வழங்கப்படும் சேவைகளை முறைப்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

v. சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதற்கு தேசிய அந்தஸ்து மற்றும் உரிமை வசதிகளை வழங்கும் பிற நிறுவனங்களுக்கு வசதிகளை ஏற்பாடு செய்தல்.

vi. தானியங்கி வலையமைப்பு முறையை அமைத்தல். - மதிப்பிடப்பட்ட தொகை ரூ. 70 மில்லியன். (நிதி ஒதுக்கீடு) 25 மாவட்ட அலுவலகங்களை தலைமை அலுவலகத்துடன் இணைத்து வர்த்தக தரவு அமைப்பை அமைப்பதன் மூலம் நுகர்வோருக்கு துல்லியமான மற்றும் நம்பகமான அளவீட்டு சேவைகளை உறுதி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது..

## 4.8. இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

i. புலமைச் சொத்து அலுவலகத்திற்கு போதுமான இடவசதி கொண்ட ஒரு கட்டிடத்தை கையகப்படுத்துதல்.

ii. உலக புலமைச் சொத்து அமைப்பின் ஆதரவுடன் நடந்து வரும் புலமைச் சொத்து கோப்பு ஸ்கானிங் திட்டத்தை வெற்றிகரமாக முடித்தல்.

iii. நிகழ்நிலைக் கட்டண முறை மற்றும் நிகழ்நிலை விண்ணப்ப சமர்ப்பிப்பு வசதிகளை நிறுவுவதற்கான ஆரம்ப பணிகளைத் தொடங்குதல்.

iv. கைத் தொழில் நிர்வாக அமைப்பை அதன் நான்காவது பதிப்பிற்கு மேம்படுத்துதல்.

v. மட்ரிட் ஒப்பந்தத்திற்கு இணங்க புலமைச் சொத்துச் சட்டத்தில் திருத்தம்.

vi. பதிப்புரிமைப் பிரிவை நிறுவுதல் மற்றும் பணியாளர்கள் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அனுமதி அளித்தல்.

vii. அதிக எண்ணிக்கையிலான வர்த்தக முத்திரை, காப்புரிமை மற்றும் கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்கள் (கருப்பு இழப்புகள்) குவிந்ததன் காரணமாக. 2026 ஆம் ஆண்டின் முதல் 02 காலாண்டுகளில் (06 மாதங்கள்) பூர்த்தி செய்தல்

viii. புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதை ஊக்குவிப்பதற்காக வணிக நிறுவனங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பட்டறைகளை ஏற்பாடு செய்தல்.

## 4.9. நுகர்வோர் விவகார அதிகாரசபை

i. 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தின் திருத்தத்தை இறுதி செய்தல்.

ii. டிஜிட்டல் வர்த்தகத்தை (இலத்திரனியல் வணிகம்) (பொது - தனியார் துறைகள்) எளிதாக்குவதற்கு நுகர்வோர் விவகார அதிகாரசபையின் பங்களிப்பை வழங்குதல்.

iii. முறைப்பாடுகள் /தகவல்களுக்கான வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்துதல்.

iv. பயிற்சித் திட்டங்கள் மற்றும் தர அடிப்படையிலான செயல்திறன் மதிப்பீடுகள் மூலம் ஆய்வுகளின் தரத்தை மேம்படுத்துதல்.

v. பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யும் போது வழங்கப்படும் பில்/ இன்வொயிசில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுடன் தொடர்புடைய செலவுக் கூறுகள் மற்றும் வரிக் கூறுகளைச்

சேர்ப்பதை கட்டாயமாக்குவதற்கும், பொருட்களை வாங்கும் போது விற்பனையாளர்கள் நுகர்வோருக்கு இன்வொயிசுகளை வழங்குவதை கட்டாயமாக்குவதற்கும் சட்டம் இயற்றுதல்.

vi. கடன் அட்டை அல்லது ஏதேனும் இலத்திரனியல் ஊடகம் மூலமாக பணம் செலுத்தும்போது (கட்டணங்கள் பில் மதிப்பில் 1.5% முதல் 3% வரை) பொருட்களின் அதிகபட்ச சில்லறை விலைக்கு மேலதிகமாக விதிக்கப்படும் கட்டணங்களைக் கட்டுப்படுத்தி, நியாயமற்ற முறையில் விதிக்கப்படும் கட்டணங்களை ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுத்தல்.

vii. நுகர்வோர் விவகார அதிகாரசபையின் சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதை இறுதிசெய்தல்.

## 4.10. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

i. (One stop) ஒரே இடத்திலான கூட்டுறவு சந்தை நிறுவுதல் திட்டம், கூட்டுறவு விவசாய உற்பத்தி செயலாக்கம் மற்றும் பெறுமதிச் சங்கிலி மேம்பாட்டுத் திட்டங்கள் தொடங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ii. கூட்டுறவு சந்தைகளின் வலையமைப்பை ஒரே வர்த்தக நாமத்தின் கீழ் உருவாக்கும் திட்டத்தைத் தொடங்க கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூ. 25 மில்லியன் ஒதுக்கப்படும்.

iii. 2025 ஆம் ஆண்டு ஆரம்பித்து 1000 உற்பத்திக் கூட்டுறவு சங்கங்களை நிறுவும் திட்டத்தின் இரண்டாம் ஆண்டில் 500 சங்கங்களைத் தொடங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 4.11. கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு

i. மாகாண கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவின் பங்கேற்புடன் கூட்டுறவுத் துறையின் முழு ஊழியர் சமூகத்திற்கும் பொருந்தக்கூடிய சேவை நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் கூட்டுறவு பணியாளர் தாபன விதிக்கோவையைப் புதுப்பித்து திருத்துதல்

ii. 1992 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க கூட்டுறவு பணியாளர் ஆணைக்குழு (திருத்தம்) சட்டத்தால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு பணியாளர் ஆணைக்குழுச் சட்டத்தை தற்போதைய சமூக மற்றும் சட்ட நிலைமைகளுக்கு ஏற்றவாறு திருத்துதல்

iii. கூட்டுறவு பணியாளர்களுக்கான விழிப்புணர்வுப் பட்டறைகளை நடத்துதல்

## 4.12. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்

i. கூட்டுறவுத் துறையின் தேவைக்கேற்ப நிறுவனம் வழங்கும் அனைத்து டிப்ளோமா பாடநெறிகளின் பாட உள்ளடக்கத்தை மதிப்பாய்வு செய்தல், இலங்கை தகுதி கட்டமைப்பு (SLQF) அந்தஸ்தைப் பெறுதல் மற்றும் SLQF-4 மட்டத்தில் ஒரு மேம்பட்ட டிப்ளோமா பாடநெறியைத் தொடங்குதல்.

ii. வடக்கு/ கிழக்கு மாகாணங்களின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களங்களில் இணைக்கப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் மாகாணங்களின் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் அலுவலர்களுக்கு, அந்த மாகாணங்களில் உள்ள கூட்டுறவுகளின் அறிவு, திறன்கள், அணுகுமுறைகள் மற்றும் சமூகங்களுக்கிடையேயான சகவாழ்வை வளர்க்கும் நோக்கத்துடன், தமிழ் மொழியில் பாடநெறிகளைத் தொடங்குதல் மற்றும் நிறுவனத்தில் தமிழ் மொழிமூலக் கல்வி பீடத்தை நிறுவ நடவடிக்கை எடுத்தல்.

iii. நிறுவனத்தின் கற்றல் முகாமை முறையை (LMS) நிறுவுதல் மற்றும் நிகழ்நிலை மாணவர் பதிவு, நிகழ்நிலை கற்றல் செயல்முறை மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல்.

iv. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர்/ வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பாடநெறிகளை ஏற்பாடு செய்தல்.

v. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவுடன் (TVEC) இணைந்து தொழில் பயிற்சி பாடநெறிகளை ஏற்பாடு செய்தல்.

vi. பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்த கூட்டுறவு சங்கங்களின் அனுபவங்களை ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுடன் பகிர்ந்து கொள்ளும் நோக்கத்துடன் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

vii. கூட்டுறவு விடயப் பகுதியில் அறிவு மையமாக இருக்கும் தேசிய கூட்டுறவு அபிவருத்தி நிறுவனத்தின் நூலகத்தை தன்னியக்கமாக மாற்றி "டிஜிட்டல் மயமாக்குதல்".
viii. எதிர்கால சந்ததியினரை தொழில்முயற்சியாண்மைக் குணநலன்களுடன் வளர்ப்பதையும், வேலைவாய்ப்புள்ள நபர்களாக மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்ட ஆங்கில மொழிக் கூடங்களை ஏற்பாடு செய்தல்.
ix. மேற்கு, வட மத்திய மற்றும் வடமேற்கு பிராந்தியங்களை உள்ளடக்கிய தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் தொலைதூரக் கற்றல் கற்கைகளை ஏற்பாடு செய்தல்.
x. இலங்கையில் செயல்படும் அனைத்து கூட்டுறவு சங்கங்களையும் உள்ளடக்கிய டிஜிட்டல் கூட்டுறவு சங்க தரவு அமைப்பை நிறுவி பராமரித்தல்.
xi. இலங்கையில் தற்போதுள்ள உற்பத்தி மற்றும் சேவைக் கூட்டுறவுகளை வலுப்படுத்தவும் அவற்றின் ஏற்றுமதி நிலையை மேம்படுத்தவும் ஒரு சோதனை ஆய்வை நடத்துதல்.
xii. வணிக நிதி மத்திய நிலையங்களை நிறுவுதல். அதன் முதல் கட்கை. 04 விசேட சேவைக் கூட்டுறவு சங்கள்களை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
xiii. நிரந்தர வெளியக வளப் பங்களிப்பாளர் அமைப்பினை நிறுவுவதற்கான நடவடிக்கைகள்.
xiv. மாதிரிக் கூட்டுறவுகளை நிறுவுதல்

## 4.13. வரையறுக்கப்பட்ட அரச வர்த்தக (நானாவித) சட்டபூர்வ கூட்டுத்தாபனம்

i. 2026 ஆம் ஆண்டில் அரசாங்கம் தேவையான சந்தர்ப்பங்களில் சந்தை அத்தியாவசிய உணவுப் பொருட்களை நியாய விலையின் கீழ் இறக்குமதி செய்து, சந்தை விலையில் விநியோகிக்கவும், சந்தை விலை மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் வழங்கலை உறுதிப்படுத்தவும் அரிசி மற்றும் சோளத்தை இறக்குமதி செய்து அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிக்க எமது கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது.
ii. அரச டிஜிட்டல் கொள்கைக்கு ஏற்ப அரச நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்த ஸ்மார்ட் போர்டுகள் மற்றும் பிற தகவல் தொழில்நுட்ப உபகரணங்களின் வளர்ச்சியை விரிவுபடுத்துதல்.
iii. நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் வலையமைப்பை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் ஒரு முன்மொழியப்பட்ட விற்பனை வலையமைப்பைத் தொடங்குதல்.
iv. **STC** நவம் மாவத்த தலைமை அலுவலகம் உட்பட அனைத்து வெளியக காட்சிக்கூடங்களையும் புதுப்பித்து, வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தரமான சேவை மற்றும் அனுபவத்தை வழங்குதல், **STC** வர்த்தக நாமத்தை நவீன போட்டி சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப ஒரு கவர்ச்சிகரமான இடமாக மாற்றுதல்.
v. நிறுவனத்தின் வணிக முன்னேற்றம் மற்றும் சந்தைப்படுத்தல் செயல்திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் தற்போதுள்ள உற்பத்தித் துறையில் புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துதல்.
vi. பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் அதன் நிதி அடிப்படையான வாடிக்கையாளர்களை விரிவுபடுத்துவதன் மூலம் நிறுவனத்தின் வருவாயை அதிகரித்தல்.
vii. நிதி, மனித வளங்கள் மற்றும் விநியோகச் சங்கிலி போன்ற முக்கிய செயல்முறைகளை ஒரே, மையப்படுத்தப்பட்ட தளமாக ஒருங்கிணைப்பதன் மூலம் வணிக செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தவும், செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் நிறுவன வள திட்டமிடல் முறை ஒன்றை (**ERP** முறை) செயல்படுத்துதல்.
viii. நிறுவனத்தின் செயற்பாட்டு நிலைமைகளை தரப்படுத்தவும் பராமரிக்கவும் **ISO** சான்றிதழைப் பெறுதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## 4.14. உணவு ஆணையாளர் திணைக்களம்

i. அரசாங்கத்தின் உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலை அடைவதற்காக, 2026 ஆம் ஆண்டில் பாதீட்டு ஒதுக்கீட்டின் மூலம் உணவு ஆணையாளர் திணைக்களத்திடமுள்ள களஞ்சியசாலையைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் முன்மொழியப்பட்டுள்ளது.

ii. விவசாய உற்பத்திகளை சேமிப்பதற்கு வெப்பநிலை கட்டுப்பாடு சாத்தியமாகும். 5000 மெட்ரிக் தொன் கொள்ளளவு கொண்ட, தம்புள்ளையில் அமைந்துள்ள களஞ்சியசாலையில் செயல்பாடுகளைத் தொடங்கவும், இந்தக் களஞ்சியசாலைக்கு சூரிய மின் தகடுகளை நிறுவுவதன் மூலம் மின்சாரம் வழங்கவும் முன்மொழியப்பட்டுள்ளது. இதன் மூலம் மின்சாரச் செலவைக் குறைக்க முடியும்.

## 4.15. கம்பனிப் பதிவாளர் நாயகம் திணைக்களம்

i. திணைக்களத்தின் கட்டிடங்களைப் புதுப்பித்தல் - இதற்கான அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ. 400 மில்லியன் ஆகும்.

ii. e ROC அமைப்பின் பதிப்பு 2 ஐ செயல்படுத்துதல் - இதற்கான அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ. 250 மில்லியன். இதன் கீழ் பின்வருவன மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது,

அ) கம்பனிகளின் இறுதி நன்மை பயக்கும் உரிமையாளர்கள் (BO) பற்றிய தகவல்களை உரிய தரப்பினர் அணுகுவதை எளிதாக்கும் வகையில் e-ROC அமைப்பின் அபிவிருத்தி.

ஆ) e-ROC இடைசெயல்பாட்டிற்கான பொதுவான API போர்ட்டலை உருவாக்குதல்.

இ) கம்பனிகளின் தரவை சரிபார்க்கும் வசதியை செயல்படுத்துதல். ((முகவர் நிறுவனங்களுக்கு இடையேயான மற்றும் பொதுசன அணுகல்)

ஈ) கடல்சார் மற்றும் துறைமுக நகர நிறுவனப் பதிவுக்கான e-ROC அமைப்பின் மேம்பாடு.

உ) கம்பனிச் செயலாளர்களுக்கான தொடர்ச்சியான கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கம்பனிச் செயலாளர்களை மீளப் பதிவு செய்தல்.

ஊ) E-GP வேலைத்திட்டம் மற்றும் e-ROC வேலைத்திட்டம் என்பன ஊடாக தகவல் பரிமாற்றம் செய்தல்.

எ) கம்பனிகளின் ஒருங்கிணைப்புக்கான ஒற்றைப் படிவத்தை (Single Form) அறிமுகப்படுத்துதல்.

iii. உள்ளகத் திணைக்கள வலையமைப்பு மற்றும் இணைய வசதிகளை மேம்படுத்துதல்.

iv. திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ இணையத்தளத்தை விருத்தி செய்து நடத்துதல்.

v. தேவைக்கேற்ப திணைக்களத்தின் நாளாந்த சேவைகளை வழங்குவதற்காக 2026 ஜனவரி இல் ஒரு நாள் சேவை ஒன்றை நடத்துதல்.

vi. மூலதனச் சந்தை அபிவிருத்தி பொருட்டு ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

## 4.16. இலங்கை திரிபோசா நிறுவனம்

உலக உணவுத் திட்டத்துடன் மூலோபாய ஒத்துழைப்பு, அரசாங்க ஆதரவு மற்றும் உள்ளகத் திறன் மேம்பாடு என்பவற்றின் ஊடாக, நிலையான அபிவிருத்தி, புத்தாக்கம் மற்றும் பல்வகைப்படுத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம், இலங்கையில் பாதிக்கப்படக்கூடிய சிறுவர்கள் மற்றும் பெரியவர்களின் போசாக்குப் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதிலும் நிறுவனம் அதன் வகிபாகத்தை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.



හිඟුරක්ගොඩ සතොස වී මෝල් ගබඩා සංකීර්ණය නැවත ගොඩනැගීමේ පළමු අදියර ආරම්භ කිරීම.

ஹிங்குரக்கொட சதோச நெல் ஆலைக் களஞ்சியத் தொகுதியின் புனரமைப்புப் பணிகளின் முதல் கட்டத்தை ஆரம்பித்தல்.

Initiation of the first phase of reconstructing the Hinigurakgoda Sathosa Paddy Storage Complex.



ආහාර ප්‍රතිපත්ති හා සුරක්ෂිතතා කමිටුව පළමු වරට ජනාධිපති කාර්යාලයේදී රැස්වීම.

உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு முதன்முறையாக ஜனாதிபதி செயலகத்தில் கூடுதல்.

The Food Policy and Security Committee convened for the first time at the Presidential Secretariat.



ශ්‍රී ලංකාවේ පාකිස්තාන මහ කොමසාරිස් විශ්‍රාමික මේජර් ජෙනරාල් ෆහීම් උල් අසීස් මහතා හමුවීම.

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பாஹிம் உல் அசீஸுடனான சந்திப்பு.

Courtesy call by His Excellency Major General (Rtd.) Faheem Ul Aziz, High Commissioner of Pakistan for Sri Lanka.



ශ්‍රී ලංකාවේ ඇමරිකා එක්සත් ජනපද තානාපතිනි ජූලි චංග් මහත්මිය හමුවීම.

இலங்கைக்கான அமெரிக்க தூதர் திருமதி ஜூலி சங்குடனான சந்திப்பு.

Courtesy call by Her Excellency Julie Chung, Ambassador of the United States for Sri Lanka



ශ්‍රී ලංකාවට භූගෝලීය දර්ශක ( GI ) ප්‍රමිතිය සඳහා අවස්ථාව ලැබීම.

இலங்கைக்கு புவியியல் குறிகாட்டி (GI) சான்றுப்படுத்தல் கிடைப்பதற்கான வாய்ப்பு.

Sri Lanka received the opportunity to obtain the Geographical Indication (GI) certification.



කර්මාන්ත හා ව්‍යවසායකත්ව සංවර්ධන අමාත්‍යාංශය සහ වෙළෙඳ, වාණිජ, ආහාර සුරක්ෂිතතා සහ සමුපකාර සංවර්ධන අමාත්‍යාංශය අතර හමුව.

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சிற்கும் வர்த்தக, வாணிப,, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சிற்கும் இடையிலான கூட்டம்

A meeting between the Ministry of Industries and Entrepreneurship Development and the Ministry of Trade, Commerce, Food Security and Cooperative Development.



ශ්‍රී ලංකාවේ වියට්නාම තානාපතිනි Trinh Thi Tam මහත්මිය හමුවීම.

இலங்கைக்கான வியட்நாம் தூதர் திருமதி டிரின் தி தாமுடனான சந்திப்பு

Courtesy call by Her Excellency Trinh Thi Tam, Ambassador of Vietnamese for Sri Lanka



නාරාහේන්පිට,රත්මලාන, පිළියන්දල ආර්ථික මධ්‍යස්ථාන නිරීක්ෂණය.

நாரஹேன்பிட்டி, இரத்மலானை, பிலியந்தலை பொருளாதார மத்திய நிலையங்களிற்கு விஜயம்

Visit to the Narahenpita, Ratmalana, and Piliyandala Economic Centres.



ජාතික අලුත් සහල් මංගල්‍යය ජනපති ප්‍රධානත්වයෙන්.

மேன்மை தங்கிய ஜனாதிபதி தலைமையில் தேசிய புது அரிசி விழா

The National “Aluth Sahal Mangalya” was conducted under the auspices of HE the President.



සමූපකාර තොග වෙළෙඳ සංස්ථාවේ ප්‍රගති සමාලෝචනය.

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

The Progress Review Meeting of the CWE.



මාතර CWE තොග ගබඩා සංකීර්ණය නිරීක්ෂණය.

மாத்தறை சதொச களஞ்சியத் தொகுதிக்கு விஜயம் செய்தல்

Visit to the Matara CWE warehouse complex.



ශ්‍රී ලංකා–චීන ආර්ථික හා වෙළෙඳ සහයෝගීතා ඒකාබද්ධ කමිටුවේ 8 වන සැසිවාරය

பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்புக்கான இலங்கை-சீன கூட்டுக் குழுவின் 8 ஆவது அமர்வு

The 8th Session of the Sri Lanka–China Joint Committee on Economic and Trade Cooperation.



ලංකා සතොස ආයතනයේ ප්‍රගති සමාලෝචනය.

லங்கா சதொச நிறுவனத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்.

The Progress Review Meeting of Lanka Sathosa.



අනුකූලතා තක්සේරු පිළිබඳ ශ්‍රී ලංකා ප්‍රතීතන මණ්ඩලයේ (SLAB) ප්‍රගති සමාලෝචනය.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் (SLAB) முன்னேற்ற மீளாய்வு

Sri Lanka Accreditation Board for Conformity Assessment ( SLAB )Progress Review.



ශ්‍රී ලංකාවේ කියුබානු තානාපති අන්ද්‍රෙස් මාර්සෙලෝ ගොන්සාලෙස් මහතා සමඟ හමුව.

இலங்கைக்கான கியூப தூதர் திரு. அண்ட்ரெஸ் மார்செலோ கோன்சலஸ் கரீடொவுடனான சந்திப்பு.

Courtesy call by His Excellency Andrés Macelo González Garrido, Ambassador of the Republic of Cuba for Sri Lanka.



9 වන චීන - දකුණු ආසියානු ප්‍රදර්ශනය

9 ஆவது சீன - தெற்காசியப் பொருட்காட்சி

"CSA Expo 2025"



ශ්‍රී ලංකා රාජ්‍ය වාණිජ (විවිධ) නීතිගත සංස්ථාවේ (STC) නිරීක්ෂණ චාරිකාව.

இலங்கை அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனத்திற்கு (STC) கண்காணிப்பு விஜயம்

Visit to the Sri Lanka State Trading (General) Corporation (STC).



19. ශ්‍රී ලංකාවේ ඉරාන තානාපති ආචාර්ය Alireza Delkhosh මහතා සමඟ හමුව.

இலங்கைக்கான ஈரானிய தூதர் கலாநிதி அலிரேசா டெல்கோஷுடனான சந்திப்பு

Courtesy call by His Excellency Dr. Alireza Delkhosh, Ambassador of Iran for srilanka.



“නිෂ්පාදන සමුපකාර දහසක්" වැඩසටහනට අදාළ පළාත් මට්ටමේ සමුපකාර කොමසාරිස්වරුන් සහ පළාත් සමුපකාර අමාත්‍යාංශ ලේකම්වරුන් දැනුවත් කිරීමේ මූලික වැඩසටහන

"ஆயிரம் உற்பத்திக் கூட்டுறவுகள்" நிகழ்ச்சித்திட்டம் குறித்து கூட்டுறவு ஆணையாளர்கள் மற்றும் மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான ஆரம்ப நிகழ்ச்சித்திட்டம்.

The preliminary orientation programme for Provincial Cooperative Commissioners and Provincial Ministry Secretaries under the “1000 Producer Cooperative programme”



20. ශ්‍රී ලංකාව සහ තුර්කි ජනරජය අතර ආර්ථික සහ තාක්ෂණික සහයෝගීතාව සඳහා වූ ඒකාබද්ධ කමිටුවේ ( JCETC ) තුන්වන සැසිවාරය.

இலங்கைக்கும் துருக்கி குடியரசுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான கூட்டுக் குழுவின் (JCETC) மூன்றாவது அமர்வு

The third session of JCETC on economic and technical cooperation between Sri Lanka and Türkiye.



මහනුවර, පොල්ගොල්ල ජාතික සමූපකාර සංවර්ධන ආයතනයේ නිරීක්ෂණ චාරිකාව.

கண்டி பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்திற்கு கண்காணிப்பு விஜயம்.

Visit to the National Institute of Co-operative Development



ශ්‍රී ලංකාවේ දකුණු කොරියානු තානාපතිනි මියොන් ලී (Miyon Lee) මහත්මිය සමඟ හමුව

இலங்கைக்கான இந்தோனேசிய தூதுவர் திருமதி டெவி குஸ்ரினா டோபிங்குடன் சந்திப்பு

Courtesy call by Her Excellency Miyon Lee, Ambassador of South Korean for Sri Lanka.



ශ්‍රී ලංකාවේ ඉන්දුනීසියානු තානාපතිනි Dewi Gustina Tobing මහත්මිය සමඟ හමුව.

இலங்கைக்கான இந்தோனேசிய தூதுவர் திருமதி டெவி குஸ்ரினா டோபிங்குடன் சந்திப்பு

Courtesy call by Her Excellency Dewi Gustina Tobing, Ambassador of the Indonesia for Sri Lanka.



යාපනය චාවකච්චේරි විශේෂිත ආර්ථික මධ්‍යස්ථානය නිරීක්ෂණය

யாழ்ப்பாணம் சாவகச்சேரி விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கு விஜயம் செய்தல்

Visit to the Chavakachcheri Dedicated Economic Centre in Jaffna



උතුරු පළාත් සමුපකාර සංවර්ධන බැංකුවේ ක්ෂේත්‍ර අධීක්ෂණය.

வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் கள மேற்பார்வை

Field visit to the Northern Province Cooperative Development Bank.



වවුනියාව විශේෂිත ආර්ථික මධ්‍යස්ථානය නිරීක්ෂණය.

வவுனியா விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கு ஆய்வு விஜயம்

Visit to the Vavuniya Dedicated Economic Center.



කිලිනොච්චිය, විශ්වමඩු සහල් සැකසුම් මධ්‍යස්ථානය නිරීක්ෂණය.

கிளிநொச்சி விஸ்வமடு அரிசி பதனிடும் நிலையத்திற்கு ஆய்வு விஜயம்.

Visit to the Vishwamadu rice processing center in the Kilinochchi.



සීමාසහිත මැදිරිගිරිය විවිධ සේවා සමූපකාර සමිතිය විසින් ඉදි කරන බහුකාර්ය ගොඩනැගිල්ල සඳහා මුල් ගල් තැබීමේ උත්සවය.

மந்திரிகிரிய பல் சேவைக் கூட்டுறவு சங்கத்தால் கட்டப்படவுள்ள பல்நோக்கு கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா.

Foundation stone laying ceremony for the multipurpose building to be constructed by the Mandirigiriya Multi-Purpose Cooperative Society



ජාතික සතොස'' වෙළඳ සන්නාමයෙන්
වෙළෙඳපළ වෙත සහල් නිකුත් කිරීමේ
සමාරම්භක අවස්ථාව.

"தேசிய சதோச" வர்த்தக நாமத்தின் கீழ் அரிசி
வெளியீட்டின் அறிமுகம்.

The inaugural launch of rice under the
"National Sathosa" brand to the market.



ශ්‍රී ලංකාවේ දකුණු අප්‍රිකානු ජනරජයේ
මහකොමසාරිස් Sandile Edwin Schalk
මහතා සමඟ හමුව

இலங்கைக்கான தென்னாபிரிக்க குடியரசின்
உயர் ஸ்தானிகர் திரு. சாண்டில் எட்வின்
ஷால்க் உடனான சந்திப்பு

Courtesy callby His Excellency Sandile
Edwin Schalk, High Commissioner of the
Republic of South Africa for Sri Lanka



බිත්තර නිෂ්පාදකයින්ගේ සංගමය සහ බිත්තර
තොග වෙළෙඳ සංගමය සමඟ සාකච්ඡාවක්

முட்டை உற்பத்தியாளர் சங்கம் மற்றும்
முட்டை மொத்த விற்பனையாளர் சங்கத்துடன்
கலந்துரையாடல்

Discussion with the Egg suppliers'
Association and the Egg Wholesale
Traders' Association



වවුනියාව විශේෂිත ආර්ථික මධ්‍යස්ථානයේ
ව්‍යාපාරික කටයුතු ආරම්භ කිරීම.

வவுனியா விசேட பொருளாதார மத்திய
நிலையத்தில் வணிக நடவடிக்கைகளை
ஆரம்பித்தல்

Commencement of commercial operations
at the Vavuniya Dedicated
Economic Centre.




පොල්ගොල්ල ජාතික සමුපකාර සංවර්ධන ආයතනයේදී (NICD) පැවති නියෙලෙනි 03 වන ගෝලීය සමුළුව

பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் (NICD) நடைபெற்ற . நியலெனி 3 ஆவது உலகளாவிய மாநாடு

Third Nyeleni Global Summit in NICD



ඉන්දියාවේ ජාතික කෘෂිකාර්මික සමුපකාර අලෙවිකරණ සම්මේලනයේ ( NAFED ) කළමණාකාර අධ්‍යක්ෂ ශ්‍රී දීපක් අගර්වාල් මහතා සමඟ හමුව.

இந்திய தேசிய விவசாய கூட்டுறவு சந்தைப்படுத்தல் சம்மேளனத்தின் (NAFED) முகாமைப் பணிப்பாளர் திரு. தீபக் அகர்வாலுடன் சந்திப்பு.

Meeting with Mr. Deepak Agarwal, Managing Director of the National Agricultural Cooperative Marketing Federation of India (NAFED)



ඉන්දියාවේ ආහාර සැකසුම් කර්මාන්ත අමාත්‍ය ශ්‍රී චිරාග් පස්වාන් මහතා සමගින් සාකච්ඡාව

இந்திய உணவு பதனிடல் கைத்தொழில் அமைச்சர் ஸ்ரீ சிராக் பஸ்வானுடனான கலந்துரையாடல்

Meeting with Mr. Chirag Paswan, Hon. Minister of Food Processing Industries of India



ඉන්දියාවේ ජාතික සමූපකාර අපනයන සමාගමේ ( NCEL ) කළමණාකාර අධ්‍යක්ෂ Shri UnupomKausikමහතා සමඟ හමුව.

இந்திய தேசிய கூட்டுறவு ஏற்றுமதி நிறுவனத்தின் (NCEL) முகாமைப் பணிப்பாளர் ஸ்ரீ உனுபோம் கௌசிக் உடனான சந்திப்பு.

Meeting with Mr.Shri UnupomKausik, Managing Director of the National Cooperative Export
Limited (NCEL), India



දිවයිනේ විශාලතම ලංකා සතොස වෙළෙඳ සංකීර්ණය "ලංකා සතොස exclusive" බදුල්ල නව මෙගා ශාඛාව විවෘත කිරීම.

நாட்டின் மிகப்பெரிய லங்கா சதோச வர்த்தகத் தொகுதியான, "லங்கா சதோச எக்ஸ்க்ளூசிவ்".இன் புதிய மெகா கிளையை பதுளையில் திறத்தல்,

Opening of Sri Lanka’s largest Lanka Sathosa Super Market, “Lanka Sathosa Exclusive”, the newly established mega branch in Badulla



නවදිල්ලියේ නේවාසිකව සිටින ශ්‍රී ලංකාවේ ස්විඩන් තානාපති Jan Thesleffමහත්මා සමඟ හමුව.

புதுடில்லியில் வசிக்கும் இலங்கைக்கான ஸ்வீடன் தூதர் ஜான் தெஸ்லெஃப் உடனான சந்திப்பு.

courtesy call by His Excellency Jan Thesleff, Ambassador of Sweden to Sri Lanka based in New Dilhi



යාපනය විශේෂිත ආර්ථික මධ්‍යස්ථානයේ" ව්‍යාපාරික කටයුතු ආරම්භ කිරීම

"யாழ்ப்பாண விசேட பொருளாதார மத்திய நிலையத்தில்" வணிக நடவடிக்கைகள் ஆரம்பித்தல்.

Commencement of Business Activities at the Jaffna Dedicated Economic Centre



අමෙරිකානු එක්සත් ජනපදයේ ආයෝජකයින් සමඟින් පැවති සාකච්ඡාව.

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடல்

The meeting held with a Group of Investors from the United States of America



ලෝක වෙළෙඳ සංවිධානයේ (WTO) ශ්‍රී ලංකාවේ 5 වන වෙළෙඳ ප්‍රතිපත්ති සමාලෝචනය (TPR)

உலக வர்த்தக அமைப்பில் (WTO) இலங்கையின் 5 ஆவது வர்த்தகக் கொள்கை மீளாய்வு (TPR)

Sri Lanka’s 5th Trade Policy Review (TPR) at the World Trade Organization (WTO) Geneva.




16 වන එක්සත් ජාතීන්ගේ වෙළෙඳ හා සංවර්ධනය පිළිබඳ සමුළුව (UNCTAD)

வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி குறித்த 16 ஆவது ஐக்கிய நாடுகளின் மாநாடு (UNCTAD)

16th United Nations Conference on Trade and Development (UNCTAD).



ශ්‍රී ලංකා - ස්විට්සර්ලන්ත වාණිජ මණ්ඩලය ජිනීවාහිදී ආරම්භ කිරීම.

இலங்கை - சுவிஸ் வர்த்தக சம்மேளனத்தை ஜெனீவாவில் ஆரம்பிக்கும் நிகழ்வு

The Launching Ceremony of the Sri Lanka–Switzerland Chamber of Commerce held in Geneva.



ලෝක වෙළඳ සංවිධානයේ (WTO) හි අධ්‍යක්ෂ ජනරාල් ආචාර්ය Ngozi Okonjo-Iwealaමහත්මිය සමඟින් පැවති හමුව.

உலக வர்த்தக அமைப்பின் (WTO) பணிப்பாளர் நாயகம் கலாநிதி.. என்கோசி ஒகோன்ஜோ-இவெலாவுடனான சந்திப்பு

The meeting held with Dr. Ngozi Okonjo-Iweala, Director-General of the World Trade Organization (WTO).



G77 සහ චීන, අමාත්‍ය රැස්වීම

G77 மற்றும் சீனா, அமைச்சர்கள் கூட்டம்

G77 and China, Ministerial Meeting



ශ්‍රී ලංකා ත්‍රිපෝෂ සමාගම් පරිශ්‍රයේ නිරීක්ෂණ චාරිකාව.

இலங்கை திரிபோஷா நிறுவன வளாகத்திற்கான கண்காணிப்பு விஜயம்

Visit to the premises of Sri Lanka Triposha Limited.



විශේෂිත ආර්ථික මධ්‍යස්ථාන කළමනාකරණය කිරීම සඳහා රජය විසින් පිහිටුවන ලද National Agri Market Services Ltd හි අධ්‍යක්ෂ මණ්ඩලය සමඟින් පැවැත්වූ පළමු සාකාච්ඡාව.

விசேட பொருளாதார மத்திய நிலையங்களை நிர்வகிக்க அரசாங்கத்தால் நிறுவப்பட்ட தேசிய கமநல சந்தை சேவைகள் லிமிடெட்டின் பணிப்பாளர் சபையுடன் நடைபெற்ற முதல் கலந்துரையாடல்.

The meeting held with the Board of Directors of National Agri Market Services Ltd, established by the government to manage specialized economic centers.



මහපොළ ශිෂ්‍යාධාර දීමනා සම්බන්ධයෙන් අන්තර් විශ්වවිද්‍යාලයීය ශිෂ්‍ය බලමණ්ඩලය සමඟින් පැවති සාකච්ඡාව.

மஹபொல புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் தொடர்பாக பல்கலைக்கழகங்களுக்கிடையான மாணவர் ஒன்றியத்துடன் நடைபெற்ற கலந்துரையாடல்.

The meeting with the Inter-University Student Fedaration on matters related to "Mahapola" scholarship grants.

වෙළෙඳ, වාණිජ, ආහාර සුරක්ෂිතතා සහ සමූපකාර සංවර්ධන අමාත්‍යාංශය, අංක 492, ආර්.ඒ. ද මැල් මාවත , කොළඹ 03.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு, மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, இல 492, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.

Ministry of Trade, Commerce, Food Security and Co-operative Development, No 492, R.A. De Mel Mawatha, Colombo 03.